திருக்குறள்

ஓர் கண்ணோட்டம்

M. கிறிஸ்டோபர்

திருக்குறள்

ஓர் கண்ணோட்டம்

திருக்குறள்

ஓர் கண்ணோட்டம்

M. Christopher,

Benaiah, Kallukatty, Kuzhithurai - 629 163,

K.K. Dist., Tamil Nadu, India.

Ph. : 04651 - 260404.

First Edition : **2010**

Copy Right Reserved : **GEMS, Kuzhithurai.**

typesetting & Printing : ***South India Press, Marthandam.***

பொருளடக்கம்

1. வாழ்த்துரை	....	iv
2. முகவுரை	....	vi
3. திருக்குறள் சாரம்	....	1
4. திருக்குறள் சிறப்பு	....	2
5. திருக்குறள் கூறும் அறம்	....	7
6. திருக்குறள் கூறும் அறத்தின் வரலாறு	....	10
7. அறத்தின் நற்செய்தி இந்தியாவுக்கு	....	12
8. திருக்குறளின் உட்கிடை கிறிஸ்தவமே	....	17

பாகம் 1. அறத்துப்பால்

9. பகுதி I பாயிரம்	....	21
10. பகுதி II இல்லறவியல்	....	24
11. பகுதி III துறவறவியல்	....	29
12. பகுதி IV ஊழியல்	....	34

பாகம் 2. பொருட்பால்

13. திருக்குறளில் சான்றோர்	....	34
14. திருக்குறளில் சால்பு	....	38
15. திருக்குறளில் சான்றாண்மை	....	41
16. பொருட்பால் விளக்கம்	....	43
17. பகுதி I அரசியல்	....	45
18. பகுதி II அமைச்சியல்	....	51
19. பகுதி III அரணியல்	....	54
20. பகுதி IV கூழியல்	....	54
21. பகுதி V படையியல்	....	55
22. பகுதி VI நட்பியல்	....	55
23. பகுதி VII குடியியல்	....	59

பாகம் 3. இன்பத்துப்பால்

24. இன்பத்துப்பால் விளக்கம்	....	62
25. பகுதி I களவியல்	....	65
26. பகுதி II கற்பியல்	....	68
27. திருக்குறளின் ஆதியும் அந்தமும்	....	75
28. 'கூடி முயங்கப்பெறுதல்' விவிலியத்தில்	....	79

Ph. No : (04651) 252756
252856

PRAISE THE LORD

"For the equipping of the saints for the work of the ministry, for the edifying of the body of Christ." (Eph. 4 : 12)

FULL GOSPEL PENTECOSTAL CHURCH

H.O : KADAMALAIKUNTU

P.B. NO. 3, MEKKAMANDAPAM - 629 166, KANYAKUMARI DIST, TAMIL NADU, INDIA.

Estd.. 1933 Reg. S. No. 64/95

President: Pr. J. Vinil Sathish

வாழ்த்துரை

"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" (1 தெச. 5. 21)

பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் இப்புத்தகத்தை வாசிக்கும் அனைவருக்கும் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக! தேவ ஆவி தாமே மெய்ப்பொருளை அறிந்துகொள்ள யாவருக்கும் அருள்புரிவாராக!

நண்பர்களே! "திருக்குறள் ஓர் கண்ணோட்டம்" என்ற இப்புத்தகத்தை நான் வாசித்தபோது, திருவள்ளுவர் இயற்றிய குறட்பாக்களுக்கு 'திரு' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டதும்; திருக்குறளை 'வான்மறை' என்றும் 'உலகப்பொதுமறை' என்றும் அறிஞர்கள் கூறுவதும் சாலப்பொருத்தமே என்பதை உணர்ந்தேன்.

திருக்குறளின் மும்பெரும் பிரிவுகளான அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்பவைகளில் அறத்துப்பாலில் - தேவன் தமது ஒரேபேறான குமாரனை இவ்வுலகுக்கு ஈந்து சிலுவை மூலம் ஏற்படுத்திய இரட்சிப்பின் வழியாகிய ஒரே அறவழி அழுகுற விளக்கப்பட்டுள்ளதையும், பொருட்பாலில் - தேவனுடைய அறவழியில் வந்த மானிடர்க்கு அவர் தருகின்ற பூமிக்குரிய ஆசீர்வாதங்களாகிய பொருட்பொருளும், ஆவிக்குரிய ஆசீர் வாதங்களாகிய அருட்பொருளும் தெளிவுற சித்தரிக்கப்பட்டுள்ளதையும், இன்பத்துப்பாலில் இதுகாறும் அறிஞர்கள் கொடுத்த 'கணவன் மனைவி உறவு' விளக்கங்களுக்கு மேலாகஅது "கிறிஸ்து சபை உறவாக்கும்" என்ற திருக்குறளின் மெய் நோக்கம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதையும், வாசித்தறிந்தபோது உள்ளம் நெகிழ்ந்துபோனேன்.

ஆம், நம்மைப் படைத்த தேவனுடன் "கூடி முயங்கப்பெறுதல்" என்ற அந்த நித்திய மகிழ்ச்சியின் பரலோக அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டும் திருக்குறள்தேவன் மானிடர்க்கு அருளின பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையை இரத்தினச் சுருக்கமாய் விளக்கும் ஓர் ஒப்பற்ற "கிறிஸ்தவ இலக்கியம்" என்பது மிகத் தெளிவு.

எனவே, கிறிஸ்தவர்கள் அனைவரும் இந்த நூலை வாசித்தறிய வேண்டுமென்றும், வான்புகள் வள்ளுவர் மேல் நன்மதிப்பு கொண்டுள்ள நமது நாட்டின் நண்பர்கள் அனைவருக்கும் இந்த நூலை பரிசாக வழங்கவேண்டுமென்றும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூலின் ஆசிரியர் மதிப்பிற்குரிய திரு. கிறிஸ்டோபர் அவர்கள் என் வாழ்வை உருவாக்க தேவன் பயன்படுத்தின ஒருசில முக்கிய சிற்பிகளுள் ஒருவர் ஆவார். தேவன் அவருக்கு அருளிச்செய்துள்ள சிறப்பான அறிவுக்காக,, வெளிப்பாடுகளுக்காக தேவனைத் துதிக்கிறேன்! பரிசுத்தவான்களின் பண்பு (பரிசுத்த வேதாகமம்) / சான்றோர் பண்பு (திருக்குறள்) நூலாசிரியரின் வாழ்விலும் ஒளியாய் வீசவதைக் கண்டு மகிழ்கிறேன்!! தேவன் தாமே தமது மகிமையுள்ள திட்டம் தமது தாசரின் வாழ்விலும், தேவ சேவையிலும் வெற்றியாய் நிறைவேற பயன்படுத்துவாராக என்று வாழ்த்துகிறேன்!!!

அன்புடன்,

I. வினில் சதீஷ்

முகவுரை

தேவாதி தேவன் தமது அளவற்ற கிருபையால், திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், ஆகிய மூன்று பகுதிகளுக்கும் உரை எழுதிமுடிக்கச் செய்தார். "திருக்குறள், அடிப்படை கிறிஸ்தவமே" என்ற விளக்கஉரையை முடித்து புத்தக வடிவில் ஆக்கும் போது ஒரே அடியாய் வாசிப்பதற்கு சற்று பெரிதாக அமைகின்றது.

ஆனால் நூல் முழுவதிலும் கூறப்படும் கருத்து, மனுக்குலத்தை சீரும் சிறப்புமாக்கி இம்மையில் இறை இன்பம் பகர்ந்து, மறுமையில் பேரின்ப வீட்டில் கூட்டிச் செல்லும் வகையில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய அம்சங்களை கொண்டதாய் விளங்குகிறது. எனவே திருக்குறளின் ஆரம்பம் முதல் கடைசி வரை அடங்கியுள்ள சாராம்சத்தை ஒரே அடியாய் சுவைத்து ருசிப்பதற்கான வழிகளை ஆராய்ந்து பார்த்தபோது கிடைக்கப்பெற்ற சிந்தையே இம்முயற்சிக்கு காரணம்.

1330 குறட்பாக்களை திருவள்ளுவர் 133 அதிகாரங்களுக்குள் அடக்கியுள்ளார். ஒவ்வொரு அதிகாரங்களில் கூறப்படும் கருத்துக்களின் சுருக்கம் விளக்க உரையில் தனித் தனியாய் தரப்பட்டுள்ளன. அவைகளை ஒன்று திரட்டி தொடர்ச்சியாய் கூறுவதே இந்நூல்.

திருக்குறளின் குறட்பாக்களை ஒவ்வொன்றாய் படிக்கும் முன் நூல் முழுவதிலும் உள்ள சாராம்சத்தை இரத்தினச் சுருக்கமாய் அறிந்துக்கொள்ள விரும்புபவர்களுக்கு இந்நூல் உதவியாயிருக்கு மென்று நம்புகிறேன்.

ஆசிரியர்.

அறம், பொருள், இன்பம், வீடு



திருக்குறளின் சாரம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன மூலம் திருக்குறளின் மையக்கருத்து விளக்கப்படுகிறது. வீடு எனப்படுவது இறைவனின் பேரின்ப வீடாகும். பொருள் எனப்படுவது அவர் உருவாக்கிய மனுக்குலம் ஆகும்.

நீத்தாராகிய இறைவன், பேரின்ப வீட்டின் சிறப்புகள் அனைத்தையும் துறந்து, ஐந்தவித்தானாக இந்த பூவுலகில் வந்து, தம் ஐம்புலன்களையும் அவித்து, மனுக்குலத்துக்கு ஈட்டித்தந்ததே அறமாகிய இரட்சிப்பு. அவர் தம் பொருளாகிய மனுக்குலத்துக்குத் தேவையான அருட்பொருளையும், பொருட்பொருளையும் கூட ஈந்தளிக்கிறார். இவ்வாறு மனுக்குலம் அறநெறியில் வாழ வழி காட்டியுள்ளார்.

இறைவனே பெற்றுத் தந்த அறமாகிய ஒழுக்கநெறியில் வாழ்பவர்கள் இம்மையில் இறைவனோடு பேரின்ப காதல் வாழ்கை அனுபவிப்பார்கள். இவர்களை திருச்சபை அல்லது மணவாட்டி சபை என்று விவிலியமும் சான்றோர் என்று திருக்குறளும் கூறுகிறது. இவர்கள், மறுமையில் இறைவனோடு 'கூடி முயங்கப்பெறும்' சிலாக்கியம் பெற்று நித்திய பேரின்ப வீட்டில் வாழ்ந்து என்றென்றுமாய் மகிழ்ந்திருப்பார்கள். இறைவன் பெற்றுத் தந்த அறமாகிய இரட்சிப்பை இம்மைவாழ்வில் ஏற்றுக்கொள்ளாதவர்கள், மறுமையில் இருளாகிய எரிநரகத்தில் சென்றுவிடுவார்கள்.

அதாவது இறைவன் பெற்றுத் தந்த அறம் ஆகிய இரட்சிப்பை ஏற்றுக்கொண்ட பொருள் ஆகிய மனுக்குலம் இம்மையில் இறை (காதல்) இன்பம் பெற்று வாழ்ந்து, மறுமையில் பேரின்ப வீடு சென்றடைவார்கள்.

இதுவே திருக்குறளில் கூறப்படும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய அம்சங்களின் சாரம்.

திருக்குறள் சிறப்பு

உலகின் எப்பகுதியில் வசிப்பவரும், எந்த இனத்தவரும், எந்த மதத்தவரும் எக்காலத்திலும் கடைபிடிக்க வேண்டிய கருத்துக்களை உள்ளடக்கி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட தலைசிறந்த நூலே திருக்குறள்.

சிறப்பு

திருவள்ளுவர் மிகக்குறைந்த சொற்களில் கடல் போன்ற ஆழம் கொண்ட சிந்தனைக் கருத்துக்களை இலகுவாக அடக்கியிருப்பது திருக்குறளின் பெரும் சிறப்பென்று அறிஞர்கள் பலர் திருக்குறளுக்குப் புகழாரம் சூட்டியிருக் கிறார்கள்.

உலகின் மிகப்பெரிய புத்தகச் சாலையாகக் கருதப்படும் லண்டன் புத்தகச் சாலையில் (Golden Treasure of International Literature) மிகச்சிறந்த புத்தகங்கள் என்ற வரிசையில் சிறந்த இடத்தைப் பிடித்திருப்பது திருக்குறளின் தனிச் சிறப்புக்குச் சான்றாகும்.

அமைப்பு

இது (1) அறத்துப்பால், (2) பொருட்பால், (3) இன்பத்துப் பால் என்று மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். மூன்று பகுதிகளில் 133 அதிகாரங்களும், ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறட்பாக்களுடன் மொத்தம் 1330 குறட்பாக்களும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு குறட்பாவும் ஏழு வார்த்தைகளைக் கொண்ட ஈரடிகளால் ஆனதாகும். அதாவது முதல் வரிசையில் நான்கு வார்த்தைகளும் இரண்டாவது வரியில் மூன்று வார்த்தைகளும் காணப்படும். இத்தகைய குறுகிய ஈரடிகளில் இது போன்ற ஒரு நூல் இதுகாறும் எவரும் தந்ததில்லை என்றே கூறலாம்.

உள் அமைப்பு

அறத்துப்பால் : முதற்பகுதியான அறத்துப்பால் 38 அதிகாரங்களைக் கொண்டதாகும். அவற்றுள் முதல் மூன்று அதிகாரங்கள் கடவுள் வாழ்த்துப் பகுதியாக அமைந்திருக்கிறது. நான்காவது அதிகாரம் நூலின் பொருளை விளக்குகிறது.

இவ்வாறு முதல் நான்கு அதிகாரங்களும் சேர்ந்து பாயிரம் என்னும் முகவுரையாக அமைந்திருக்கிறது. பாயிரத்தைத் தொடர்ந்து 20 அதிகாரங்கள் குடும்ப வாழ்க்கையை விளக்கும் இல்லறவியலும் அடுத்த 14 அதிகாரங்கள் இல்லற வாழ்க்கையை விட்டு துறவறத்தை மேற்கொள்ளும் துறவறவியலும் ஆகும். அதாவது இல்லற வாழ்க்கையிலானாலும் துறவற வாழ்க்கை யிலானாலும் ஒருவன் பரலோக வாழ்விற்கு உகந்தவனாய் அறநெறியோடு இவ்வுலகத்தில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அறத்துப்பாலாகிய முதற்பகுதி காண்பிக்கிறது.

பொருட்பால் : பொருட்பாலுக்கு 70 அதிகாரங்கள் உண்டு. அவற்றுள் 25 அதிகாரங்கள் அரசியல் குறித்தும் 32 அதிகாரங்கள் ஆட்சிமுறை குறித்தும் 13 அதிகாரங்கள் மேற்குறிப்பிட்டவைகளோடு சேர்ந்தவையும் ஆகும். இராஜாக்களும் குடிமக்களும் போதிக்கப்படுவதாகத் தோற்றமளித்தாலும் உலகில் எந்தெந்த நிலைகளில் செயல்படுகிறவர்களுக்கும் அறநெறியில் வாழ்வதற்கு ஊக்கமளிக்கும் கருத்துக்கள் பொருட்பாலில் தரப்பட்டுள்ளன.

இன்பத்துப்பால் : மூன்றாம் பகுதியான இன்பத்துப்பாலில் இறைவன் ஆன்மாவைக் கவர்வது குறித்த களவியல் 7 அதிகாரங்களும், இறைவனோடு உறையும் ஆன்மா கற்பு காக்கும் நிலை குறித்த கற்பியல் 18 அதிகாரங்களும் ஆகும். இது உரையாசிரியர்கள் காலத்திற்கு முன்பே இன்பத்துப் பால் என்றே அழைக்கப்பட்டது. இன்பத்துப் பாலுக்குள் மோட்சத்தைக் குறித்த பேரின்பப் பொருளும் உண்டு. இக்கருத்தைத் திருக்குறள் உரை ஏட்டுச் சுவடியிலும் பார்க்க முடியும்.

இன்பத்துப்பாலில் உள்ள களவியலில் இறைவன் ஆன்மாவைக் (களவாக) கவர்ச்சியால்க் கொள்ளும் திறனும் கற்பியலில் பேரின்பத்தை நுகர்ந்து ஆன்மா அந்நிலையில் கற்பு காக்கும் நிலையும் விளக்கப்படுகிறது.

உலகின்பக் காதலில் காதலன், காதலியாகிய ஆண் பெண் ஆகிய இருவர் விளங்குகின்றனர். இறை இன்பக் காதலில் காதலன் யார் காதலி யார் என்பதில் அடிப்படை வேற்றுமை உண்டு. கிறிஸ்தவத்தில், திருச்சபை மணவாட்டியாகவும் (நாயகியாகவும்) கிறிஸ்துவை மணவாளனாகவும் (நாயகனா கவும்) விளக்கப்படுகிறது.

ஆக்கியோன்

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் என்பதில் எவருக்குமே கருத்து வேறுபாடில்லை. ஆனால் அவருடைய உண்மையான பெயர் அவருடைய பெற்றோரின் சரியான குறிப்புகள் உண்டு என்பதிற்கில்லை. எனவே அவைகளைக் குறித்து பல மாறுபட்ட கருத்துக்கள் உண்டு.

தமிழ் அறிஞனாகிய திருவள்ளுவர் ஒரு திராவிடர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு சாதிக் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்ட அவரை ஒரு கீழ்ச் சாதிப் பெண்ணுக்கும், மேல்சாதி ஆணுக்கும் பிறந்த வராகக் கூறியிருப்பவர்களும் உண்டு.

காலம்

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றிய காலத்தைப் பற்றித் திட்டவட்டமாகக் கூறுவது கடினம். ஆனால் திருவள்ளுவர் காலத்தை குறித்து அறிஞர்கள் பலர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் டாக்டர் மு. தெய்வ நாயகம் அவர்கள் வெளியிட்டுள்ள ‘வள்ளுவர் வாழ்ந்த காலம்’ ‘திருக்குறள் தோன்றிய காலநிலை’ ஆகிய ஆராய்ச்சிக் குறிப்புகளின் அடிப்படையில் திருக்குறளின் காலம் கிபி. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் கிபி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலமாயிருக்க லாமென்று கருதப்படுகிறது.

உரையாசிரியர்கள்

திருக்குறளுக்கு அநேக உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளார்கள். அவர்களுள் சிலர்: தருமர், மணக்குடவர், தாமந்தர், நச்சர், பரிமேலழகர், திருமலயர், கவிப்பெருமாள், பரிதி, காலிங்கர், பரிப்பெருமாள், தேவநேயப் பாவணர், க. சுப்பிரமணிய பிள்ளை, நாகை சு. தண்டபாணிப்பிள்ளை, சாமி சிதம்பரனார், கவிராஜ பண்டிதர், வை.மு. கோபாலகிருஷண், பட்டாச்சாரியார், மயிலை சிவமுத்து, புலவர் குழந்தை, டாக்டர் மு. வரதராசனார் முதலானவராவர்.

திருவள்ளுவர் சமயம்

திருக்குறளிலிருந்து திருவள்ளுவர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதை கண்டுகொள்ள முடியாது என்பதே

பெரும்பாலான உரை ஆசிரியர்களின் கருத்து. திருக்குறள் ஒரு சிறந்த நூல் ஆதலால் ஒவ்வொரு மதத்தவரும் தங்கள் தங்கள் மதத்துக்கு உரிமைப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தும் உண்டு.

திருவள்ளுவர் சமணரா?

திருவள்ளுவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்று ஒரு சாரார் கூறுவது உண்டு. அவர்கள் திருவள்ளுவர் கூறும் மறுபிறவி, எழுபிறப்பு, பிறவிப் பெருங்கடல், பிறப்பறுக்கல், இருள் போன்ற சொற்களை மேற்கோள் காட்டுகிறார்கள். ஆனால் திருக்குறளின் கருத்துக்கள் சமண மதத்திற்கு முற்றிலும் முரண்பட்டவை எனக் காணமுடிகிறது. இது குறித்து, டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்கள் வெளியிட்டுள்ள எழு பிறப்பு, திருவள்ளுவர் காட்டும் மறுபிறவி, திருவள்ளுவர் சமணரா? ஆகிய ஆராய்ச்சிக் குறிப்புகளில் திருவள்ளுவர் சமணர் அல்லர் என்று தெளிவாக விளக்கப்படுகிறது. மட்டுமல்ல திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் பகுதிகளில் பார்க்கும் போது திருவள்ளுவர் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு மாறான கடவுள் நம்பிக்கை உடையவர் என்றும் இம்மைக்குப்பின் மறுமையின் நித்திய வாழ்வு உண்டென்பதை விசுவாசிப்பவர் என்றும் கண்டுக்கொள்ளலாம்.

திருவள்ளுவர் சைவ சமயத்தவரா?

திருவள்ளுவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்று கூறுவாரும் உண்டு. ஆனால் சைவ சமயத்தின் துவக்கம் திருக்குறளுக்குப் பின் என்பதே வரலாற்றுண்மை. கடவுளின் அவதாரக் கோட்பாடு, மூவொருமைக் கோட்பாடு, பலிநிறுத்துக் கோட்பாடு போன்ற அனைத்தும் தோமாவின் உபதேசங்களின் அடிப்படையில் இந்தியாவில் முதன்முதலாக திருக்குறளில் உரைக்கப்பட்டு, பின்பு பக்தி இயக்கங்களும், அதைத் தொடர்ந்து சைவ வைணவ சமயங்களும் இந்தியாவில் தோன்றின. டாக்டர். மு. தெய்வநாயகம் அவர்கள் வெளியிட்டுள்ள திருவள்ளுவர் இந்து சமயத்தவரா என்ற ஆராய்ச்சிக் குறிப்பில் இதுபற்றிக் காணலாம்.

திருவள்ளுவர் வாழ்த்தும் கடவுள் யார்?

திருவள்ளுவர் தமது நூலின் முதல்பகுதியாகிய பாயிரத்தில் (முகவுரையில்) முதல் மூன்று அதிகாரங்களில் கடவுளை வாழ்த்துகிறார். அதிலிருந்து வள்ளுவர் வாழ்த்தும் கடவுளின் குணாதிசயங்களைக் குறித்து நன்கு அறிந்து கொள்ளலாம். ஆனால் பெருவாரியான உரையாசிரியர்கள் திருக்குறளின் முதல் பகுதியாகிய பாயிரத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லையென்று தாங்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள். இந்நிலையில் சிலர் முதல் பகுதியாகிய பாயிரம் பிற்சேற்கை என்றும், இதை திருவள்ளுவர் எழுதியிருக்க முடியாது என்றும் கூட எழுதியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் திருவள்ளுவர் வாழ்த்தும் கடவுளை அவர்கள் அறிந்து கொள்ளாததேயாகும்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்துப் பகுதியான 1. கடவுள் வாழ்த்து, 2. வான் சிறப்பு, 3. நீத்தார் பெருமை ஆகிய மூன்று அதிகாரங்களையும் சரியான கோணத்தில் நோக்கினால் கடவுளுக்கு வள்ளுவர் கூறும் காரணப் பெயர்களிலிருந்து வள்ளுவர் வாழ்த்தும் கடவுளின் குணாதிசயங்களை நன்கு அறிந்துக் கொள்ள முடியும். (பாயிரத்தில் மூவொருமை பக்கம் காண்க).

சிறப்பு பெயர்கள்

அறிஞர்கள் திருக்குறளுக்குப் பல சிறப்பு பெயர் கொடுத்து அழைக்கிறார்கள். அவையாவன, தமிழ் வேதம், முப்பானூல், தெய்வ நூல், பொய்யாமொழி, தமிழ் மறை, உலகப் பொது மறை முதலானவை ஆகும்.

திருக்குறள் என்ற பெயர்

திருவள்ளுவர் புனித தோமா கொண்டுவந்த நற்செய்திகள் யாவும் அறிந்திருந்த போதிலும். பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு கடவுளின் குரல் கேட்டுதான் இந்நூலில் கூறப்பட்டுள்ள உபதேசங்கள் அனைத்தும் எழுதியிருக்க முடியும் என்பதனால் கடவுளின் குரல் என்ற பொருளில் 'திருக்குரல்' என்ற பெயர் இதன் முதற்பெயராக இருந்திருக்கலாம் என்று கொள்வதற்கும் இடமுண்டு.

திருக்குறள் கூறும் அறம்

திருக்குறள் ஒரு அறநூல் என்று எல்லாராலும் கூறப்படுகிறது. அறம் என்றால் தர்மம் அல்லது நன்மை செய்வது என்று பொதுவாக கூறுவோரும் உண்டு. ஆனால் அறம் என்ற சொல் திருக்குறள் முழுவதிலும் கூறப்பட்டிருப்பதை நுட்பமாக கவனித்தால் மட்டுமே அதன் உண்மைக் கருத்து புலப்படும்.

'அறவாழி அந்தணன்'

திருவள்ளுவர் இறைவனை "அறவாழி அந்தணன்" என்று குறிப்பிடுகிறார் **(கு 18 காண்க)** அதாவது அறத்தை ஆழி (கடல்) ஆக கொண்டிருக்கும் அந்தணன் (அழகிய தண் அருள் கொண்டவன்) என்பது பொருள். இதிலிருந்து அறம் என்பது இறைவனின் சிறந்த ஓர் அம்சம் அல்லது பண்பு என்று காண்கிறோம். இறைவனால் படைக்கப்பட்ட ஆதி மனிதனும் இச்சிறப்புடன் படைக்கப்பட்டவனே ஆவான். ஆனால் மனுக்குலம் அதை இழந்து விட்டது.

'இருள் சேர் இருவினை'

நித்திய வாழ்வுக்கு ஏற்ற அறமாகிய ஒழுக்கநெறியில் இருந்த மனுக்குலம் இருள் சேர் இருவினைகளில் சிக்கி, அதாவது இருளாகிய நரகத்தில் சேர்க்கும் இருவினைகளாகிய ஜென்மபாவம், கர்மபாவம் ஆகிய (மறவாழியில்) பாவக்கடலில் அமிழ்ந்து தத்தளித்தது. **(கு 5, 8, 10 காண்க)**

இறைவன் சேர்த்த பொருள்

மனுக்குலம் இழந்து போன அறமாகிய பொருளை மறுபடியும் இறைவனே பெற்றுத்தந்தார். அது பொய்தீர் ஒழுக்க நெறி என்று கூறப்படுகிறது. **(கு 6 காண்க).**

பொய் தீர் ஒழுக்க நெறி விளக்கம்

பொய்

பொய்ச்சொல்லியவன் யார் என்றால், பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய பிசாசு என்று விவிலியத்தில் பார்க்கிறோம்.

ஒழுக்கத்தை கெடுத்துவிட்டான்

பொய்யால் அவன் (பிசாசு) என்ன செய்தான் என்றால் நித்திய வாழ்வுக்கு ஏற்ற ஒழுக்கம் உடையவர்களாயிருந்த ஆதி மனிதனின் ஒழுக்கத்தை கெடுத்து விட்டான். எனவே தான் மனுக்குலம் "இருள் சேர் இரு வினைகள்" அதாவது நரகத்தில் சேர்க்கும் பாவங்களுக்குள் ஆகிவிட்டது.

பொய் தீர்

பொய் தீர் என்றால் பொய்யை தீர்த்து அதாவது பொய்யினால் ஏற்பட்ட தீங்கை தீர்த்து என்பது பொருள். தீங்கை தீர்த்தவர் யார் என்றால் ஐந்தவித்தானாகிய இறைவனே என்பது பதில்.

இறைவனின் இரட்சிப்பு

இறைவன் தீங்கை எப்படி தீர்த்தார் என்றால் **(கு *6* விளக்கம் காண்க)** இறைவன் தாமே இவ்வுலகத்தில் வந்து, பொறிவாயில், அதாவது பொறியாகிய கொலைக்கருவியில் (சிலுவையில்) தமது ஐம்புலன்களையும் பலியாக்கி, ஐந்த வித்தானாக மரித்து, அமிழ்ந்து போகும் நிலையில் இருந்த மனிதரை இரட்சித்து, தூக்கி எடுத்து அவர்களை மறுபடியும் ஒழுக்க நெறியில் நிறுத்தினார். அந்த ஒழுக்க நெறியில் நிற்பவர்கள் நீடுவாழ்வு அல்லது நித்திய ஜீவன் பெற்றுக் கொள்வார்கள். இச்செயலை இரட்சிப்பு என்று விவிலியமும் ஒழுக்க நெறி என்று திருக்குறளும் கூறுகின்றன. இந்நிலையை அடைவோர் மட்டுமே இறைவனின் அங்கீகரிப்புக்குரிய அறச்செயல்கள் இவ்வுலகத்தில் செய்ய முடியும்.

ஒழுக்க நெறியை பெற்றுக் கொண்டவர்கள்

ஒழுக்க நெறியை யார் பெற்றுக் கொண்டார்கள் என்றால், இறைவனின் நற்செய்தியை கேட்டு ஐந்தவித்தானாகிய இறைவனையும் அவர் தந்த இரட்சிப்பையும் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு, தன் பாவங்களுக்காக நாணி, மனம்திரும்பி இரண்டாம் பிறப்பு அடைந்து **(கு *502*)** தீய வழிகளை விட்டு ஒழுக்க நெறியில் வாழும் புது வாழ்கை செய்பவர்களே ஆகும்.

அவர்கள் ஐந்தவித்தானாகிய இறைவனுக்கு சான்றாய் விளங்கும் சான்றோர் எனப்படுவார்கள். இப்படிபட்டவர்கள் செல்லும் வழி அறவழி எனப்படுகிறது. அவர்கள் வாழும் வாழ்கை, அறவாழ்கை எனப்படும். அது இறைப்பணியோடு கூடியதாகும். அவர்களிடம் காணப்படும் பண்பே அறம் என்பதாகும்.

அறச்செயல்களில் சில

ஒரு இல்வாழ்வான் இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு நடத்தும் இல்வாழ்க்கை *(கு 49)* இரட்சிக்கப்பட்ட இல்லாள், தன்னைக் கொண்டவனைப் பேணி, தன் கற்பை காத்துக் கொள்வது **(கு 56)** இரட்சிக்கப்பட்ட ஒருவனின் உள்ளத்தில் இருக்கும் இறை அன்பின் வெளிப்பாடு **(கு 79)** இறை அன்போடு விருந்தினரை உபசரிப்பது **(கு 87)** இறைவனின் இனிமையான நற்செய்தி கூறுவது **(கு 96)** இறைவன் செய்த இரட்சிப்பின் நன்றியை மறவாதிருப்பது **(கு 102)** ஒரு பக்கம் சாயாமல் தன் நடு நிலையை காத்துக்கொள்வது **(கு 118)** இறை அருளால் தன்னை அடக்கி காத்துக்கொள்வது **(கு 130)** பிறன் மனைவியை இச்சியாதிருப்பது **(கு 141)**

இவ்வாறு பல கோணங்களில் திருக்குறள் முழுவதிலும் அறம் பற்றி கூறப்பட்டுள்ளன.

அறம் அல்லாத ஈகை

தர்மம் செய்வது, தன்னை பரலோகத்தில் கொண்டு செல்லும் என்ற பிரதிபலனை எதிர்பார்த்து கொடுக்கும் ஈகை தீயது என்கிறார் வள்ளுவர் **(கு 222)** எனவே அறம் என்பது வெறும் ஈகை மட்டுமல்ல என்பது தெளிவு. அதாவது இறைவனின் இரட்சிப்பை பெற்றுக் கொண்டவர்கள், இறைவனை உள்ளத்தில் கொண்டு, இறை நாம மகிமைக்காக இறை அன்போடு செய்யும் செயல்களே அறச்செயல்கள் என்று திருக்குறளில் பார்க்க முடிகிறது.

திருக்குறள் கூறும் அறத்தின் வரலாறு

திருக்குறள்

திருக்குறள் ஓர் சிறந்த அறநூலாக அனைத்து மக்களாலும் போற்றப்படுகிறது. இது அறநெறிகால நூல்களில் ஒன்றாக எண்ணப்படுகிறது. திருக்குறளின் பெருமையை உணர்ந்து உலக மொழிகளில் முதலில் அதைப் பரப்பியது கிறிஸ்தவ குருமார்களாகும். முதல் முதலாக இந்நூலை மேலே நாட்டு மொழியில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர் என்ற காண்ஸ்டென்டைன் ஜோசப்பெஸ்கி ஆகும். இவர் திருக்குறளில் உள்ள அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். பின்பு **G.U.**போப் என்பவர் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதன் பின் திருக்குறள் 45 - க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

திருவள்ளுவர் கூறும் அறம்

திருக்குறளின் உரை ஆசிரியர்கள் யாவரும் திருக்குறள் ஒரு பொதுவான அறநூல் என்ற நிலையில் உரை எழுதியுள்ளார்கள். ஆனால் திருவள்ளுவர் காட்டும் அறத்தின் உட்கிடக்கை என்ன என்பதை அவர்களால் புரிந்துக் கொள்ள முடியவில்லை என்பதே உண்மை. திருவள்ளுவர் காட்டும் அறம் தெய்வீகமானது. அது கடவுளே மனு உருவாகி உலகுக்கு வந்து தம்மையே பலியாக்கிப் பொய்யைத் தீர்த்துக் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறி ஆகும். கடவுள் மனிதனாக உலகுக்கு வந்தது உலக வரலாற்றில் நடந்த ஒரு முக்கிய சம்பவம் ஆகும். அது 2008 ஆண்டுகளுக்கு முன் ஆசியாக் கண்டத்தின் ஒரு பாகமான இஸ்ரவேல் (பாலஸ்தீனா) நாட்டில் நடைபெற்றது.

அறத்தின் வரலாறு

ஆதி மனிதனாகிய ஆதாமின் பாவத்தால் மனுக்குலம் பாவத்துக்குள்ளானது.

பாவத்துக்குள்ளாக்கப்பட்ட மனுக்குலத்தை மீட்கும்படி பிதாவாகிய தேவன் சித்தமானார். அவர் தமது ஒரே பேறான

குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பினார். அவர் மனுக்குலத்தின் பாவத்தைத் தம் மேல் ஏற்று தம்மைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். சிலுவையில் மரித்த தேவகுமாரன் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் 40 நாட்கள் உலகத்தில் சஞ்சரித்து சீஷர்களை பெலப்படுத்தினார். பின்பு பரலோகத்திற்கு ஏறிச்சென்றார். அவர் காட்டிச் சென்ற ஒழுக்க நெறியே திருவள்ளுவர் கூறும் அறம்.

இறைவன் காட்டிய அறம்

தேவகுமாரன் பரத்திற்குச் சென்று பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாகக் கூறியிருந்தபடியால் சீஷர்கள் எருசலேமில் மேல்வீட்டறையில் கூடியிருந்தார்கள். பெந்தேகோஸ்தே என்னும் பண்டிகை நாளில் பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். பரிசுத்த ஆவியானவர் பலத்த காற்று அடிக்கிற சத்தத்தோடே அவர்கள் மத்தியில் இறங்கி வந்தார். சீஷர்கள் எல்லாரும் ஆன்மீக பெலன் அடைந்தார்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்கள் குமாரனாகிய இரட்சகர் காட்டிய ஒழுக்க நெறியில் நடந்தார்கள். இவ்வாறு இவ்வுலகத்தில் அவதரித்த குமாரனாகிய இறைவனால் ஏற்படுத்தப்பட்ட பொய்தீர் ஒழுக்க நெறியாகிய அறத்தையே திருவள்ளுவர் தமது நூலில் கூறுகிறார். அவ்வறத்தின் நற்செய்தி ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

அறத்தின் நற்செய்தி உலகத் தேசங்களில்

மேலே கூறப்பட்ட நற்செய்தி ஒழுக்கநெறியாக உலகமெங்கும் எடுத்துச்செல்லப்பட்டது. இயேசு சீஷர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தைப் பிரசங்கியுங்கள் என்று சொல்லி இருந்தார். அதின்படி பரிசுத்த ஆவியானவர் வந்த போது அவர்கள் பெலனடைந்து முன்பு சமீபத்திலும் பின்பு உலகத்தின் கடைசி வரைக்கும் சுவிஷேசத்தைச் சாட்சியாய் அறிவித்தார்கள்.

அறத்தின் நற்செய்தி ஐரோப்பாவுக்கு

அப்போஸ்தலர்களாகிய பவுல், பேதுரு ஆகியோர் நற்செய்தியை ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்றார்கள். அநேக இடங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

இரட்சகர் காட்டிய ஒழுக்கநெறியில் ஜனங்களை நடத்து வதற்காக அப்போஸ்தலர்கள் அதிலும் குறிப்பாக பேதுரு, பவுல் என்போர் அநேக நிரூபங்களை எழுதினார்கள். அவைகள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. அவைகள் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அறத்தின் நற்செய்தி இந்தியாவுக்கு

பவுல், பேதுரு ஆகியோர் ஐரோப்பாவுக்கு அறத்தின் நற்செய்தியை எடுத்துச்சென்ற அதே காலங்களில் அப்போஸ்தலனாகிய தோமா இந்தியாவுக்கு அந்த நற்செய்தியைக் கொண்டு வந்தார். அப்போஸ்தலனாகிய தோமாவின் ஊழியத்தைப் பற்றி லியூசியஸ் என்பவர் சிரியா மொழியில் 'புனித அப்போஸ்தலர் தோமாவின் பணி' என்னும் நூல் எழுதியுள்ளார். அது கி. பி. 250க்கு முன் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அப். தோமாவின் இந்திய வருகை

அப். தோமா கி.பி. 52ல் இந்தியாவுக்கு வந்தார். அவர் குமாரனாகிய இரட்சகரின் நற்செய்தியைக் கொண்டு வந்தார். அதுவே அறத்தின் செய்தியாகும். இரட்சகர் என்ற பொருளுக்கு அன்று பலஸ்தீனாவில் பேசப்பட்ட எபிரேயச் சொல் யோசுவா என்பதாகும். யோசுவா என்ற எபிரேய வார்த்தைக்கு கிரேக்கச் சொல் இயூசுஸ் என்பதாகும். கி. பி. 1500 க்குப் பின் யோசுவா என்ற வார்த்தை ஆங்கிலத்திலும் பின்பு தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டது. அவ்வாறு அச்சொல் ஆங்கிலத்தில் ஜீசஸ் என்றும் தமிழில் இயேசு என்றும் கூறப்படத் தொடங்கிற்று. இயேசு என்ற தமிழ்ச் சொல் தோமாவின் நாட்களில் இல்லாததால் தோமா இந்தியாவில் ஊழியம் செய்தபோது அந்த பெயர்ச் சொல்லை அவர் பயன்படுத்தவில்லை. ஆனால் அவர் குமாரனாகிய கடவுள் என்றும் பாவங்களை நீக்கி அவர் இரட்சிக்கிறவர் என்றும் தோமா வேறு அநேக வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். எனவே தோமாவின் நாட்களில் இயேசு,

கிறிஸ்து போன்ற பெயர்கள் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் குமாரனாகிய கடவுளின் கிரியைகளை வெளிப்படுத்தும் அநேக காரணப்பெயர்கள் பயன்படுத்தப்பட்டன.

தோமாவின் தட்சசீல ஊழியம்

தோமா ஏடென் வழியாக சொகோட்டிரா என்னும் தீவிற்குச் சென்று அங்கிருந்து சிந்து நதிக்கருகிலுள்ள 'டாடா' அல்லது 'பாட்டாலா' என்னும் பழங்கால துறைமுகத்தில் வந்தடைந்தார் என்று காணப்படுகிறது.

தோமா டாடா துறைமுகத்திலிருந்து காந்தாரா அரசின் தலைநகரமான தட்சசீலம் வந்தடைந்தார் (தட்சசீலம் என்பது இன்றைய ராவல் பிண்டிக்குச் சமீபம் இருந்த பழங்காலப் பட்டணம்). தோமா தட்சசீலத்தில் இருந்த கொண்டோபரஸ் என்னும் அரசனையும் அவன் சகோதரன் காத் என்பவனையும் இரட்சிப்பின் பாதையில் கொண்டு வந்து அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அங்கு காந்தாரா முழுவதும் அநேக ஆயிரமான ஜனங்கள் இரட்சகரை ஏற்றுக்கொண்டதால் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது.

தோமாவின் மலபார் ஊழியம்

காந்தாராவில் திருச்சபை ஸ்தாபித்தபின் தோமா மலபாருக்குச் சென்றார். முசிறிஸ் துறைமுகத்தில் வந்தடைந்து மலபாரில் பல இடங்களில் பெருமளவில் ஊழியம் செய்தார். மலபாரில் தோமா 7 1/2 பள்ளிகள் (சபைகள்) ஸ்தாபித்தார் என்று இந்நாட்களிலும் கூறப்படுகிறது. அவைகளில் 7 பள்ளிகள் (சபைகள்) தற்போதைய கேரளா மாநிலத்தில் முசிறிஸ் (கிரங்கனூர்), பள்ளூர், பரூர், கோத்த மங்கலம், காயல், நிரணம், கொல்லம் ஆகிய இடங்களிலும் அரைப்பள்ளி இன்றைய தமிழ்நாட்டைச் சேர்ந்த திருவிதாங்கோடு என்ற ஊரிலும் ஸ்தாபிக்கப்பட்டன. தமிழ் நாட்டில் குமரி மாவட்டத்தில் உள்ள திருவிதாங்கோடு என்ற இடத்தில் தோமாவால் கட்டப்பட்டதாக கூறப்படும் 'அரைப்பள்ளி' என்ற ஒரு மிகச்சிறிய பழங்காலக் கற்கோயில் இன்றும் உள்ளது.

பிறமதத்தவரின் உரிமைக்குரல்

அக்கோவிலின் அமைப்பு தற்போதைய கிறிஸ்தவ

ஆலயங்களைப் போல் இல்லாமல் இந்துக்கோயிலின் தோற்றத்தில் உள்ளதால் சமீப நாட்களில் பிற மதஸ்தர்கள் அதற்கு உரிமை கோரினர். அதை முன்னிட்டு அவ்வாலயத்தின் கற்கள் ஒவ்வொன்றாக நிர்வாகிகள் முன்னால் ஆய்வு செய்யப்பட்டபோது கற்களில் ஒன்றில் சிலுவை அடையாளம் ஒன்று பொறிக்கப்பட்டிருந்ததால் உரிமைக்குரல் எழுப்பி யவர்கள் கலைந்து சென்று விட்டார்கள். இப்பழங்காலச் சிற்றாலயம் இன்றும் தோமாவின் தென்னிந்திய வருகையை மெய்பிக்கும் சான்றாய் நிற்கிறது. மலபாரில் பல இடங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்பை ஏற்றுக்கொண்டார்கள். அநேக திருச்சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

தோமாவின் கொரமண்டல ஊழியம்

மலபார் ஊழியத்திற்குப்பின் தோமா சோழமண்டலத்திற்கும், கொரமண்டல் பகுதிகளுக்கும் சென்றார். கொரமண்டல் என்பது சென்னை மயிலாப்பூர் பகுதியாகும். இவ்விடங்களில் எல்லாம் தோமா சிறப்பான ஊழியம் செய்தார். வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் அநேக திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. சென்னை மயிலாப்பூரில் சின்னமலை, பெரியமலை ஆகிய பகுதிகளில் பெருவாரியான ஜனங்கள் தோமாவின் சுவிஷேசத்தால் ஈர்க்கப்பட்டார்கள்.

தோமாவின் நேரடி சாட்சி

தோமா அப்போஸ்தலன் உலகத்தில் அவதரித்த குமாரனாகிய கடவுளைக் குறித்தும் அவர் தம்மையே பலியாக்கி மனுமக்களைப் பாவத்திலிருந்து இரட்சித்ததைக் குறித்தும் சாட்சியாக இந்திய மக்களுக்கு அறிவித்தார். அவர் தமது வாழ்கையில் கண்டு அறிந்து அனுபவித்தவைகளைக் குறித்தே பேசினார். பரத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்த இரட்சகர் பிதாவாகிய தேவனுடைய குமாரன் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இரட்சகராகிய குமாரன் பிதாவாகிய தேவனோடு உறவாடுவதை நேரில் பார்த்திருந்தார். அவர் செய்த அற்புத அடையாளங்களின் போது தோமா கூட இருந்தார். அவர் காட்டிய மேலான வழிகளை அவர் கற்று அறிந்திருந்தார்.

உயிர்த்தெழுந்த குமாரனாகிய கடவுளை நேரில் பார்த்த அவர் விலாவில் தொட்டுப் பார்த்து தைரியம் அடைந்தவர்

தோமா. உயிர்த்தெழுந்த கர்த்தர் பரமேறுகையில் தோமாவும் கூட இருந்தார். பரிசுத்த ஆவியானவர் இடிமுழக்கத்தின் சத்தத்தோடு வந்திறங்கிய போது மேல் வீட்டறையில் 120 பேரோடு தோமாவும் கூட இருந்தார். அங்கே பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்றுக் கொண்டவர்களில் தோமாவும் ஒருவர். இவை எல்லாவற்றையும் தோமா இந்திய மக்களுக்குச் சாட்சியாக அறிவித்தார். எனவே ஜனங்கள் அவர் உபதேசங்களால் ஈர்க்கப்பட்டு விசுவாசித்து திரள்திரளாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள்.

நற்செய்தியால் ஈர்க்கப்பட்டவர்கள்

தோமாவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்ட மக்கள் பல இடங்களில் பெருகி வந்தார்கள். அவர்கள் மற்ற ஜனங்களை விட வேறுபட்ட வாழ்க்கை வாழ்ந்தார்கள். இப்படிபட்டவர்கள் சான்றோர் என்று அழைக்கப்பட்டார்கள். தோமாவின் உபதேசங்களால் ஈர்க்கப்பட்டு அவைகளை ஏற்றுக்கொண்டு தமது வாழ்கையில் கடைபிடித்தவர்கள் அநேகர் உண்டு. அப்படிபட்டவர்களில் மிகச்சிறந்தவராய்க் கருதப்படத்தக்கவர் திருவள்ளுவர் ஆவார். திருவள்ளுவர் தாம் அறிந்து கற்றுக் கொண்டு அனுசரித்துப் பயன்பெற்ற அவ்வற வழியை மற்றவர்களும் அறிந்து அனுசரிப்பதற்காக பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்டு எழுதியிருப்பதே திருக்குறள் ஆகும்.

தோமாவின் இரத்த சாட்சி மரணம்

தோமாவின் நற்செய்தி ஊழியத்தை அநேக ஆயிரம் ஜனங்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட போதிலும் உபதேசங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களும் அநேகர் இருந்தார்கள். அப்படிப்பட்ட சிலரால் AD 72- ல் தோமா இரத்தசாட்சியாய்க் கொல்லப்பட்டார். அவர் சரீரம் மயிலாப்பூரில் அடக்கம் பண்ணப்பட்டது. தற்போது தோமாவின் கல்லறை மயிலாப் பூரில் உள்ள சாந்தோம் பேராலயத்தில் அமைந்துள்ளது.

தோமாவின் இந்திய வருகையின் உறுதி

தோமா இந்தியாவுக்கு வந்தார் என்பது ஒரு கட்டுக்கதை என்றும் கொண்டோபரஸ் என்னும் ஒரு அரசன் தட்சசீலத்தில் ஆண்டதே இல்லை என்றும் சிலர் கூறி வந்தார்கள்.

ஆனால் சமீபகால அகழ்வு ஆராய்ச்சிகளில் கொண்டோபரஸ் என்ற அரசனால் வெளியிடப்பட்ட நாணயங்கள் அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டு தோமாவின் வருகை மெய்பிக்கப்பட்டுள்ளது. இன்று தோமா இந்தியாவுக்கு வந்து மாபெரும் ஊழியம் செய்தார் என்பது எவ்வித ஐயமுமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. சென்னை மயிலாப்பூரில் தோமா இருந்ததாகக் கூறப்படும் பெரியமலை St. Thomas Mount என அழைக்கப்படுகிறது. அங்கே காபாலீஸ்வரர் கோயில் ஒன்று உண்டு. அக்கோவில் கபாலஸ்தலம் என்ற கல்வாரி மலையில் அடிக்கப்பட்ட ஈசனின் பெயரில் கட்டப்பட்ட கிறிஸ்தவ கோயிலாக இருந்தது என்று கூறப்படுகிறது.

திருக்குறள் தமிழில் எழுதப்பட்ட நற்செய்தி நூல்

தோமாவால் எழுதப்பட்ட நூல்கள் இதுகாறும் கிடைக்கப்படவில்லை. என்றாலும் தோமாவால் கூறப்பட்ட உபதேசங்கள் அடங்கியதே திருவள்ளுவரால் தமிழ்மொழியில் எழுதப்பட்ட திருக்குறள். அப்போஸ்தலர்களில் சிலரால் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட நற்செய்திகள் அடங்கியவையே புதிய ஏற்பாட்டு புத்தகங்கள். அதே காலத்தில் அப்போஸ்தலனாகிய தோமாவால் கூறப்பட்ட நற் செய்திகளைத் திருக்குறள் வழியாகத் திருவள்ளுவர் தமிழ்மொழியில் தந்திருக்கிறார். எனவே கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுச் செய்திகள் எப்படி மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அவ்வாறே தமிழ்மொழியில் எழுதப்பட்ட திருக்குறள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாகும்.

கிறிஸ்தவ மக்களின் தயக்கம்

ஆனால் திருக்குறள் எழுதப்பட்டிருக்கும் தமிழ்மொழி புரிந்து கொள்ளுவதற்குச் சற்று சிரமமானதினாலும் கிறிஸ்தவ சத்தியங்களைக் குறித்து அறிந்து கொள்ளாத உரையாசிரியர்கள் தவறான உரைகள் எழுதிவிட்டபடியாலும் திருக்குறளைப் பிற சமயத்தவர்கள் சொந்தமாக்கிக் கொண்டதாலும் இந்திய கிறிஸ்தவர்கள் திருக்குறளைப் படிக்காமலும் திருக்குறளின் மகத்துவங்களை அறியாமலும் அதைப் பிற சமயங்களுக்கே விட்டுக் கொடுத்துவிட்டனர் என்பது பரிதபிக்கதக்க ஒன்றாகும்.

ஆனால் திருக்குறளில் அடங்கி இருப்பது தோமா அப்போஸ்தலனால் கூறப்பட்ட முழுமையான இரட்சிப்பின் நற்செய்தி ஆகும் என்பதே உண்மை. இதை திருக்குறளின் அதிகாரங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளின் பொருளிலிருந்தே கண்டுக் கொள்ளலாம்.

திருக்குறளின் உட்கிடக்கை கிறிஸ்தவமே

திருமறை சத்தியங்கள் திருக்குறளில்

திருமறையில் இருவித பாவங்களைக் குறித்து நாம் பார்க்க முடியும். ஒன்று ஜென்ம பாவம். மற்றொன்று கர்மபாவம். இவை இரண்டுமே ஒரு மனிதனை நித்திய நரகத்திற்குக் கொண்டு செல்வன வாகும். ஜென்ம பாவம் முதல் மனிதனாகிய ஆதாம் வழி வந்ததாகும். இதைக்குறித்து பரிசுத்த வேதாகமத்தில் 'ஒரே மனுஷனுடைய (ஆதாமின்) கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகள் ஆக்கப்பட்டார்கள்' என்று வாசிக்கிறோம். கர்ம பாவம் என்பது ஒவ்வொரு மனிதனும் தாமாய் செய்யும் பாவங்கள் ஆகும். இதைக் குறித்து விவிலியத்தில் 'எல்லோ ரும் வழி தப்பி ஏகமாய் கெட்டுப் போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை' என்று வாசிக்கிறோம்.

இருவித பாவங்கள்

இவ்விரு பாவங்களைக் குறித்து திருவள்ளுவர் 'இருள்சேர் இருவினை' என்று ஐந்தாவது குறட்பாவில் குறிப்பிடுகிறார். அதாவது ஒருவனை இருளாகிய நரகத்தில் சேர்ப்பவை இருவினைகள் (பாவம்) என்கிறார். இதுவே ஜென்ம பாவமும், கர்ம பாவமும் ஆகும். மேலும் திருவள்ளுவர் பத்தாவது குறட்பாவில் பிறப்பிலேயே தொடர்ந்து வரும் (ஆதாம் முதல்) பாவத்தைப் 'பிறவிப் பெருங்கடல்' என்கிறார்.

குமாரன் பரலோகம் துறந்தவர்

மேற்கூறிய இருவித பாவங்களிலிருந்தும் மனுமக்களை மீட்டுக் கொள்ள தேவன் சித்தமானார். அவர் பரலோகத்தை விட்டு இந்த உலகுக்கு வந்தார். இதைக்குறித்து விவிலியம் 'அவர் தேவனுடைய ரூபமாய் இருந்தும் தேவனுக்குச் சமமாய் இருப்பதைக் கொள்ளை யாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலானார் (பிலி. 2:6-7) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்கருத்தைக் கொண்டு குமாரனாகிய கடவுளுக்குத் திருவள்ளுவர் ஒழுக்கத்து நீத்தார் என்று பெயர் சூட்டுகிறார் (குறள். 3:1). அதாவது இம்மையில் (இவ்வுலகத்தில்) ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்காக தம் பரலோக மேன்மைகளை நீத்தவர், அல்லது துறந்தவர் என்பது பொருள்.

இம்மை மறுமை அறிந்தவர்

மேலும் திருவள்ளுவர் நீத்தாராகிய இறைவனை இருபத்து மூன்றாவது குறட்பாவில் 'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்' எனக் குறிப்பிடுகிறார். அவர் ஒருவரே இருமை வகை தெரிந்தவர். அதாவது இம்மை மறுமையாகிய இருமையின் வகை தெரிந்தவர். தம்மையே ஈண்டு அறம் பூண்டவர்.

மனிதருக்கு இரட்சிப்பைச் சம்பாதித்தவர்

உலகத்தில் மனிதனாக அவதரித்த கடவுள் மனிதனின் பாவத் திற்காகத் தம்மையே சிலுவையில் பலியாக்கி, இரட்சிப்பை ஏற்படுத்தி மனிதன் இழந்துபோன நித்திய ஜீவனை மறுபடியும் பெற்றுத் தந்தார். இதுவே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த திருமறை சத்தியம். இதே சத்தியத்தைத் திருவள்ளுவர் ஆறாவது குறட்பாவில் 'பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்' என்று விளக்குகிறார். இங்கே பொறியாகிய சிலுவையில் தன் ஐம்புலன் களையும் பலியாக்கினார் (ஐந்தவித்தான்) என்றும், பொய்தீர் ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பை ஏற்படுத்தினார் என்றும் அந்நெறியில் நடப் பவர்கள் நீடுவாழ்வு அல்லது நித்திய ஜீவன் பெற்றுக் கொள்வார்கள் என்றும் விளக்கப்படுகிறது. (குறள் விளக்கம் காண்க)

உயிர்த்தெழுந்தவர்

சிலுவையில் தம்மைத் தாமே பலியாக்கிய இரட்சகராகிய இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதும் அந்த உயிர்த்தெழுந்த செய்தியைத் தேவதூதன் மகதலேனா மரியாளுக்கு அறிவித்தான் என்பதும் திருமறை தரும் செய்தியாகும். இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தியே கிறிஸ்தவத்தின் உயிர்நாடியாகும். இச்செய்தியும் திருக் குறளில் விளக்கப்படுகிறது. இருபத்தி ஐந்தாவது குறட்பாவில் 'ஐந்த வித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி' என்று காண்கிறோம். அதாவது ஐம்புலன்களையும் பலியாக்கிய ஐந்தவித்தானின் (இயேசு கிறிஸ்துவின்) உயிர்த்தெழுந்த ஆற்றலுக்குத் தேவதூதனே சாட்சி கூறினான் என்ற வரலாறு சுட்டிக்காட்டப் படுகிறது.

இவைகளைப் போன்ற மேலும் அநேகத் திருமறைச் சத்தியங்கள் திருக்குறளின் ஆரம்பப் பகுதியான பாயிரம் முதல் இறுதிப் பகுதியான இன்பத்துப் பால் வரையிலும் நிறைந்திருப்பதை நாம் காண முடிகிறது. திருக்குறளைக் குறித்து வரலாற்று அடிப்படையில் ஆழ்ந்த ஆராய்ச் சிகள் மேற்கொள்ளப்பட்டதின் பயனாக திருக்குறளின் உட்கிடக்கை கிறிஸ்தவமே என்று நிரூபிக்கப்பட்டும் இருக்கிறது.

திருக்குறள் ஆராய்ச்சி

திருக்குறளை கூர்ந்து கவனித்த சில அறிஞர்கள் இந்நூல் கிறிஸ்தவ நெறிகளுக்கு இணங்கியது என்று கூறியுள்ளார்கள். இந் நிலையில் திருக்குறளைச் சரியான கோணத்தில் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து இது கிறிஸ்தவம் அடிப்படையிலான ஒரு நூல் என்றும், திருவள்ளுவர் பாயிரத்தின் முதற்பகுதியான கடவுள் வாழ்த்துப் பகுதியில் வாழ்த்தி இருப்பது பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் ஆகிய திருத்துவக் கடவுளையே ஆகும் என்றும், அதோடு கிறிஸ்தவத்தின் அஸ்திபாரக் கொள்கைகளே திருக்குறளின் ஆதாரமாய் இருக்கிறது என்றும் எடுத்துக்காட்டி நிரூபித்த பெருமை Dr. மு. தெய்வநாயகம் அவர்களைச் சார்ந்ததே ஆகும்.

Dr. தெய்வநாயகத்தின் நூல்கள்

திருக்குறள் ஆராய்ச்சிக்குப் பின் Dr. தெய்வநாயகம் அவர்கள் அனேக நூல்களைத் தமது ஆராய்ச்சியின் அடிப்படையில் வெளியிட் டுள்ளார்கள். அவற்றுள் மிக முக்கியமானவைகள்:-

1. திருவள்ளுவர் கிறிஸ்தவரா?
2. ஐந்தவித்தான் யார்?
3. வான் எது?
4. நீத்தார் யார்?
5. சான்றோர் யார்?
6. எழு பிறப்பு? என்பவையாகும்.

கருத்தரங்கு மாநாடு

மேலே கூறப்பட்ட நூல்கள் இந்துக்கள் மத்தியிலும் இலக்கிய மேதைகள் மத்தியிலும் அறிஞர் பெருமக்கள் மத்தியிலும் பெரும் சலசலப்பை உருவாக்கிற்று. நூல்களுக்குப் பெரும் எதிர்ப்புகளும் எழுந்தன. எனவே இவ்வாறு நூல்களையும் ஆராய்ந்து உண்மை கண்டறிவதற்கென சென்னை, மதுரை, அண்ணாமலை, திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆகிய நான்கு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 37 அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதோடு 1972 மே மாதம் 3, 4 ஆகிய நாட்களில் சென்னைக் கிறிஸ்தவக் கலைத் தொடர்பு மையத்தில் வைத்து ஒரு விசேஷித்த கருத்தரங்கு நடத்தப் பட்டது.

கலந்து கொண்டவர்கள்

இம்மாநாட்டிற்கு மொழிநூல் மூதறிஞர் பண்டிதர் ஞா. தேவநேயப்பாவாணர் சிறப்புத்தலைவராகவும், அருள்திரு ச. சுவிசேஷ முத்து BT, BD, M.Th. அவர்கள் அரங்கத் தலைவராகவும் செயல்பட்டார்கள். ஆய்வுக்குழு அணித்தலைவர்களாக 1. திருக்குறள் பீடம் அழகர் அடிகள் அவர்கள். 2. பன்மொழிப்புலவர் க. அப்பாத் துரையார் அவர்கள். 3. Dr. சுப. மாணிக்கம் அவர்கள். 4. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள். 5. புலவர். குழந்தை அவர்கள். 6. Dr. சுந்தரம் அவர்கள் ஆகியோர் ஏற்படுத்தப் பட்டார்கள்.

திருக்குறளின் உட்கிடக்கை கிறிஸ்தவமே

ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் அம்மாநாட்டில் Dr. தெய்வநாயகத்தின் ஆய்வுக்கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முடிவில் Dr. மு. கோவிந்தசாமி அவர்கள் ஐந்தவித்தான், நிறைமொழி மாந்தர், ஒழுக்கத்து நீத்தார் போன்ற மேற்கூறிய எல்லா காரணப்பெயர்களும்...... இயேசு பெருமான் ஒருவருக்கே பொருந்தும் என்பதை ஒப்புக் கொண்டு மாநாட்டை முடித்தார்கள். அதோடு கிறிஸ்தவமே திருக்குறளின் உட்கிடக்கை என்ற கருத்து அறிஞார்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

கிறிஸ்தவர்கள் முன்வர வேண்டும்

இந்நிலையிலும் கூட கிறிஸ்தவ மக்கள் திருக்குறளை ஒரு கிறிஸ்தவ நூல் என்று எடுத்துக்கொள்ள முன்வரவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். அவர்கள் இயேசுவின் சீஷனான தோமாவின் இந்திய ஊழியத்தை நன்கு அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். மட்டுமல்ல ஒருவர் இந்தியாவின் கிறிஸ்தவத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் அவர் தோமாவின் இந்திய ஊழியங்களை யும் அவருடைய உபதேசங்களால் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங் களையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

1. அறத்துப்பால்

பகுதி I

பாயிரம்

பாயிரம் என்றால் என்ன?

தமிழ் இலக்கியங்களில் பாயிரம் என்பது முகவுரையாக தரப்படுகிறது. பொது மரபுப்படி பாயிரத்தின் முதற்பகுதியில் கடவுளை வாழ்த்தி பிற்பகுதியில் செயப்படு (பட்ங்ம்ங்) பொருளைக் கூறி பாயிரத்தை முடிப்பார்கள். எனவே முதல் அதிகாரத்தில் கடவுள் வாழ்த்தும் இரண்டாம் அதிகாரத்தில்

செயப்படுபொருளும் கூறி பாயிரத்தை முடிப்பது பொது மரபு.

தெய்வ வணக்கமும் செய்யப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப்பாயிரம்

என்பது இலக்கணம். ஆனால் பொது மரபுக்கு மாறாக, திருவள்ளுவர் திருக்குறளில் முதல் மூன்று அதிகாரங்களில் கடவுள், வான், நீத்தார் ஆகிய மூவொரு கடவுளை வாழ்த்தி, தெய்வ வணக்கம் செய்து நான்காவது அதிகாரத்தில் செய்யப்படு பொருளாகிய அறத்தைக் கூறி தற்சிறப்புப் பாயிரமாக முடிக்கிறார்.

பாயிரத்தில் மூவொருமை கொள்கை

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்கு மூன்று அதிகாரங்களை பயன்படுத்தக் காரணம் அவர் கொண்டிருந்த கடவுளின் மூவொருமை கொள்கை ஆகும். திருவள்ளுவர் கடவுளை மூவொரு கடவுளாக வாழ்த்தி இருக்கிறார். இக்கருத்து கி.பி. முதலாம் நூற்றாண்டில் வெளிப்பட்ட கடவுள் கொள்கையிலிருந்து திருவள்ளுவர் பெற்றுக்கொண்டதாகும். அது கடவுள் மனுஉரு ஆனபின் உலகுக்கு வெளிப்படுத்தப் பட்ட ஒரு இறைக்கருத்தாகும்.

கடவுள், வான், நீத்தார்

அக்கருத்தின்படி கடவுள் பிதாவாகிய கடவுள், பரிசுத்த ஆவியராகிய கடவுள், குமாரனாகிய கடவுள் என்ற மூன்று நிலைகளில் செயல்படுகிறார். இக்கருத்தைத் திருவள்ளுவர் முழுமையாக ஏற்றுக்கொண்டு தமது நூலாகிய திருக்குறளில் அதை வெளிப்படுத்தி விளக்குகிறார். ஆகவே பாயிரம் என்ற முதற்பகுதியில் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்காக முதல் மூன்று அதிகாரங்களை எடுத்துக் கொள்ளுகிறார். முதலாம் அதிகாரத்தில் வள்ளுவர் பிதாவாகிய கடவுளைக் கடவுள் என்று அழைத்து வாழ்த்துகிறார். இரண்டாவது அதிகாரத்தில் அவர் பரிசுத்த ஆவியாகிய கடவுளை வான் என்று அழைத்து சிறப்பிக்கிறார். மூன்றாவது அதிகாரத்தில் குமாரனாகிய கடவுளை நீத்தார் என்று அழைத்து வாழ்த்துகிறார். பின்பு நாலாவது அதிகாரத்தில் செயப்படுபொருளாகிய அறத்தை வலியுறுத்திப் பாயிரத்தை முடிக்கிறார்.

1. கடவுள் வாழ்த்து **(பிதாவாகிய கடவுளை வாழ்த்துதல்)**

இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் மூவொரு கடவுளில் ஒருவரான பிதாவாகிய கடவுளை வாழ்த்துகிறார்.

2. வான் சிறப்பு **(தூய ஆவியாகிய கடவுளை வாழ்த்துதல்)**

வான் சிறப்பு என்னும் தலைப்பு வித்தியாசமான ஒன்றாக காணப்படுகிறது. இவ்வதிகாரத்தில் உள்ள குறட்பாக்களை நாம் வாசிக்கும் போது எழுத்தின்படி அவை மழையைக் குறிக்கிறது. ஆனால் அது வெறும் மழையைக் குறிப்பது அல்ல. அது மழையை மட்டுமே குறிப்பதானால் அது கடவுள் வாழ்த்துப் பகுதியில் இடம்பெற வேண்டியதில்லை. அது கடவுள் திருத்துவத்தில் ஒன்றான

பரிசுத்த ஆவியாகிய கடவுளைக் குறிப்பதாகும். பிதாவாகிய கடவுளை வாழ்த்திய பின் வள்ளுவர் பரிசுத்த ஆவியாகிய கடவுளை வானாகக் காட்டி வாழ்த்துகிறார்

பரிசுத்த ஆவி விவிலியத்தில்

பரிசுத்த ஆவியானவரை மழையாக விவிலியம் அநேக இடங்களில் சுட்டிக் காட்டுகிறது. முன்மாரி, பின்மாரி என்றும் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்றும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் உலகுக்கு அனுப்பபட்டதைக் குறித்து அப் 2:15 வசனங்களில் 'அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று . இங்கே பரிசுத்த ஆவியின் தன்மையைக் குறித்து தெளிவாய்க் காணமுடிகிறது. அது மழையைப் போல நிரப்பும் தன்மை உள்ளதாகக் காட்டப்படுகிறது.

தூய ஆவியாகிய வானின் சிறப்புகள்

இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் வான் என்ற தலைப்பில் தேவ ஆவியின் சிறப்புகளை விளக்குகிறார். மழையின்றி எப்படிப் பூமிக்குரிய நன்மைகள் கிடைக்காமல் போகிறதோ அவ்வண்ணமே ஆவியின் மழையின்றி தேவப் பிள்ளைகளுக்குப் பரலோக நன்மைகள் கிடைக்காது. இரட்சிக்கப்பட்ட மக்களை ஆவியின் அபிஷேகம் மட்டுமே ஓங்கி வளரச் செய்கிறது. நித்திய ஜீவனுக்கு நேராக நடத்திச் செல்லுகிறது. இதை வள்ளுவர் வெளித்தோற்றத்தில் மழையைக் கொண்டு விளக்குகிறார்.

3. நீத்தார் பெருமை **(குமாரனாகிய கடவுளை வாழ்த்துதல்)**

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தப் பகுதியில் மூன்றாவதாக வாழ்த்துவது நீத்தாராகிய கடவுளை ஆகும். இவ்வதிகாரத்தில் குமாரனாகிய கடவுளை நீத்தார் என்ற பெயரில் வாழ்த்துகிறார். ஆக பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற திரித்துவத்தைக் கடவுள், வான், நீத்தார் என்ற பெயர்களில் வாழ்த்துகிறார்.

நீத்தார் யார்?

திருக்குறளின் உட்கிடக்கை கிறிஸ்தவம் என்பதை அறியாத உரையாசிரியர்களுக்கு அதிக சிக்கல்களை ஏற்படுத்திய ஓர் அதிகாரம் நீத்தார் பெருமை ஆகும். அவர்கள் நீத்தார் என்பதற்குத் துறவிகள் என்ற பொருளில் விளக்கம் கொடுக்க முயன்றிருக்கிறார்கள். ஆனால் வள்ளுவர் இங்கே குறிப்பிடும் நீத்தார் துறவி அல்ல. அவர் பரிசுத்த வேதாகமத்தில் கூறியிருக்கிறபடி தேவனுடைய ரூபமாய் இருந்தும் தேவனுக்கு சமமாய் இருப்பதைக் கொள்ளையாடினப் பொருளாக எண்ணாமல் எல்லாப் பரலோக மேன்மைகளையும் நீத்து (துறந்து) தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்து மனுஷ சாயலான குமாரனாகிய கடவுள் ஆகும். அவரே வள்ளுவர் கூறும் நீத்தார். அப்படிபட்ட நீத்தாராகிய கடவுளின் பெருமைகளை இங்கே சுட்டிக்காட்டி வாழ்த்துகிறார் திருவள்ளுவர்.

4. அறன் வலியுறுத்தல் (மீட்பாகிய அறன் வலியுறுத்தல்)

பாயிரத்தில் முதல் மூன்று அதிகாரங்களை திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்குப் பயன்படுத்துகிறார் என்பதைப் பார்த்தோம். அதன் பின் நான்காவது அதிகாரத்தில் தம் நூலில் அவர் கூற இருக்கும் பொருளாகிய அறத்தை வலியுறுத்திப் பாயிரத்தை முடிக்கிறார்.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பகுதியிலேயே அவர் தம்முடைய நூலின் மையப்பொருளாய் விளங்கும் அறத்தைக் குறித்தும் கூறியுள்ளார். திருவள்ளுவர் கூறும் அறம் நீத்தராகிய கடவுள் தம்மையே பலியாக்கி உலகுக்குச் சம்பாதித்துத் தந்ததாகும். நீத்தார் அந்த அறத்தைப் பெற்றுத்தர தம் ஐம்புலன்களையும் பலியாக்கினபடியால் அவரைப் பொறிவாயில் ஐந்தவித்தான் என்று அழைக்கிறார்.

ஐந்தவித்தானாகிய நீத்தார் தம் ஐம்புலன்களையும் பலியாக்கி பெற்றுத் தந்த அறத்தை வள்ளுவர் பொய்தீர் ஒழுக்கநெறி எனக் குறிப்பிடுகிறார். அதாவது பொய்யின் வினையாகிய பாவத்தைத் தீர்த்து சம்பாதித்த ஒழுக்க நெறி ஆகும். அதுவே இரட்சிப்பு அல்லது மீட்பு ஆகிய பொய்தீர் ஒழுக்க நெறி. அந்த இரட்சிப்பாகிய பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்பவர்களுக்கு நீடு வாழ்வு அல்லது நித்திய ஜீவன் உண்டு என்கிறார் திருவள்ளுவர். எனவே மனிதனுக்கு நித்திய ஜீவனைப் பெற்றுத் தரவே பொய்தீர் ஒழுக்கநெறியாகிய அறம் நீத்தரால் உண்டாக்கப்பட்டது. யார்யார்க்கும் அதாவது உலகில் எந்தெந்த மனிதரையும் இரட்சிப்பாகிய பொய்தீர் ஒழுக்கநெறி என்ற அறவழியில் நடக்க வைப்பது பரிசுத்த ஆவியாகிய வான் ஆகும்.

பரிசுத்த ஆவியாகிய வான் அருள் இல்லாவிட்டால் ஒருவருக்கும் வள்ளுவர் கூறும் அறவழியில் நடக்க முடியாது. நீடுவாழ்வும் பெற்றுக்கொள்ள முடியாது. திருவள்ளுவர் தமது நூலின் ஏனைய பகுதிகளில் உள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் இவ்வுலகின் ஒவ்வொருவித செயல்பாடுள்ள மனிதர்களைக் குறிப்பிடுகிறார். இல்லற வாழ்க்கையிலோ, துறவற வாழ்க்கையிலோ எந்தெந்த முறையில் செயல்படுகிறவர்களாய் இருந்தாலும் அவர்கள் நீடுவாழ்வு அடையத்தக்க வழியை இறைவன் காட்டியுள்ளார். அவ்வறத்தின் வழியாய் உலக மக்களை திருக்குறள் மூலம் நடத்தி செல்வதே திருவள்ளுவரின் நோக்கம். அப்படிபட்ட அறத்தின் தேவையை வலியுறுத்திக் காட்டுவதே அறன் வலியுறுத்தல்.

பகுதி II

இல்லறவியல்

5. இல்வாழ்க்கை (குடும்ப வாழ்கை)

இல்லறவியலில் முதல் மூன்று அதிகாரங்களில் (அதாவது 5 முதல் 7 வரை) ஒரு குடும்பத்தலைவன், தலைவி அவர்களுடைய மக்கள் ஆகியோர் அறவழியில் அதாவது இரட்சிப்பின் பாதையில் அமைய வேண்டுவதின்

முக்கியத்துவத்தை விளக்குகிறார். இந்த இல்வாழ்க்கையினால் தான் உலகில் மக்களெல்லாம் தோன்றுவது. நல்லதோர் இல்வாழ்க்கையை அமைத்து அறமாகிய இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டு தங்கள் மக்களையும் அறவழியில் நடத்தினால் உலகமே அறவழியில் ஒழுகும்.

6. வாழ்க்கைத் துணை நலம் (குடும்பத்தலைவிக்கு ஏற்றம் பண்புகள்)

குடும்ப வாழ்க்கையில் குடும்பத் தலைவிக்கு இருக்கவேண்டிய பண்புகள் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன. ஒருவனின் வாழ்க்கைத் துணைக்கு இருக்கவேண்டிய நற்பண்புகளை வள்ளுவர் விளக்குகிறார்.

7. மக்கட்பேறு (மக்களைப் பெற்றெடுத்தல்)

திருவள்ளுவர் இல்லறவியலில் இரு அதிகாரங்களில் (அதி. 5,6) குடும்பத்தலைவன், குடும்பத்தலைவி ஆகியோர் தங்களை அறவழியில் காத்துக்கொள்ள வேண்டுதலின் முக்கியத்துவத்தை விளக்கினார். ஒரு குடும்பம் முழுமை பெறுவதற்கு மக்கட்பேறு அவசியம். இந்த 7 ஆவது அதிகாரத்தில் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகள் அறநெறியில் அமைய வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

8. அன்புடைமை (அன்புடையவராயிருத்தல்)

மனிதன் தேவ அன்பினால் உண்டாக்கப்பட்டான். எனவே அவன் மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்தக் கடமைபட்டிருக்கிறான். 8 ஆவது அதிகாரத்தில் வள்ளுவர் அற வழியில் நடக்கும் ஒரு சான்றோனுக்கு அன்பு எவ்வளவு முக்கியம் என்பதை விளக்குகிறார்.

அன்பு விவிலியத்தில்

விவிலியத்தின் மையக்கருத்து, தேவ அன்பின் வெளிப்பாடு ஆகும். 1 கொரி 13 ம் அதிகாரம் அன்பைப்பற்றி விளக்கமாய்க் கூறுகிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று 1 யோ 4:7,8 வசனங்களில் வாசிக்கிறோம்.

9. விருந்தோம்பல் (பிறரை உபசரித்தல்)

இவ்வதிகாரத்தில் அறவழியில் நிற்கும் இல்வாழ்வான் குடும்பம் அன்னியரை உபசரிக்க நாடவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

10. இனியவை கூறல் (அருள் நிறைந்த வார்த்தைகளை பேசுதல்)

அறவழியில் ஒழுகும் இல்லறத்தான் அருள் நிறைந்த வார்த்தைகளை இனிதாய்ப் பேசுபவனாயிருக்க வேண்டும். அவன் இனிதாய்ப் பேசும் நற்செய்தி தீமையை அழித்து நன்மை பெருக்குகிறது.

இனிய வார்த்தைகளைப் பேசுதலுக்கு இயேசுபெருமானே சிறந்த உதாரணமாகக் காணப்படுகிறார். அவர் ஜனங்களைக் கண்டபோது மனம் உருகினார். தன்னைக் காட்டிக் கொடுத்தவனை சிநேகிதனே என்றார். இனிதான வார்த்தைகளை உபதேசமாய்க் கூறினார். துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதல் அடைவார்கள் . சொற்கள் மட்டுமல்ல தன் செயல்களிலும் காட்டினார்.

இப்படிபட்ட நிலைகளில் செயல்படுவதே அறவழியில் ஒழுகுபவரின் கடமை என்பது இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

11. செய்நன்றியறிதல் **(இறைவன் செய்த நன்றியை மறவாதிருத்தல்)**

அறமாகிய இரட்சிப்பின் வழியில் செல்வோர் எந்நேரத்திலும் இறைவன் மனிதருக்காகச் செய்த நன்றியை மறவாதிருக்க வேண்டுமென்று திருவள்ளுவர் இவ்வதிகாரத்தில் வலியுறுத்துகிறார். அதோடு மனிதர் ஒருவருக்கொருவர் செய்யும் நன்றியும் மறவாதிருத்தல் வேண்டும்.

பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், க. அப்பாத்துரை, புலவர் குழந்தை ஆகியோரின் விளக்கத்தோடு ஒப்பிட்டு அறிந்துக்கொள்ள டாக்டர். இ.ரா. அருளப்பாவின் திருக்குறள் புத்தாய்வு பக்கம் 204 காண்க.

12. நடுவு நிலைமை **(ஒரு பக்கம் சாயாமல் நேர்மையாய் நிற்பது)**

பொய்தீர் ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பின் பாதையில் நடக்கும் ஒருவன் தன் வாழ்கையின் எல்லா நிலைகளிலும் நடுவுநிலையைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று இவ்வதிகாரம் முழுவதிலும் வலியுறுத்தப்படுகிறது.

13. அடக்கமுடைமை **(அடக்கமுடையவராயிருத்தல்)**

அறநெறியில் நிற்பவர்கள் பணிவுடன் தங்களை அடக்கி, எல்லா நிலைகளிலும் அடக்கமுடையவர்களாய்த் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று இவ்வதிகாரம் வலியுறுத்துகிறது. பெருமை பேசும் நாவு, புறம் கூறும் நாவு, சண்டைக்கு காரணமான நாவு, கபடமுள்ள நாவு, ஜீவன், மரணம் இவைகளுக்கு காரணமான நாவு, பொய்பேசும் நாவு, அடக்கப்படாத நாவு, நெருப்பைப் போன்ற நாவு, நியாயத்தைப் பேசும் நீதிமானின் நாவு, கடவுளைப் புகழ்ந்து பாடும் நாவு, ஞானிகளின் நாவு, இவை போன்றவற்றால் ஏற்படும் நன்மை தீமைகளைக் குறித்து விவிலியம் தெளிவாய் விளக்குகிறது.

14. ஒழுக்கம் உடமை **(இரட்சிப்பாகிய ஒழுக்கம் உடையவராயிருத்தல்)**

இவ்வதிகாரம் திருக்குறளின் மையப்பொருளாகிய இரட்சிப்பின் (ஒழுக்கம்) முக்கியத்துவத்தைப் எடுத்துரைக்கிறது. இரட்சிப்பாகிய ஒழுக்கத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் பரலோக இன்பத்திலும், பெற்றுக் கொள்ளாதோர் இருளாகிய

நரகத்திலும் சென்றடைவார்கள் என்றும் மீட்கப்பட்ட சான்றோரோடு ஒன்றுபட்டு வாழக் கற்றுக் கொள்ளாதோர் அறிவில்லாதவர்கள் என்றும் விளக்கப்படுகிறது.

15. பிறனில் விழையாமை (பிறன் மனைவியிடம் நுழையாதிருத்தல்)

பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பதினால் ஏற்படும் கேடுகளைக் குறித்தும் பிறனுக்குரியவளை இச்சியாதிருப்பதினால் உண்டாகும் சிறப்புகள் குறித்தும் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

இது மீட்கப்பட்ட சான்றோரிடம் காணப்பட வேண்டிய ஒரு சிறந்த பண்பாகும். இது விவிலியத்திலும் மிகவாய் சிறப்பிக்கப்படுகிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் இப்பண்புடையவர்களாக இருக்கவேண்டும் என்பதே வவள்ளுவர் கருத்து.

16. பொறையுடைமை (பொறுமை உடையவராயிருத்தல்)

பொறுமைக்கு எடுத்துக்காட்டு ஐந்தவித்தானாகிய இறைமகன் இயேசுவே ஆவர். அவர் ஈட்டிதந்த பொய்தீர் ஒழுக்கநெறியாகிய இரட்சிப்பின் வழியில் நடப்போரும் பொறுமையைக் கடைபிடிக்க வேண்டியது அவசியம். தமக்குத் தீங்கு செய்வாரைப் பொறுத்துக் கொள்வதன் சிறப்புகள் குறித்து இவ்வதிகாரம் விளக்குகிறது.

17. அழுக்காறாமை (மாசற்ற வாழ்க்கை வாழ்தல்)

இரட்சிக்கப்பட்டவர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும். இருதயத்தில் பரிசுத்தம் உள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். இறையடியார்கள் இறைவனை அனுதினமும் தரிசித்து வாழ வேண்டும். மாசுபடிந்த வாழ்க்கையின் கேடுகளும் மாசற்ற வாழ்வின் மேன்மைகளும் இவ்வதிகாரத்தில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

18. வெஃகாமை (பிறர் பொருளை இச்சியாதிருத்தல்)

ஒழுக்க நெறியில் நடக்கும் இல்வாழ்வான் மறுபிறப்பு அல்லது மீட்பு பெற்றவனாவான். அவன் இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையைப் புரிந்து கொண்டு நிலையான இன்பம் பெற்றுக்கொள்வதற்காகவே இரட்சிப்பாகிய ஒழுக்க நெறியை ஏற்றுக்கொண்டவன். எனவே அவன் பிறர் பொருளை இச்சிக்கமாட்டான். பிறர் பொருளை இச்சிப்பவன் அற வழியில் நிற்பவன் அல்ல. தனக்கு உள்ள பொருட் செல்வத்தில் திருப்தி அடைந்து அறவழியில் நடப்பதால் தன்னைத் தேடி வரும் அருட்செல்வத்தையும் அனுபவித்து மகிழ்ந்திருப்பவனே அறவோன்.

19. புறங்கூறாமை (கண் எதிரில் இல்லாதவனைக் குறித்து குறை கூறாதிருத்தல்)

அறவழியில் நிற்கும் இறை அடியவர்கள் புறங்கூறுதல் என்ற பழிச்

செயல் செய்யமாட்டார்கள். ஒருவன் கண் எதிரில் இல்லாத போது அவனைக் குறித்துக் குறைக் கூறித்திரிவது அறத்துக்கு மாறான செயல் என்று இவ்வதிகாரம் முழுவதிலும் விளக்கப்படுகிறது. விவிலியமும் புறங்கூறுதல் என்ற இழிச்செயல் இரட்சிப்பின் வழியில் நிற்கும் அறவோருக்கு (விசுவாசிகளுக்கு) இருக்கக்கூடாது என்று வலியுறுத்துகிறது.

20. பயனில சொல்லாமை (வீண் வார்த்தை அலப்பாதிருத்தல்)

அறவழியில் நிற்பவர்கள் வீண் வார்த்தைகள் அலப்பமாட்டார்கள். வாய்மையே சான்றோராகிய அவர்கள் பண்பு. வீண் வார்த்தைகள் அறத்துக்குப் புறம்பானதென்பதை இவ்வதிகாரம் காண்பிக்கிறது.

21. தீவினையச்சம் (பாவச்செயல்களுக்கு அஞ்சி விலகுதல்)

பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்பவர்கள் பாவச் செயல்களிலிருந்து மீட்கப்பட்டவர்களாவர். எனவே அவர்கள் பாவத்துக்கு (தீமைக்கு) அஞ்சி விலகுவார்கள். தீவினை எவ்வளவு கொடியது என்றும் அது ஒருவனை எப்படி அழிக்ககூடியது என்றும் சான்றோர் தீய செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்றும் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

22. ஒப்புரவு அறிதல் (ஒப்புரவாக்குதல்)

ஒப்புரவுக்கு முதல் காரணர் இறைவனே. தம்மை விட்டு பிரிந்து சென்ற மனிதனைத் தம்மோடு மறுபடியும் இணைக்கும் படியாக இறைமகன் இயேசுவை இவ்வுலகுக்கு அனுப்பினார். அவர் தம்மையே சிலுவையில் பலியாக்கிக் கெட்டுப்போன மனுக்குலத்தை இறைவனோடு ஒப்புரவாக்கினார். அவ்வாறு கடவுளோடு ஒப்புரவானவர்கள் மற்றவர்களுக்குள்ளும் அவ்வொப்புரவை ஏற்படுத்தக் கடன்பட்டிருக்கிறார்கள்.

ஒப்புரவாகுதலைக்குறித்து புதிய ஏற்பாட்டில் (விவிலியம்) பவுல் "அவர் (தேவன்) இயேசுக் கிறிஸ்துவைக் கொண்டு நம்மை தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்" என்கிறார்.

"முன்னே அந்நியராகவும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக் களாகவும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் அவருடைய மாம்ச சரீரத்தினால் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்". (கொலோ 1:20)

வள்ளுவர் ஒப்புரவை சான்றோருடன் இணைத்து சான்றோருக்குரிய ஐந்து தூண்களில் நடுத்தூணாகவும் வைத்து ஒப்புரவாக்குதலின் மேன்மையை இவ்வதிகாரத்தில் விளக்குகிறார்.

23. ஈகை (பிரதிபலன் எதிர்பார்க்காமல் ஈந்து கொடுத்தல்)

ஈகைக்கு எடுத்துக்காட்டு இறைவனே ஆகும். மனுக்குலம்

அவலநிலையில் இருப்பதைக் கண்டு மனம் இரங்கிய கடவுள் தமது ஒரேப்பேறான குமாரனை அவர்களுடைய மீட்புக்காக ஈந்தருளினார்.

அவ்வாறே அந்த மீட்பைப் பெற்றுக் கொண்ட மக்களும் தங்களுடையதை மற்றவர்களுக்கு ஈந்து அளிக்க வேண்டும்.

24. புகழ் **(நற்கிரியைகளினால் புகழோடு வாழ்தல்)**

நற்கிரியை செய்ய வேண்டுமானால் இறைவன் காட்டிய ஒழுக்க நெறியாகிய அறம் வேண்டும். அறச் செயல்கள் புரிவதால் நற்புகழ் பெருகும்.

அறநெறியில் நின்று கொண்டு நற்கிரியைகள் செய்து புகழ் பெற்றுக் கொள்வதின் மேன்மைகள் இவ்வதிகாரத்தில் விவரிக்கப்படுகின்றன.

பகுதி III

துறவறவியல்

மூன்றாவது பகுதியாகத் துறவற இயல் கூறப்படுகிறது. இல்லற வாழ்க்கையை விட்டு இறைவனோடு அதிக நெருக்கம் அடைவதற்காகத் துறவறம் மேற்கொள்ளப்படுகிறது. இங்கே துறவிகள் மேற்கொள்ள வேண்டிய அறநெறிகள் கூறப்படுகின்றன்.

25. அருளுடைமை **(இறையருள் உடையவராய் இருத்தல்)**

இறையருள் பெற்றுக்கொள்வதே அறம். இறைவன் மனுமக்கள் மேல் இரக்கம் கொண்டு மனு உரு எடுத்து இந்த உலகத்தில் வந்து தம்மையே பலியாக்கி அந்த அருளை மனுமக்களுக்கு அளித்தார். அதுவே உலகுக்குத் தந்த இறைவனின் அருள் என்னும் மீட்பாகிய இரட்சிப்பு அல்லது அறம். துறவிகளுக்கு இறையருள் ஆகிய அறம் மிகவும் தேவை என்பதைக் குறித்து இவ்வதிகாரம் வலியுறுத்துகிறது.

26. புலால் மறுத்தல் **(மாம்சம் உண்ணாதிருத்தல்)**

புலால் மறுத்தல் விவாதத்திற்கு உரியதாகக் காணப்படுகிறது. கிறிஸ்தவர்கள் புலால் உண்ணுகிறார்கள். புலால் மறுத்தல் கிறிஸ்தவத்துக்குப் பொருந்துமா என்ற கேள்வியும் எழுவதுண்டு.

கிறிஸ்தவத்தில் மனிதன் வேறாகவும் மற்ற ஐவகை உயிரினங்கள் வேறாகவும் பிரிக்கப்படுகிறது. மனிதனுக்கு மட்டுமே ஆத்துமா உண்டு. எனவே கொலை என்பது மனிதனைக் கொல்வதை மட்டுமே குறிக்கும்.

ஓரறிவு உயிரைக் கொல்லாமல் மக்கள் உயிர் வாழமுடியாது. பழைய ஏற்பாட்டில் பலி செலுத்துதல் உண்டு. பலியில்லாமல் பாவநிவிர்த்தி இல்லை. அதுபோல இந்தியாவில் பழம் திராவிட வழிபாட்டில் பலி செலுத்தப்பட்டது. அப்படிபட்ட பலிகளைப் புத்த சமண சமயங்கள் கண்டித்தன.

கிறிஸ்துவுக்குப் பின் கிறிஸ்தவத்தில் பலிநிறுத்தப்பட்டது. கிறிஸ்து எல்லா பாவத்துக்கும் பாவ நிவாரண பலியாக ஆக்கப்பட்டபடியால் அது முதல் பலி நிறைவேற்றக் கொள்கை ஆயிற்று. கிறிஸ்து பலி நிறைவேற்றினபடியால் இனிமேல் பலி தேவை இல்லை. அதோடு புலால் உண்ணுதலும் இல்லை.

எனவே தோமா கொண்டுவந்த ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தில் புலால் உண்ணுதல் இல்லை. இதையே ஆதி இந்தியக் கிறிஸ்தவமான சைவ வைணவ மதங்களிலும் பார்க்கிறோம்.

தோமா இந்தியாவுக்கு வரும்போது இந்தியாவில் இருந்த மதங்களில் முக்கியமானது சமண மதமாகும். திருவள்ளுவரும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளும் முன் சமண மதத்தைச் சார்ந்திருக்க வாய்ப்பு உண்டு. எனவே கிறிஸ்தவத்தின் புலால் மறுத்தல் அவருக்குப் புதிதல்ல. இந்தப் பின்னணியத்தில் எழுதப்பட்டதே புலால் மறுத்தல்.

ஆனால் பின்நாட்களில் கிறிஸ்தவத்தில் புலால் உண்ணுதல் குறித்து வேறுபட்ட கருத்துக்கள் எழுந்ததைப் பார்க்க முடிகிறது. போஜனம் நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது என்றும், சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால் நான் என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன் என்றும் பவுல் கூறியிருப்பதைப் பார்க்கிறோம்.

நம் நாட்டில் ஆங்கிலேயர் வரவால் அவர்களுடன் புலால் உண்ணல் வந்தது. அதற்குமுன் புலால் உண்ணுதல் இந்தியக் கிறிஸ்தவத்தில் இல்லை. புலால் உண்ணாமை இப்போதும் சில கிறிஸ்தவத் துறவிகள் கையாண்டு வருகின்றனர். புலால் மறுத்தல் கிறிஸ்தவத்துக்கு முரண்பட்டதல்ல உட்பட்டதே ஆகும்.

திருக்குறளில் இவ்வதிகாரத்தைத் திருவள்ளுவர் துறவற இயலில் சேர்த்திருக்கிறார். துறவிகள் இதனைக் கடைபிடிக்க வேண்டியதென்பது தெளிவு.

திருவள்ளுவர் கிறிஸ்தவரா? என்ற தெய்வநாயகம் அவர்களின் நூலைப் படிக்கவும்.

27. தவம் (துன்பத்தைச் சகித்து இறை தியானத்தில் இருத்தல்)

துறவிகள் தியானத்தில் இறைவனோடு ஒன்றித்திருந்து தவத்தை காத்துக் கொள்ளுதல் அறநெறியில் நிலை பெற்றிருக்க உதவும். துறவிகளின் தவ வாழ்கை குறித்து இவ்வதிகாரம் கூறுகிறது.

28. கூடா ஒழுக்கம் (வெளிவேஷத்திலான ஒழுக்கம் கூடாது)

துறவிகள் உண்மையான அறநெறியில் ஒழுகல் வேண்டும் என்றும்

பொய் ஒழுக்கமும் வெளிவேஷங்களும் கூடாதென்றும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

29. கள்ளாமை (களவு செய்யாதிருத்தல்)

களவு செய்வது அறத்துக்கு மாறான செயல். துறவறத்திலிருப்பவர்கள் களவு செய்வதில்லை. அறநெறிக்கு மாறாக களவு செய்வோர் எரிநரகத்திலும் கள்ளம் கபடில்லாமல் அறநெறியில் வாழ்வோர் பரலோக இன்பத்திலும் சேர்க்கப்படுவார்கள். இவைகளை இவ்வதிகாரம் விளக்குகிறது. களவு செய்யாதிருப்பாயாக என்பது பத்து கட்டளைகளில் ஒன்றாக விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது.

30. வாய்மை (நற்செய்தி கூறல்)

திருவள்ளுவர் வாய்மையைச் சால்பூன்றிய தூண்களில் ஐந்தாவது தூணாக இவ்வதிகாரத்தில் விளக்குகிறார்.

வாய்மை என்பது என்ன?

வாய்மைக்குப் பரிமேலழகர், வாயினால் சொல்லப்படும் மெய் என்று பொருள் கொள்கிறார். மெய்மூன்று வகையால் செயல்படுகிறது. மனோவாக்கு, காயம்.

உள் (மனம்) + மெய் = உண்மெய்
வாய் (வாக்கு) + மெய் = வாய்மெய்
மெய் (காயம்) + மெய் = மெய்மை

மெய்மை

1.	உள்ளத்தால் எண்ணுதல்	=	உண்மை
2.	வாயால் பேசுதல்	=	வாய்மை
3.	மெய்யால் செயல்படுதல்	=	மெய்மை

மெய்மை என்பது என்ன?

உள்ளத்தோடு இணைந்து இந்த மெய்யை வாயினால் கூறினால் அது சிறந்த தவத்தை விடமேல் என்று வள்ளுவர் 295 ஆம் குறளில் கூறுகிறார். மெய் என்பதற்குப் பொதுவாக கூறப்படும் பொருள் நடந்ததை உள்ளபடியே சொல்வது என்பது. இந்தப் பொருள் வள்ளுவர் கூறும் மெய்க்குப் பொருந்துமா?

விளக்கம்

ஒரு நாட்டில் கொடூரச் செயல்களைச் செய்யும் அரசன் தான் செய்த கொடிய செயல்களை உள்ளபடியே சொன்னான் என்று வைத்துக் கொள்வோம். அதை சிறந்த தவத்தைவிடமேல் என்று கூற முடியாது. எனவே வாய்மை மொழிதல், என்பது நடந்ததை நடந்தபடியே கூறுவது அல்ல.

வாயினால் சொல்லும் மெய்

அப்படியானால் வள்ளுவர் கூறும் வாயினால் சொல்லும் மெய் எது? அது என்றும் அழியா ஆதி காரணமாய் விளங்கும் மெய்ப்பொருளாகிய இறைவனே ஆகும். அவ்விறைவனை உள்ளத்தால் எண்ணுவது உண்மை, அவன் புகழை வாயினால் பொழிதல் வாய்மை, அவன் ஏவலை மெய்யால் செய்தல் மெய்மை.

துறவிகள் (ஊழியர்) இறைவனின் நற்செய்தி அறிவிக்க வேண்டுமென்பது இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

31. வெகுளாமை (கோபம் கொள்ளாதிருத்தல்)

கோபம் அறத்துக்கு மறானது. ஒரு துறவி கோபத்தை அடக்கி ஆக வேண்டும். கோபம் கொள்ளுவதால் ஏற்படும் தீமைகளும் கோபத்தை அடக்கிக் கொள்வதால் ஏற்படும் நற்பயன்களும் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன.

இறைமகன் இயேசு இதைப்பற்றிக் கூறுகையில் தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். .... மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின் வந்து உன் காணிக்கையைச் செலுத்து என்கிறார்.

32. இன்னா செய்யாமை (தீமை செய்யாதிருத்தல்)

சிந்தையிலும் தீங்கு நினைக்கக் கூடாது. தீமையை நன்மையினாலே வெல்லவேண்டுமென்பதே விவிலியக் கூற்று. இதை இவ்வதிகாரம் வலியுறுத்துகிறது.

33. கொல்லாமை (கொலை செய்யாதிருத்தல்)

திருவள்ளுவர் கூறும் கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகியவை கிறிஸ்தவனுக்குப் பொருத்தமானவைகளா என்ற கேள்வி எழுப்பப்படுவதுண்டு.

புலால் மறுத்தல் பற்றி 26 ஆம் அதிகாரத்தில் பார்த்தோம். கொல்லாமை என்பது கிறிஸ்தவக் கருத்துக்கு உட்பட்டதாகும். கொலை செய்யாதிருப்பாயாக என்பது பத்துக் கற்பனைகளில் ஒன்றாகும். உயிர்களைப்பற்றி கிறிஸ்தவத்துக்கு முன் இந்தியாவில் பரவியிருந்த சமண மதக்கொள்கைக்கும் கிறிஸ்தவக் கொள்கைக்கும் வேற்றுமை உண்டு.

கிறிஸ்தவத்தில் மனிதன் வேறாகவும் மற்று ஐவகை உயிர் இனங்கள் வேறாகவும் பிரிக்கப்படுகிறது. மனிதன் மட்டும் ஆத்துமா உடையவன். எனவே கொலை என்பது மனிதனைக் கொல்வது மட்டுமே குறிக்கும்.

திருவள்ளுவர் கிறிஸ்தவராகுமுன் சமண மதத்தைச் சார்ந்தவராயிருக்க வாய்ப்புண்டு. அக்கருத்தைக் கொண்டிருந்த வள்ளுவர் கிறிஸ்தவ நிலையில் ஏற்றுக் கொண்டு தம் கருத்துக்களைத் துறவறவியலில் சேர்த்திருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

கிறிஸ்துவுக்குப்பின் பலிநிறுத்தப்பட்டதால் புலால் உண்ணுதலும் நிறுத்தப்பட்டது. தோமாவும் கொல்லாமை போதித்தார் ???? ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களான சைவ வைணவர்கள் புலால் உண்பதில்லை. ஆனால் ஆங்கிலேயர் வரவால் அவர்களுடன் புலால் உண்ணல் வந்தது. ஆனாலும் கிறிஸ்தவத்துறவிகள் இதைக் கைக்கொள்ளுகின்றனர்.

34. நிலையாமை (**உலகின் நிலையாமை குறித்து உணர்தல்**)

உலகம் நிலையற்றது. உலகின் பொருட்கள் அனைத்தும் கூட நிலையற்றவையே. மெய்ப்பொருளாம் இறைவன் மட்டுமே நிலைத்திருப்பவர். உலகின் நிலையற்ற தன்மையைக்குறித்துத் துறவிகள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். நிலையா உலகத்திலிருந்து நிலையான மேலுலகத்துக்குச் செல்வதைக் குறித்தும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

35. துறவு (**பற்று விடுதல்**)

துறவிகள் பற்றுகளை அறுக்க வேண்டும். துறவியாயிருக்க வேண்டுமானால் உலகப்பற்றுகளிலிருந்து முற்றிலும் விடுபட வேண்டும். பற்றினை விடாதோரின் அவலநிலையும் பற்றுகள் விட்டுவிடுவதினால் உள்ள மேன்மைகளும் இவ்வதிகாரத்தில் காட்டப்படுகின்றன.

36. மெய்யுணர்தல் (**மெய்ப்பொருளாகிய இறைவனால் உணர்த்தப்படுதல்**)

துறவிகளான சான்றோர் மெய்ப்பொருளாம் இறைவனை உணர்ந்தவர்கள். அப்படிபட்டவர்களின் தன்மைகளும் மெய்யுணர்வு அடையாதவர்களின் தன்மைகளும் இவ்வதிகாரத்தில் எடுத்துக் காட்டப்படுகின்றன.

37. அவா அறுத்தல் (**அடக்க முடியாத ஆசையை ஒழித்தல்**)

அவா (ஆசை) துன்பத்தைத் தருவதாகும். எனவே சான்றோர் அவாவை ஒழிக்க வேண்டும். அதிலும் மேலாகத் துறவிகள் அவா அனைத்தையும் ஒழித்தால் மட்டுமே துறவறத்தில் நிற்க முடியும். அவாவினால் ஏற்படும் விளைவுகளும் அவா அறுத்தலும் இங்கு எடுத்துக்கூறப்படுகிறது.

பகுதி IV

ஊழியல் (இறைத்திட்டம்)

38. ஊழ் **(இறைத்திட்டம்)**

ஊழ் என்பதற்கு முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளின் பயன் எனப் பொருள் கொள்வார் உண்டு. அவர்கள் ஊழ் என்பது தலைவிதி என்கிறார்கள். தலைவிதி என்னும் பொருள் கொள்ளப்படுமானால் ஊழ் உறுத்து வந்து ஊட்டும் என்பது முரண்பட்டது ஆகிவிடும்.

இறைவன் உலகை ஒரு முறைமையில் நடத்திச் செல்கிறார். இறையடியார் இந்த முறைமையை மாற்றும் ஆற்றலைப் பெறுகின்றனர். அது இறைவனின் அருளால் ஆகும். திருவள்ளுவர் தலைவிதி கொள்கைக்கும் பழவினைக் கொள்கைக்கும் மாறுபட்டவரே என்பதை இவ்வதிகாரத்தில் காணமுடிகிறது.

மேலும் தெளிவுபெற டாக்டர். மு. தெய்வநாயகம் அவர்களின் வள்ளுவர் கொள்ளும் ஊழ் மற்றும் எழுபிறப்பு ஆகியவற்றைப் படிக்கவும்.

திருவள்ளுவர் கடவுள் கொள்கை உடையவர் என்பதற்குச் சந்தேகமில்லை. ஊழுக்கும் கடவுளுக்கும் தொடர்பில்லை. அப்படியானால் திருவள்ளுவர் நிச்சயமாகக் கடவுளுக்குத் தொடர்பில்லாத ஊழைப்பற்றிக் கூறியிருக்க முடியாது.

2. பொருட்பால்

திருக்குறளில் சான்றோர்

திருக்குறளில் மிக முக்கியமானவையாக சான்றோர் சால்பு, சான்றாண்மை ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. சான்றோர் என்பதற்கு சிறந்தவர்கள், உயர்ந்தவர்கள், நல்லவர்கள், நற்குணங்கள் நிரம்பப்பெற்றவர்கள் என்பது பொருள் பொதுவாக சால்பு உடையவர்கள் சான்றோர்கள் எனக்கொள்ளப்படுகிறது. சான்றோர் என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கையால் இணைந்தவர்கள் என்று காணப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் சான்றோர்

சங்க இலக்கியங்களிலிருந்து கிடைக்கும் குறிப்புகளிலிருந்து அவர்கள் உயர்ந்த அறஒழுக்கம் உடையவர்கள் என்றும்,

கொலை வெறியர் அல்லர் என்றும், தாங்கள் துன்புற்றாலும் மற்றவர்கள் உயர்வு அடைய வேண்டும் என்ற விருப்பம் உடையவர்கள் என்றும் அறியப்படுகிறது.

சான்றோர் திருக்குறளில்

திருக்குறளில் சான்றோர் என்னும் சொல் (17) பதினேழு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றோரைப் பற்றி ஒரு தனி அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆண்மை என்னும் சிறப்பு தன்மையும் இணைத்து சான்றாண்மை என்னும் மற்றொரு அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது. சான்றோர் என்று ஒருமையில் ஒரு இடத்திலும், சான்றவர் என்று ஒரு இடத்திலும், சான்றவருடன் இணைந்த சால்பு என்ற சொல்லை மூன்று இடங்களிலும், சாலும் என்று மூன்று இடங்களிலும், சான்றவர் சான்ற என மூன்று இடங்களிலும், சால என மூன்று இடங்களிலும் சான்றோரைப் பற்றி கூறப்பட்டுள்ளன.

சான்றோரின் குணங்கள்

சான்றோரின் குணங்களுள் குறிப்பிட வேண்டியவை களான அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை ஆகிய ஐந்தையும் விளக்கி, ஐந்துதனி அதிகாரங்கள் 50 குறட்பாக்களில் கூறப்பட்டிருக்கின்றன. நூல் முழுவதையும் சான்றோருடன் இணைந்தே கூறி செல்வதாக நாம் கொள்ள கூடிய முறையில் நூலை அமைத்துள்ளார் வள்ளுவர். எனவே திருக்குறள் முழுவதும் சான்றோரைப் பற்றிய விளக்கமே என்று கூறலாம்.

சான்றோரைக்குறித்த குறட்பாக்கள்

சான்றோரைப்பற்றி கூறும் 17 குறட்பாக்களை 13 அதிகாரங்களில் அதாவது (1) நடுவு நிலமை (2) பிறனில் விழையாமை (3) பயனில சொல்லாமை (4) வாய்மை (5) கொல்லாமை .(6) சிற்றினம் சேராமை (7) வினைத்தூய்மை (8) பழைமை (9) பேதமை (10) கள் உண்ணாமை (11) சான்றாண்மை (12) நாண் உடைமை (13) கயமை ஆகிய அதிகாரங்களில் வைத்துள்ளார். மெய் பொருளாம் கடவுளை தக்க

சான்றுகளுடன் மெய்பித்து காட்டும் சாட்சிகளே சான்றோர். சான்றோர் மற்ற உலக மக்களை போல உடல் அளவில் காணப்பட்டாலும் உள்ளத்தால் மாறுபட்டவர்கள். உள்ளம் மாறிபிறந்த இரண்டாம் பிறப்பை உடையவர்கள். இந்த சான்றோரின் பின்னணியம் நோக்கத்தக்கது ஆகும்.

நற்செய்திக்கு சான்று பகருகிறவர்கள்

இயேசு பெருமான் இந்த உலகத்தில் வாழ்ந்த போது பன்னிருவரை தெரிந்து கொண்டு தாம் செய்யப்போகும் தியாகத்தை அவர்களுக்கு அறிவித்தார். தம் தியாகத்தின் நற்செய்திக்கு அவர்கள் சான்றுகளாக விளங்கும்படி அவர்களை ஆயத்தப்படுத்தினார். சிலுவை மரணத்தை கண்ட அவருடைய சீடர்களுக்கு அது ஒரு பெரும் தோல்வியாக காணப்பட்டது. ஆனால் மூன்றாம் நாளில் தோல்வி வெற்றியாக மாறியதை அவர்கள் நேரடியாக கண்டார்கள். இயேசு பெருமான் தான் முன் கூறிய படி உயிர்த்தெழுந்து அவர்களை தேற்றினார். சீடர்கள் புத்துணர்வு பெற்றுக் கொண்டார்கள். தாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் அறிவிக்கும் படி அனுப்பப்பட்டார்கள். இயேசு பெருமான் அவருடைய அடியவர்களுக்கு ஒரு பெயரையும் ஒரு கட்டளையையும் கொடுத்தார்.

இயேசு கொடுத்த கட்டளையும் பெயரும்

நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஸ்டிக்கும் சுவிசேசத்தை பிரசங்கியுங்கள். (நற்செய்தியை அறிவியுங்கள்) *(மாற் 16:15)* இயேசு தமது அடியவர்களுக்கு கொடுத்த பெயர் சான்றுகள் அல்லது சாட்சிகள் என்பதாகும். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் (சான்று) என்றார். அப் *(1:8)*.

யோவானின் சாட்சி

ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கி பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டு பார்த்ததுமாயிருக்கிற ஜீவ வார்த்தைகளை குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது. பிதாவினிடத்தில் இருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நிச்சயமாய் இருக்கிற ஜீவனை நாங்கள் கண்டு அதை குறித்து சாட்சி கொடுத்து உங்களுக்கு அறிவிக்கிறோம். *(1 யோ 1:1,2)* நாங்கள் எல்லோரும் சாட்சிகள் *(அப் 2:32 அப் 3:15, அப் 5:32).*

மேற்கு ஆசியாவில் சாட்சிகள் கிறிஸ்தவர்கள்

மேற்கு ஆசியாவில் இயேசுவின் அப்போஸ்தலர்களாகிய பேதுரு, யோவான், பவுல் ஆகியோர் பற்பல இடங்களில் சென்று சாட்சி கொடுத்தார்கள். அனேக யூதர்களும் யூதர்கள் அல்லாத புற ஜாதியாரும் அந்த சாட்சியை ஏற்றுக்கொண்டு அவர்களும் சாட்சிகளாக மாறினார்கள். ஆனால் சில வருடங்களுக்கு பின் மேற்கு ஆசியாவில் தமஸ்கு பட்டணத்தாராகிய சிலர் இயேசுவின் சாட்சிகளை பரிகசித்து அவர்களை கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்று அழைக்க தொடங்கினார்கள். *(அப் 11:26)* நாளடைவில் மேற்கு ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் எழுந்த சாட்சிகள் கிறிஸ்தவர்கள் என்றே அழைக்கப்படலாயினர்.

இந்தியாவில் சாட்சிகள்

மேற்கு ஆசியாவில் பேதுரு, பவுல், யோவான் போன்றோர் சாட்சி கொடுக்க ஆரம்பித்த போது, அதே நாட்களில் *(கிபி. 52)* அப்போஸ்தலனாகிய தோமா இயேசுவின் நற்செய்தியை குறித்து சாட்சி கொடுக்கும் படியாக இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவில் தோமாவின் சாட்சியை கேட்டு ஏற்றுக்கொண்ட ஆயிரம், ஆயிரம் மக்கள் இறை மகனின் அடியவர்கள் ஆனார்கள். அவர்கள் எல்லோரும்

சாட்சிகள் அல்லது சான்றோர் என்றே அழைக்கப்பட்டார்கள். இவ்வாறு சான்றோர் கூட்டம் (சாட்சிகள் கூட்டம்) இந்தியாவில் பெருக தொடங்கியது. சான்றோர் மிக சிறந்த பண்புகளுடன் காணப்பட்டார்கள்.

திருக்குறளில் விளக்கப்பட்டிருக்கும் சான்றோர், சால்பு, சான்றாண்மை மற்றும் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய சால்பூன்றிய தூண்களாகியவை, திருக்குறளின் உள்ளான கிறிஸ்தவ தன்மைகளை தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன.

திருக்குறளில் சால்பு

ஐந்தவித்தானாகிய இறைவன் அருளிய அறத்தை ஏற்றுக்கொண்ட சான்றோர் இறைவனைப்போல அன்பை உடையவர்களாகவே இருப்பார்கள். சால்பு என்பது நிறைந்திருத்தல், அதாவது நற்குணங்களுக்கு காரணமான ஒழுக்கம் நிறைந்திருத்தல் ஆகும். அவ்வொழுக்கத்திற்கு காரணமானது வான் ஆகிய பரிசுத்த ஆவி ஆகும். யார் யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு (கு. 20).

வான் அல்லது மழை பரிசுத்த ஆவிக்கு ஒப்பிட்டு விவிலியத்தில் கூறப்பட்டிருக்கிறது. மாமிசமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் (அப் 2:17) என்கிறது விவிலியம். பனிபோல பெய்யும் பரிசுத்தரே மழை போல பெய்யும் ஆவியே.. என்பது கிறிஸ்தவ பாடல். சான்றோரின் சால்புக்கு காரணமாய் இருப்பது வான் ஆகும். பரிசுத்த ஆவியினால் (வான்) நிரப்பப்பட்ட ஒருவன் நற்குணங்களால் நிரப்பப்பட்டு ஒழுக்கம் உடையவனாக காணப்படுவான். அன்பு, நாண் ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் சால்பூன்றிய தூண்களாய் காட்டப்படுகிறது.

சால்பூன்றிய தூண்கள்

1. அன்பு:

விவிலியத்தின் ஆதாரமாய் அமைந்திருப்பதே அன்பாகும். விவிலியத்தின் சுருக்கமே தெய்வ அன்பின் வெளிப்பாடாகும். அன்பின் சிறப்பை 1 கொரி 13ம் அதிகாரம் விளக்கி கூறுகிறது. ஒருவன் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும் அன்பு இல்லாவிட்டால் சத்தம் இடுகிற வெண்கலம் போலவும், ஓசை இடுகிற கை தாளம் போலவும் இருப்பான். ஒரு கிறிஸ்தவனுக்கு அன்பு இல்லை என்றால் வேறென்ன இருந்தும் ஒன்றும் இல்லை என்கிறது விவிலியம்.

அன்பை குறித்து யோவான் கூறுவதாவது, அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். (1 யோ 4:7,8).

தேவ அன்பை குறித்து விவிலியம் விளக்கமாய் கூறுகிறது. தேவன் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்தார் என்று (1 யோவா 3:16) கூறுகிறது. நாம் பிழைக்கும்படி தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பினார் என்று (1 யோ 4:9) கூறுகிறது. நாம் அன்பிலே நடந்து கொள்ள வேண்டும் என்று எபே 5:2 ல் பார்க்கிறோம்.

அன்பை அடக்கி கொள்ள முடியாது அது தன்னையே மற்றவர்களுக்காக கொடுக்கும். கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே நாம் தேவ அன்பை குறித்து அறிகிறோம். என்று ரோமர் 5:8 ல் பார்க்கிறோம். சுருங்கக் கூறின் விவிலியம் முழுவதிலும் அன்பை குறித்தே நாம் பார்க்கிறோம்.

2. நாண் :

வள்ளுவர் கூறும் இரண்டாவது சால்பூன்றிய தூண் நாண் என்பதாகும். இந்த நாணம் பெண்களுடைய நாணம் அல்ல. ஒருவன் செய்த தவறுகள் அவன் இரட்சிப்பு அடையும்

பொழுது அவனுக்கு விளக்கி காட்டப்படுகிறது. இந்நிலை ஏற்படும் போது அவன் உள்ளம் தவறான செயலுக்கு நாணம் அடைகிறது. நாணம் அவனை பழைய வழியிலிருந்து திருப்பி புது வழியாகிய பொய்தீர் ஒழுக்க நெறிக்கு கொண்டு செல்லுகிறது. இந்நிலை விவிலியத்தில் மனம் திரும்புதல் இரட்சிக்கப்படுதல் மறுபிறப்படைதல் என்னும் வார்த்தைகளில் கூறப்படுகிறது. இந்த நாண் மனிதருக்கு சிறப்பானது என்று கூறப்படுகிறது. நாண் இருக்கும் ஒருவனிடம் சால்பு உண்டு என்று நிச்சயமாய் கண்டு கொள்ளலாம். தன் பழிக்காகமட்டுமல்ல பிறர் பழிக்காகவும் நாணுவதை சான்றோர் கடமையாக எண்ணுகிறார்கள். அப்படிபட்டவர்கள் நாணுக்கு உறைபதி எனப்படுவார்கள் மட்டுமல்ல அவர்கள் நாணுக்காக உயிரையும் துறப்பவர்கள்.

3. ஒப்புரவு :

இறைவன் தம்மைவிட்டு பிரிந்து சென்ற மனிதனை தம்மோடு மறுபடியும் இணைத்து ஒப்புரவாக்கும் படியாக தம்மை சிலுவையில் பலியாக்கினார். முன்னே அன்னியர்களாய் இருந்தவர்களை தேவன் தமது மரணத்தினாலே ஒப்புரவாக்கினார். (கொலோ 1:20,21) இறைவனின் ஒப்புரவுக்கு கைமாறு இல்லை.

இரட்சிக்கபட்டவர்கள் மற்றவர்களையும் ஒப்புரவாக்க வேண்டும். அதற்கு வானாகிய தூய ஆவியின் துணை தேவையாகும். தூய ஆவியினால் நிரப்பபட்டவன் அவன் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற்று கொள்ள செய்கிறான். இது பாடுகள் நிறைந்த ஒரு செயல் ஆகும். இயேசுபிரானை பின்பற்ற விரும்புகிறவர்கள் சிலுவையை எடுத்து கொண்டு அவரை பின்பற்ற வேண்டும். (மத் 16:24)

4. கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்பது தம்மிடம் நன்மையை பெற்று பின் அதை மறந்த நிலையில் தம்மை துன்புறுத்துபவர்கள் மீதும் இரக்கம் கொண்டு அதை மன்னிப்பது ஆகும். இயேசு தம்மை சிலுவையில் அறைந்த வேளையிலும் பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று வேண்டிக் கொண்டார். (லுக் 23:34) அவர்

போதனையில் ஏழு எழுபது தரம் மன்னிக்க சொன்னார். (மத் 18:22) சீஷருக்கு கற்று கொடுத்த ஜெபத்தில் நாங்கள் மன்னிக்கிறது போல எங்களுக்கு மன்னியும் என்று ஜெபிக்க சொன்னார். (மத் 6:12) மன்னியாதவனை குறித்த ஒரு உவமையும் ஜனங்களுக்கு சொல்லி விளக்கினார்.

இயேசுபிரான், மனிதன் அடைய வேண்டிய தண்டனையை தாமே ஏற்றுக் கொண்டு, அதை சிலுவையில் நிறைவேற்றினார். இறைவனே பலியானதினால் உலக மக்களுக்கு வர வேண்டிய தண்டனையை அவர்களுக்கு பதிலாக தாமே ஏற்றுக்கொண்டார். மனுகுலம் தப்புவிக்கப்பட்டது. அவர் மக்களுக்கு காட்டிய வழியும் அதுவே.

5. வாய்மை :

வள்ளுவர் கூறும் சால்பூன்றிய தூண்களில் ஐந்தாவது தூண் வாய்மை என்பதாகும். மெய் பொருளாம் இறைவனை உள்ளத்தில் கொண்டு அவர் நற்செய்தியை வாயினால் கூறுவதே வாய்மை (அதி 30: வாய்மை காண்க)

இவ்வாய்மையே சான்றோர் சால்பு அலைகளை பரப்ப பயன்படுத்துவது ஆகும். ஒளியுடன் கூடியதே விளக்கு. ஒரு விளக்கு தான் பெற்ற ஒளியை மற்ற விளக்குகளுக்கு கொடுத்த பின்னரும் தன் ஒளி குன்றாதிருப்பது போலவும் மற்ற விளக்குகளுக்கு ஒளியை கொடுத்து அவைகளை ஒளிர செய்வது போன்றும் சான்றோர் தமது அகத்து உள்ள ஒளியை மற்றவர்களுக்கு கொடுத்து மற்றவர்களையும் ஒளிர செய்ய வேண்டும் இதற்கு கருவியாய் இருப்பதே வாய்மை.

திருக்குறளில் சான்றாண்மை

பயந்த பேதுரு :

இயேசு பெருமானின் அடியவர்கள் கூட்டம் சான்றோர் (சாட்சிகள்) என அழைக்கப்பட்டார்கள். இயேசுபெருமான்

பகைவர்கள் கையில் அகப்பட்டபோது எல்லோரும் ஓடிவிட்டார்கள். பேதுருவோ தூரத்திலே பின் சென்றான். பிரதான ஆசாரியன் வீட்டு முற்றத்தில் நெருப்பின் அண்டையில் உட்கார்ந்தான். அங்கு கூடி இருந்தவர்களில் ஒரு ஸ்திரி அவனை உற்றுப் பார்த்து இவனும் அவனோடிருந்தான் என்றாள் அதற்கு அவன், அவனை அறியேன் என்று மறுத்தலித்தான். அதன் பின்பும் இரண்டு தரம் மறுத்தலித்தான். அப்பொழுது சேவல் கூவிற்று இயேசுவின் கூற்றை நினைவு கூர்ந்து மனம் கசந்து அழுதான். (லூக் *22:56-60*)

மாற்றம் அடைந்த பேதுரு :

ஒரு வேலைக்காரிக்கு முன் பயந்த பேதுருவை, இயேசு உயிர்த்தெழுந்து பரத்துக்கு எடுத்து கொள்ளப்பட்டு பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்ட போது, பரிசுத்த ஆவியை பெற்ற அவனை முற்றிலும் மாறுபட்டவனாக, மாற்குவின் மேல் வீட்டறையில் பார்க்கிறோம். ஜனங்கள் திரள் கூட்டமாய் வந்தபோது, இயேசுவை குறித்து தைரியமாய் அவர்கள் முன் சான்றுபகர்வதை (அப் *2:31-33*) ல் பார்க்கிறோம். அவன் இந்த இயேசுவை நீங்கள் கொலை செய்தீர்கள். தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம் என்று ஆண்மையுடன் சான்றுபகர்ந்தான்.

ரோம அரசாங்கத்தினர் பேதுருவை கொலை செய்வதற்காக அவனை பிடித்து சிறைச்சாலையில் அடைத்து பயமுறுத்திய நேரங்களிலும் அவன் தைரியத்தோடு ஆண்மையுடன் ஜனங்களுக்கு முன் சான்று பகர்ந்தான்.

சால்புடையவர்களாக்குகிறவர் :

சான்று + ஆண்மை = சான்றாண்மை. சான்றோரை சால்பு உடையவர்களாக்கி சான்றினை ஆண்மையுடன் சொல்லும் திறன் உடையவரே ஆவியானவர். அப்படிப் பட்டவர்கள் பரிசுத்த ஆவியை பெற்று எல்லா நற்பண்புகளாலும் நிரப்பப்படுகிறார்கள். பின்பு அவர்கள் அவ்

வின்பத்தை மற்றவர்கள் அடையும் பொருட்டு மற்றவர்களுக்கு சான்றாக அறிவிக்கிறார்கள். அவ்வாறு சான்று கூறுகிறவர்கள் எதற்கும் அஞ்சாது ஆண்மையுடன் கூறும் காரணத்தால் அவர்கள் சான்றாண்மை உடையவர்களாக திகழ்கின்றனர். எல்லா நற்குணங்களும் பெற்ற சால்புடையவன் (சான்றோன்) ஆண்மையுடன் சான்று கூறுகின்றான்.எனவே ஒருவன் சான்று கூற சால்பாகிய குணம் வேண்டும். அச்சால்பாகிய குணத்தை கொடுப்பவர் பரிசுத்த ஆவி. எனவே ஒருவனிடம் பரிசுத்த ஆவி வரும்போது அவன் சால்பாகிய வல்லமை பெற்று எவ்விடத்தும் சான்று கூறும் சான்றாண்மையை பெறுகிறான்.

பொருட்பால் விளக்கம்

அருட்பொருள், பொருட்பொருள்

இறைவன் தம் பொருளாக கொண்டிருக்கும் மனுக்குலத்துக்கு உதவியாய் இருப்பது பொருட் பொருளும், அருட்பொருளுமாகும். இவ்வுலக வாழ்க்கைக்கு பொருட்பொருள் தேவைப்படுகிறது. அருட்பொருள் இறைவன் தருவது எதற்கென்றால் இவ்வுலகத்தில் அமைதியோடும் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் இன்புற்று வாழ்ந்து மறுமையில் நித்திய வீட்டை அடைந்து பேரின்பத்தை பெற்று கொள்வதற்காகும். பொருட்பொருள் உலகத்தோடு நின்று விடுகிறது. அருட்பொருளோவென்றால் மனிதனை இவ்வுலக வாழ்விற்குபின் நீடுவாழ்விற்கு கொண்டு செல்வதாகும். இவ்வுலகத்தில் அறமாகிய இரட்சிப்பை பெற்று வாழ்கிறவர்கள் மரணத்துக்கு பின் நீடுவாழ்வுக்கும், அறமாகிய இரட்சிப்பை பெற்று கொள்ளாதவர்கள் மரணத்துக்குபின் இருளாகிய நரகத்திற்கும் சென்று சேர்கிறார்கள்.

உரையாசிரியர்கள் கருத்து

இக்கருத்தை மனதில் கொண்டே காலிங்கர் போன்ற பழைய உரையாசிரியர்களும் மற்றும் ஆராட்சியாளர்களும் திருவள்ளுவர் பொருட்பொருளையும் (உலகப்பொருள்) அருட்பொருளையும் (மறுமைப்பொருள்) மனதிற்கொண்டு

தான் திருக்குறளின் பொருட்பால் பகுதியை இயற்றினார். என்று கூறியிருக்கிறார்கள்.

சமூகவாழ்கையில் அறநெறி

அறத்தையே மையமாக கொண்ட திருக்குறள் முழுவதும் அறநெறிகளையே போதிக்கிறது. அறத்துப்பால் பகுதியில் இல்லற வாழ்க்கையிலும் துறவற வாழ்க்கையிலும் மனுமக்கள் கடைபிடிக்க வேண்டிய அறநெறிகள் விளக்கப்படுகிறது. பொருட்பால் பகுதியில் சமூக வாழ்க்கையில் மனுமக்களுக்கு இருக்க வேண்டிய அறநெறிகள் விளக்கப்படுகின்றன. சமூக வாழ்க்கை என்பது குடும்ப வாழ்க்கையை விட்டு வேறுபட்ட ஒன்று அல்ல. மனுமக்கள் குடும்பம் குடும்பமாக சமூக வாழ்க்கையை அமைத்து கொள்ளுகிறார்கள். எனவே சமூக வாழ்க்கை குடும்ப வாழ்க்கையோடு மிகவும் இணைந்ததேயாகும். அறத்துபால் பகுதியும், பொருட்பால் பகுதியும் மிகவும் நெருக்கம் உடையதாய் அமைகிறது. ஒருவன் இல்லறவாழ்க்கையிலும் (குடும்ப வாழ்க்கையிலும்) துறவற வாழ்கையிலும் சமூக வாழ்க்கையிலும் அறநெறியோடு வாழ கடமைபட்டவனாகும்.

குடி ஆட்சியும் இறை ஆட்சியும்

சமூக வாழ்க்கையில் அரசு, அமைச்சு, படை முதலிய அமைப்புகள் உண்டு. அந்த தேசத்து மக்கள் அந்த ஆட்சியின் அமைப்புகளில் ஈடுபட்டு இருப்பவர்களே. ஒவ்வொருவருக்கும் அவரவர் அமைப்புக் கேற்ற நற்பண்புகள் உண்டு. உலக சமுதாய மக்களுக்கு தங்கள் கடமைகள் இதோடு முடிவடைந்து விடுவதில்லை. ஏனென்றால் அவர்கள் எல்லாரும் அருள் ஆட்சிக்கும் உட்பட்டவர்களே. அவர்களிடம் அருளாட்சிக்கு உகந்த நற்பண்புகளும் இருக்க வேண்டும். உலக அரசின் குடியுரிமையும், விண் அரசின் குடி உரிமையும் பெற்று வாழ வேண்டும் என்பதே இப்பகுதிகளில் காணப்படுவது. அதாவது பொருள் ஆட்சிக்கு (உலக அரசு) உட்பட்ட ஒருமனிதன், அருள் ஆட்சிக்கும் அல்லது இறை ஆட்சிக்கும் (விண் அரசு) உட்பட்டிருக்கிறான். அறவழியில் அதாவது பொய்தீர் ஒழுக்க நெறியில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவன் இவ்விரு

ஆட்சிக்கும் உகந்தவனாகி வாழ்ந்து முடிவில் பேரின்ப வாழ்வாகிய நீடுவாழ்வில் பிரவேசிக்கிறான்.

பகுதி 1

அரசியல்

பொருட்பாலில் மனுகுலத்திற்கு ஆதாரமான பொருட்பொருள், அருட்பொருள் ஆகிய இரண்டும் இயங்குவது காட்டப்பட்டுள்ளது. மனு மக்களின் முன்னேற்றத்திற்கு ஆதாரமாய் இருப்பது மனுமக்களின் ஆட்சிமுறை ஆகும். அதை திருவள்ளுவர் முதற்பகுதியில் இருபத்தைந்து (39 முதல் 63 வரை) அதிகாரங்களில் கூறி உள்ளார்.

39. இறைமாட்சி

ஒரு நாட்டின் குடிகளாக அமைவது இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள குடும்பத்தாரும், துறவறம் மேற்கொண்டுள்ளவர்களும் ஆகும். அவர்கள் நிலை குறித்து முதற்பகுதியில் பார்த்தோம். அவர்களுள் அறவழியில் நிற்கும் கூட்டத்தாரும் நில்லாத கூட்டத்தாரும் உண்டு. அவ்விருகூட்டத்தாரும் அரசனுக்கு குடிமக்களாய் அமைகிறார்கள்.

இவர்களுள் அறமாகிய இரட்சிப்பை ஏற்றுக்கொண்டவர்கள் இறைவன் அருளிய பொய்தீர் ஒழுக்கநெறியில் நடக்கிறார்கள். அவர்கள், இவ்வுலக அரசுக்கு குடிமக்களாய் இருந்தபோதிலும், இவ்வுலகத்தில் வாழும் போதே விண்ணரசின் குடிகளாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு இரு குடி உரிமைகள் உண்டு.

விண்ணரசின் அரசன் ஐந்தவித்தானாகிய இறைமகன் இயேசுவே அவரே உலகு அனைத்திலும் உள்ள இரட்சிக்கப்பட்ட மக்களாகிய சபைக்கு தலைவர். காணக் கூடாத இறைமகன் இயேசு தலையாகவும் காணக்கூடாத சபை சரீரமாகவும், ஒரு விண் அரசு பூமியில் செயல் ஆற்றி கொண்டிருக்கிறது.

அந்த அரசின் அரசன் இயேசுராஜா. அவருக்கு சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்ற பெயரும் உண்டு. அவருடைய சேனை கோடி கோடியான தூதர்கள். அந்த அரசின் குடிமக்கள் இரட்சிக்கப்பட்டு பொய்தீர் ஒழுக்க நெறியில் நடக்கும் மக்கள். அவர்கள் திருச்சபையார் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த அரசுக்கு சத்துரு யார் என்றால் சாத்தானும் அவனுடைய சேனைகளுமாகும் (துரைத்தனங்கள் அதிகாரங்கள், அந்தகார லோகாதிபதி, வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள்) திருச்சபைக்கும் சாத்தானின் சேனைக்கும் யுத்தம் ஓயாமல் நடந்து கொண்டேயிருக்கும். திருச்சபையின் தலைவர் கிறிஸ்து ஆனால் திருச்சபையை இந்த உலகத்தில் நடத்திச் செல்வதற்கு தேவ ஊழியர்கள் உண்டு.

திருவள்ளுவர் பொருட்பாலில் குறிப்பிடும் குறட்பாக்கள் உலக அரசுக்கும் அதேநேரத்தில் ஆவிக்குரிய அரசுக்கும் பொருத்தமானதாகும்.

ஆவிக்குரிய அரசின் குடிமக்கள் திருச்சபையே ஆகும். அதாவது இரட்சிக்கப்ட்டு அறவழியில் நடக்கும் மக்கள். கூழ் என்பது தேவனுடைய வார்த்தை. அமைச்சு என்பது வசனம் போதிக்கும் ஊழியர்கள். சமூகவாழ்வில் நட்புமிகவும் அவசியம். அது திருச்சபை மக்களிடையே உள்ள அன்னியோன்னியம் ஆகும். படை, அரண் ஆகியவை பாதுகாப்புக்கானவை ஆகும். இறைவனே தளகர்த்தர் சத்துருவாகிய சாத்தானையும் அவன் சேனைகளையும் எதிர்ப்பதற்கு திருச்சபையின் ஒவ்வொருவரும் வேதத்தில் கூறப்படும் போராயுதங்களை அணிந்து கொண்டு யுத்தம் செய்யவேண்டும். (எபே 6:13-17)

40. கல்வி **(கற்றுக்கொள்வது)**

ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர் கல்வி கற்றவராயிருக்க வேண்டும். அவர் கற்றறியவேண்டியவை அறநூலும், நீதிநூலும் போன்று நன்மை தரக்கூடியவையாயிருக்க வேண்டும். ஆட்சித்தலைவன் மட்டுமல்ல மக்கள் கற்பதால் உள்ள மேன்மைகள் எவையென்றும், கல்லாததால் ஏற்படும் இழிவு எத்தகையதென்றும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

கற்கவேண்டியதையே கற்றுக்கொள்ளவேண்டும் அரசன் அறம்,பொருள் இன்பம் வீடு ஆகியவற்றை சரியாய் கற்று அவைகளின் படி ஒழுகினால், மக்களை அவ்வழியில் நடத்திச்செல்ல இயலும். ஆட்சித்தலைவன் தனக்காக மட்டுமல்ல, மனுக்குலத்துக்காகவும் பயன்பட்டு மக்களை அறமாகிய இரட்சிப்பின் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது.

41. கல்லாமை **(கற்று கொள்ளாத நிலை)**

கல்வியறிவு இல்லாத அதாவது உண்மை அறிவுதரும் அறநூல்களை கற்றறிந்து அதன் அடிப்படையில் (அறநெறியில்) வாழாதவனுடைய பரிதாபமான நிலை இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது

42. கேள்வி **(கேட்டு உட்கொள்ளும் தன்மை)**

ஒருவன் இறைவார்த்தையை கேட்டு பெலன் அடைவது செவிச்செல்வத்தினாலாகும். உலகில் துன்பம் ஏற்படும் நேரத்தில் அருள்வார்த்தை அவனை ஊன்ற கட்டுவது போன்றதாகும்.

நற்செய்தியை கேட்டு உட்கொள்வதால் ஒருவன் அறமாகிய இரட்சிப்பின் வழியில் வந்து விடுவான் அப்படிப்பட்டவர்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் அனுபவிப்பார்கள் என்பதை இவ்வதிகாரம் விளக்குகிறது.

43. அறிவுடமை **(அறிவுடையவராய் இருத்தல்)**

இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் அறிவுடையவராயிருத்தலின் சிறப்புகளை விளக்குகிறார். மெய்பொருளாம் இறைவனை காண்பதே அறிவு என்கிறார். அதுவே அறவாழ்க்கை. ஒருவனை கேடுவராமல் காப்பதும் நன்மைக்கு கொண்டு செல்வதும், அன்பால் அணைப்பதும் அதுவே. எனவே அறிவை

அதாவது உண்மை அறிவை சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்று இவ்வதிகாரம் விளக்குகிறது.

44. குற்றம் கடிதல் (**குற்றங்களை கடிந்து மாற்றுதல்**)

தேசமக்களும் ஆட்சித்தலைவரும் தங்கள் குற்றங்களை கடிந்து மாற்றி அறவாழ்க்கை மேற்க்கொள்ள வேண்டுமென்பதே திருவள்ளுவரின் கூற்று. ஆட்சிக்கு மேம்பாட்டைத் தரும் தன்மைகளையும் அதோடு மாற்றப்பட வேண்டிய குற்றங்களும் இவ்வதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

45. பெரியாரை துணைக்கோடல் (**பெரியவர்களின் துணை கொள்ளுதல்**)

ஒரு நாட்டையும் நாட்டு மக்களையும் காக்க வேண்டிய ஆட்சித்தலைவன் அறமாகிய இரட்சிப்பை முதிர்ந்த அறிவு பெற்ற பெரியாரின் துணையால் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்களின் துணையால் மக்களை பொய்தீர் ஒழுக்கநெறியில் நடத்தி இக பர நன்மைகளை பெற்றுத்தர முடியும். அத்தகைய ஆட்சித்தலைவனுக்கு கிடைக்கபெறும் வலிமையைக் குறித்தும் துணை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு நேரிடும் இடுக்கண்களையும் குறித்தும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

46. சிற்றினம் சேராமை (**சிறியவரோடு சேராதிருத்தல்**)

பெரியவர்களின் துணை நாடுவதன் சிறப்பு பற்றி முந்தைய அதிகாரத்தில் கூறப்பட்டது. இவ்வதிகாரத்தில் சிறியவரிடம் ஏன் சேரக்கூடாது என்று முதலில் காரணம் கூறப்படுகிறது. ஒருவனின் அறிவு மதிப்பு புகழ் ஆகியவற்றை தருவது அவன் சார்ந்திருக்கும் இனத்தை பொறுத்திருக்கும்.

அதோடு சான்றோர் இனத்தை சார்ந்திருப்பதன் நன்மைகளைக் குறித்து இவ்வதிகாரத்தில் விவரிக்கப்படுகிறது. ஒருவனுக்கு காவலாய் அமைவது, மறுமை இன்பத்திற்கு வழி காட்டுவதும் இன்பத்திற்கு நல்ல துணை தருவதும் சான்றோர் இனம் என்பது சிறப்பாய் விளக்கப்படுகிறது. இது பெரும்பாலோனோர் அறவழியில் (இரட்சிப்பின்) வழியில் செல்லுவதற்கு ஊக்குவிப்பதாகும்.

47. தெரிந்து செயல் வகை (**ஆராய்ந்து செய்தல்**)

ஒரு செயலை செய்யும் போது நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னரே அதை செய்ய வேண்டும். ஆராய்ந்து பார்த்து செய்வதினால் ஏற்படும் நன்மைகளும் ஆய்ந்து செய்யாததால் வரக்கூடிய தீமைகளும், இவ்வதிகாரத்தில் சுட்டிக்காட்டப்படுகிறது.

48. வலி அறிதல் (**தம் வலிமை அறிதல்**)

ஒருவன் எந்த செயலையும் தன் வலிமையை அறிந்து செயல்பட வேண்டும். அப்படி செய்வதால் ஒருவனுக்கு கூடாதது என்று ஒன்று

இருப்பதில்லை. தன் வலிமையை ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் செயல்படுகிறவனின் நிலைமைகளை குறித்தும் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

49. காலமறிதல் **(ஏற்ற காலம் அறிதல்)**

உலக வாழ்க்கையில் ஒருவன் காலம் அறிந்து செயலாற்றுதல் மிகவும்முக்கியமான ஒன்றாகும். ஒரு ஆட்சித்தலைவன் தம் பகைவரோடு போர் செய்வதற்கு ஏற்ற காலம் பார்த்திருப்பது மிகவும் அவசியமானதாகும். காலத்தை கருத்தில் கொண்டு திறன்பட செயலாற்றுவதின் சிறப்புகளைப்பற்றி இவ்வதிகாரம் விளக்கி கூறுகிறது.

50. இடனறிதல் **(வாய்ப்பான இடம் அறிதல்)**

தகுந்த இடத்தை அறிதல் ஒருநாட்டின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியம் ஆகும். போர் செய்வதற்கு பகைவரின் கோட்டை கொத்தளங்கள் இருக்கும் இடம் அறிய வேண்டியதாகும். தம் கோட்டைக்குள் பகைவர் தாக்குவது அரிது. எனவே அதைப்பற்றிக் கொள்ளுதல் முக்கியமானது. முதலை திறன்பட செயல்படும் இடம், நீர் கப்பல் செல்லும் இடமும் ஆழ்கடல். அவ்விடத்தை விட்டால் அவைகளுக்கு பெலன் இல்லை. வலிமை கொண்ட யானைகூட சேறான இடத்தில் சிக்கினால் பெலன் இழக்கும். இவைகளை நன்கு அறிந்து வாய்ப்பான இடத்தை நாடி பற்றி கொள்ளுதல் பாதுகாப்புக்கு மிகவும் தேவையாகும். போன்றவை இவ்வதிகாரம் விளக்குகிறது.

51. தெரிந்து தெளிதல் **(அறிந்துசெயல்படுதல்)**

அறம்,பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அறிந்து செயல்பட வேண்டும் என்று இவ்வதிகாரம் விளக்குகிறது. ஆட்சிதலைவன் ஆனாலும் சரி, குடிமக்களானாலும் சரி இதை நன்கு உணர வேண்டும். குற்றம் இல்லாதவர் எவரும் இல்லை. ஆனால் குற்றத்தை அறிந்து நாணி மனம் திருப்புதலே மேல். ஒரு ஆட்சித் தலைவன், தமதாட்சியில் இருக்கும் மக்களை செவ்வையான பாதையில் நடத்த எப்படிபட்டவர்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

52. தெரிந்து வினையாடல் **(தெரிந்து தெளிந்தவரை தகுதிக்குஏற்ப செயலுக்கு ஏற்படுத்துதல்)**

ஒரு ஆட்சித்தலைவன் தன் ஆட்சிபொறுப்பில் பணிபுரிவதற்கென தகுதியானவர்களை ஆராய்ந்து பார்த்து அறிந்த பின்னே ஏற்படுத்த வேண்டும். நல்லாட்சி நடைபெறுவதற்கு அறநெறியோடு அறிவு தெளிவும் செயல்முறையும் இணைந்தோரையே ஆட்சிபொறுப்பில் அமர்த்த வேண்டும், போன்ற கருத்துக்களை இவ்வதிகாரம் விளக்குகின்றது.

53. சுற்றந்தழால் (சுற்றத்தாரை அணைத்தல்)

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருப்பவரும் அறநெறியில் இருக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்து. இரட்சிப்பின் பாதையில் இருக்கும் ஆட்சியாளர் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதற்காக தம்மோடு சுற்றத்தாரையும் சேர்த்துக்கொள்ளுவார். அவ்வாறு சேர்க்கப்படும் சுற்றத்தாரை ஆட்சியாளர் பாசத்தோடு அணைத்துக்கொள்வதே சிறந்தது என்று இவ்வதிகாரம் காட்டுகிறது.

54. பொச்சாவாமை (அசதி)

ஆட்சியாளர் ஆட்சியில் ஏற்படும் உலக சந்தோஷத்தாலும் உலக இன்பத்தாலும் மதிமயங்கி தன் கடமைகளை கவனியாமல் அறநெறியை (இரட்சிப்பின் வழியை) மறந்து வாழுதல் ஆபத்தானது என்றும் அது நாட்டிற்கே தீங்கு விளைவிப்பது என்றும் இவ்வதிகாரத்தில் கூறப்படும் குறட்பாக்கள் காட்டுகின்றன. இது இறைப்பணி தலைவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

55. செங்கோன்மை (செம்மையான ஆட்சிமுறை)

அறநெறியில் நிற்கும் ஆட்சியாளன் சீரான முறையில் உள்ள ஆட்சிமுறை கையாளுவான். நாட்டு மக்களை அரவணைத்து அவர்களுக்கு ஏற்ற முறையில் ஆட்சி அமைப்பதையே அவன் நாடுவான். அப்படிப்பட்ட ஆட்சியாளனின் ஆட்சிக்குள் அமையப்படும் நல்லாட்சி முறையை குறித்து இவ்வதிகாரத்தில் பார்க்கிறோம். உலகில் ஆட்சியாளர் இரட்சிக்கப்பட்ட அனுபவத்தில் இருந்து மக்களையும் அவ்வழி நடத்துவதே சரியான முறை என்று காண்பிக்கப்படுகிறது.

56. கொடுங்கோன்மை (கொடுங்கோல் ஆட்சி)

ஒருநாட்டில் முன்னேற்றத்திற்கு கொடுங்கோல் ஆட்சி எவ்வளவு தீமையானது என்று இவ்வதிகாரம் எடுத்து கூறுகிறது. அப்படிப்பட்ட நாட்டில் வாழும் மக்கள் எத்தகைய துன்பங்களுக்கு ஆளாகவேண்டி இருக்கும் என்பதும் விளக்கப்படுகிறது. மட்டுமல்ல இறை அருள் இல்லாத தன்மை மக்களின் சீர் அழிவுக்கு காரணமாகும் என்றும் அறம் அற்றவாழ்வு (இரட்சிப்பின் அனுபவம் இல்லாத வாழ்வு) நாட்டில் எவ்விதமான சீர்கேடுகளை உண்டாக்கும் என்பதும் விளக்கப்படுகிறது.

57. வெருவந்த செய்யாமை (பயமுறுத்தாமை)

சீரான ஆட்சித் தலைவன், தமதாட்சியில் இருப்பவர்களையும், தம் குடிமக்களையும் சீராக கொண்டு செல்வானே தவிர கொடிய முறையில் பயமுறுத்த மாட்டான். கொடிய முறையில் பயப்படுத்துவதன் நிமித்தம் ஏற்படும் தீங்குகளையும், ஆட்சித்தலைவன் அமைச்சர்களிடத்தில் சினம் கொள்ளுவதினால் வரும் கேடுகளையும் இவ்வதிகாரம் விளக்குகிறது. இறைப்பணி தலைவர்களும் இவைகளை கவனிக்கத்தக்கதாகும்.

58. கண்ணோட்டம் (மன்னிக்கும்மனப்பான்மை)

கண்ணோட்டம் என்பது மன்னிக்கும் மனப்பான்மையாகும். இறைவனுக்கு சான்றாக விளங்கும் சான்றோருக்கு சிறப்புடன் விளங்கும் பண்புகளை திருவள்ளுவர் சால்பூன்றிய தூண்களாக காட்டி இருக்கிறார். அதில் நான்காவது தூணாக விளக்கப்படும் சிறந்த பண்பு கண்ணோட்டம் என்பதாகும். கண்ணோட்டத்தை அதாவது மன்னிக்கும் மனப்பான்மையை மனுகுலத்திற்கு திறந்து அளித்தவர் இறைமகனாகிய இயேசுவே.

அவர் சிலுவையில் அறையப்பட்ட வேளையிலும் அறைந்தவர்களை மன்னித்தது மட்டுமல்ல, பிதாவோடு வேண்டிக்கொள்ளவும் செய்தார். பிதாவே இவர்களுக்கும் மன்னியும் தாங்கள் செய்கிறது என்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார், இந்த மன்னிப்பின் காரணமாகவே உலகம் நிலை பெற்றிருக்கிறது.

இந்த பண்பு சான்றோருக்கு மட்டும் அல்ல ஆட்சியாளருக்கும், ஆட்சியின் கீழ் அமைந்துள்ள குடிமக்களுக்கும் தேவையானதேயாகும் என்பதே வள்ளுவர் கருத்து. மன்னிப்பின் மனப்பான்மையின் சிறப்புகளைக் குறித்தும் மனுகுலத்திற்கு மன்னிப்பளித்த இயேசு பிரானின் மன்னிப்பைக் குறித்தும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

59. ஒற்றாடல் (ஒற்றர்களை வைத்தல்)

முற்காலங்களில் எதிரிகளை ஒழிப்பதற்கும் பிறர்க்கு தீமை செய்யும் பொருட்டும் இத்தகைய காரியங்களுக்காக ஒற்றர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். ஆனால் திருக்குறளில் கூறப்பட்டிருப்பது நாட்டின் நலனுக்காக செயல்படக்கூடிய அமைப்பாக நாம் பார்க்கிறோம். ஆட்சியாளரின் நேர்மையான வாழ்க்கை நாட்டு மக்களுக்கு நேர்மையை கொடுக்கும். ஒற்றர்கள் ஆட்சிக்கு உதவுவதை இவ்வதிகாரம் விளக்குகிறது. ஒற்றர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை குறித்தும் அவர்களை நாட்டின் நன்மைக்காக ஆட்சியாளர் எவ்விதம் பயன்படுத்த வேண்டும் என்பதை குறித்தும் இவ்வதிகாரம் கூறுகிறது.

60. ஊக்கம் உடைமை (ஊக்கம் உடையவராயிருத்தல்)

ஆட்சிப்பொறுப்பில் இருப்பவருக்கு அவசியம் இருக்க வேண்டிய முக்கியமான ஓர் பண்பு உள்ளத்தில் ஊக்கம் இருக்கவேண்டும் என்பதாகும். அறநெறியில் வாழும் ஓர் ஆட்சியாளர் எந்த சூழ்நிலையிலும் தயங்காமல் உள்ளத்தில் ஊக்கம் உடையவராய் இருக்க முடியும். ஏனென்றால் அவர் மெய்பொருளாம் இறைவனை தனக்கு எல்லா நிலையிலும் பெலனாக கொண்டிருப்பார். அப்படிப்பட்ட ஓர் ஆட்சியாளரின் தன்மை எவ்வாறு இருக்கும் என்றும் எம்முறையில் இராது என்றும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

61. மடி இன்மை (சோர்பு இல்லாது இருத்தல்)

மடி அல்லது சோம்பல் அறவோர் வெறுக்கும் ஓர் தன்மை ஆகும். சோம்பேறியின் வாழ்க்கையை விவிலியம் பல நிலைகளில் கண்டிக்கிறதைப்

பார்க்கலாம். ஒரு நாட்டை ஆளுகை செய்யும் ஆட்சியாளன், சோர்வு என்னும் குணத்தை உடையவராக இருத்தல் கூடாது. அவ்வாறே அந்நாட்டில் வாழும் குடி மக்களும் சோம்பேறிகளாய் இராமல் இருக்க வேண்டும். என்பதை குறித்து இவ்வதிகாரத்தில் எல்லா குறள்பாக்களும் வலியுறுத்துகின்றன.

62. ஆள்வினை உடைமை **(மெய் முயற்ச்சி உடையவராய் இருத்தல்)**

முயற்சி, ஆட்சியாளருக்கு இன்றியமையாததாகும். ஆட்சியாளர் மட்டுமல்ல ஒரு நாட்டில் வாழும் யாவருமே முயற்சி உடையவர்களாக இருக்க வேண்டும். சான்றோர் வாழ்க்கையில் காணப்படும் சிறந்ததோர் பண்பும் முயற்சியே. முயற்சியால் ஏற்படும் நன்மைகள் முயற்சி இன்மையால் விளையும் தீமைகள். ஆகியவை இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன.

63. இடுக்கண் அழியாமை **(துன்பம் நிகழும் போது மனம் கலங்காமை)**

இது பொருட்பாலில் முதல் பகுதியான அரசியலின் இறுதி அதிகாரம் ஆகும். இவ்வதிகாரத்தில் துன்பம் நேரும் காலங்களில் மனம் கலங்காமல் இருக்கும் ஒரு விஷேசதன்மையை குறித்து விளக்கப்படுகிறது. இந்த தன்மை அறவோரான சான்றோரிடம் காணப்படும் தன்மை ஆகும். ஒரு நாட்டின் ஆட்சிபுரியும் ஆட்சியாளரும் அவர் சுற்றத்தாரும் குடிமக்களும் அறநெறியில் (இரட்சிப்பின் பாதையில்) வாழ்வதே ஐந்தவித்தானாகிய இறைவனின் விருப்பம் என்று நாம் அறிய முடிகிறது. இரட்சிக்கப்பட்ட ஒருவன் இறையருளை சார்ந்து இருப்பதால் துன்பம் வரும் காலத்தில் அவன் மனம் கலங்க வேண்டியதில்லை எனவே நாட்டு மக்கள் யாவரும் இறையருள் பெற்று வாழ வேண்டும் என்றும் கருத்தை இவ்வதிகாரத்தின் குறட்பாக்கள் விளக்குகிறது.

பகுதி II

அமைச்சியல்

இந்த பகுதியில் ஒரு அரசாட்சியில் அமைச்சரின் பணியைக் குறித்தும் அவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகளைக் குறித்தும் பத்து அதிகாரங்களில் (64 -73) விளக்கப்படுகிறது.

64. அமைச்சு **(அரசாட்சியில் அமைச்சரது பணிகள்)**

ஓர் அரசாட்சியில் அமைச்சரவை மிக சிறந்த பணி ஆற்றுகிறது. ஆட்சித்தலைவரோடு சேர்ந்து அமைச்சர்களும் சிறந்த பணி ஆற்ற வேண்டும். அவர்களும் அறநெறியை பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய்வதினால் குடி மக்களும் நல்லாட்சி அனுபவிப்பார்கள் அமைச்சர்களுக்கு அமைந்து இருக்க வேண்டிய பண்புகளையும் அவர்கள் அறநூல்களின்படி ஆட்சி முறைகளை

நடத்த வேண்டும் என்பதையும், செயல் திறன் அற்ற அமைச்சர்களால் வரும் கேடுகளையும் இவ்வதிகாரம் எடுத்துக்காட்டுகிறது.

65. சொல்வன்மை (பேச்சுத்திறன்)

சொல்வன்மை அமைச்சர்களுக்கு மிக முக்கியமான ஓர் திறன் ஆகும். இத்திறன் சான்றோரிடத்தில் விசேஷித்த அளவில் காணப்படுகிறது. அறவழியில் நடப்போரே சான்றோர். அவர்களுக்கு செயல்களும் சிந்தையும் நேரான வழிகளில் இறைநோக்கில் அமைந்து இருப்பதே அவர்கள் சொல் திறனுக்கு காரணம். அமைசர்களுக்கு சான்றோரின் நாவின் நலம் தேவை என்பதை வள்ளுவர் குறிப்பிடுகிறார். நாவினால் எழும் நன்மைகள் தீமைகள் இவ்வதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. விவிலியத்திலும் நாவாலும் நாவின் சொற்களாலும் ஏற்படும் நன்மைகள் தீமைகள் ஆகியவை பல இடங்களில் விளக்கப்படுகின்றன.

66. வினைத்தூய்மை (செயல்களில் தூய்மையாய் இருத்தல்)

வினைகளில் தூய்மையாய் இருப்பது ஓர் தூய்மையான அறச்செயலாகும். தூய்மையான மனம் படைத்தவர்களே தூய்மையான செயல் புரிய முடியும். அச்செயல் சான்றோரின் செயலாக எண்ணப்படுகிறது. விவிலியமும் தூய செயல்புரிவதின் மகிமையை குறித்து பல இடங்களில் கூறுகிறது. இவ்வதிகாரத்தில் தூய்மையான சான்றோர் பண்புகளில் ஒன்றான வினைத்தூய்மையின் முக்கியத்துவத்தை குறித்து விளக்கப்படுகிறது.

67. வினைத்திட்பம் (தக்க செயல் புரியும் மன உறுதி)

வினைத்திட்பம் என்பது ஒருவன் தக்க செயல் புரியும் மன உறுதியாகும். இது அமைச்சருக்கு மட்டுமன்றி ஆட்சியாளருக்கும் எத்தொழில் செய்யும் குடிமக்களுக்கும் தேவைப்படும் சிறந்த பண்பாகும். இவைகளைக் குறித்து இவ் வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

68. வினை செயல்வகை (செயல்களை செய்யும் விதம்)

செயல்களை நன்முறையில் செய்யும் விதங்களைக் குறித்து இவ்வதிகாரம் விளக்குகிறது.

69. தூது (தூதுவரின் பண்புகள்)

ஒரு அரசன் (ஆட்சியாளர்) பிறநாடுகளில் தமக்காக தூதுவரை அனுப்பும் போது அத்தூதுவர்க்கு தகுதியானப் பண்புகள் அமைந்திருத்தல் வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். தகுதியற்ற தூதுவரை அனுப்புவதால் அரசனுக்கே ஆபத்து ஏற்படலாம். அதேசமயத்தில் அரசன்பால் எடுத்து செல்லும் தூது, பகை அரசனால் ஏற்றுக் கொள்ளபடவில்லை என்றால் தூதுவரின் உயிர்க்கும் ஆபத்து வரலாம். எனவே நல்ல அறிவும் இறை அருளும்

சொல் வலிமையும் சான்றோரின் நற்குணங்களும் அமைந்துள்ள சிறந்தவரையே தூதுவராக அனுப்பப்படவேண்டும் என்பது இவ்வதிகாரத்தின் குறள்பாக்களில் கூறப்படுகிறது.

70. மன்னரைச் சேர்ந்தொழுகல் (மன்னரோடு சேர்ந்து ஒழுகும் முறை)

மன்னரோடு அல்லது ஆட்சியாளரோடு சேர்ந்து செயல்படுதல் மிக முக்கியமானதாகும். மன்னனோடு சேர்ந்து ஒழுகும் அமைச்சர்கள் சீரான முறையில் செயல்படுவது எல்லோருக்கும் பயன்தரும். அவ்வாறு பயன்தரக்கூடிய முறைகள் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

71. குறிப்பு அறிதல் (உள்ளக் கருத்தை அறிந்து கொள்ளுதல்)

ஒரு ஆட்சியாளன் கூட இருப்போரின் உள்ளத்தில் இருக்கும் கருத்தை அறிந்து கொள்ளுதல் வேண்டும். அமைச்சரும் தமது தலைவனின் உள்ளத்தை அவர் கூறாமலேயே அறிந்து கொள்ளல் அவசியமாகும்.

72. அவை அறிதல் (அவையின் இயல்பை அறிதல்)

பொறுப்பில் இருக்கும் அமைச்சர்களுக்கு பேச்சுத்திறன் மிகவும் அவசியம் ஆகும். பேசும் முன்னதாக பேசும் அவையைக்குறித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும். அவையில் அமர்ந்திருக்கும் அறிஞர்கள், அறிவில்லாதவர்கள், ஆகியோரின் பண்புகளை உணர்ந்து பேசுவது பயனளிக்கும். எவ்விதம் அவை அறிந்து பேச வேண்டும் என்பதைக் குறித்து இவ்வதிகாரம் விளக்குகிறது.

73. அவை அஞ்சாமை (அவைக்கு அஞ்சாமல் பேசுதல்)

ஓர் அமைச்சரவையில் அமைச்சர்கள் அவைக்கு அஞ்சாமல் பேச வேண்டும் சிறந்த நூல்களை கற்று கொள்வதால் மட்டும் போதாது. கற்றவற்றை நன்முறையில் அவை அஞ்சாமல் எடுத்துக்கூறி மற்றவர்களை தம்மிடம் ஈர்க்கும் சக்தி சிறந்த சொற்பொழிவாளருக்கு உண்டு. ஒருவன் அவைக்கு அஞ்சாமல்; சிறந்த கருத்துக்களை பேசுவதினால் ஏற்படும் பயன்களைக் குறித்தும், அவைக்கு அஞ்சி தான் கற்று கொண்டவற்றைக்கூட பேச இயலாதவர்க்கு ஏற்படும் இழிவைக் குறித்தும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

பகுதி III

அரணியல்

ஒரு நாடு பாதுகாப்பாக அமைவதற்கு வேண்டியவைகளைக் குறித்து இப்பகுதி இரு அதிகாரங்களில் (74 - 75) விளக்குகிறது.

74. நாடு (நாடு எப்படி இருக்கவேண்டும்)

எத்தகைய நாடு சிறந்த நாடு என்பதை இவ்வதிகாரம் விளக்குகிறது. நல்விளைச்சலோடு கூடியதும் நல்மனதோடு வரி செலுத்துவதும், கொள்ளைகூட்டம் இல்லாததும் நல்லாட்சி முறையை பெற்றுக் கொண்டதும் அதோடு அறநெறியோடு அதாவது இரட்சிப்பின் பாதையில் ஒழுகும் மக்களோடு கூடியதுமான நாடே சிறந்த நாடு என இவ்வதிகாரம் விளக்குகிறது.

75. அரண் (பாதுகாப்புக்கான அரண்)

ஒரு நாட்டிற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டியது ஆட்சியாளரின் கடமையாகும். பிற நாட்டிடமிருந்து தம் நாட்டை பாதுகாக்கவும் தம் நாட்டின் போருக்கு உதவும் பொருட்களை பாதுகாக்கவும் அரண் இன்றியமையாதது ஆகும். சிறப்பான அரண் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

பகுதி IV

கூழியல்

76 பொருள் செயல் வகை (அருட்பொருள் பொருட்பொருள் ஆகியவற்றை சேர்க்கும் முறை)

பொருள் சேர்ப்பதை குறித்து இவ்வதிகாரம் கூறுகிறது. பொருள் எனப்படுவது பொருட்பொருள், அருட்பொருள் ஆகிய இரண்டும் சேர்ந்ததே ஆகும். இறைவனிடத்திலிருந்து கிடைக்கும் அருட்பொருள் இல்லாமல் எதையும் செய்ய இயலாது. அதோடு அறசெயல்கள் புரிவதற்கும் பொருட்பொருள் உதவுகிறது. எனவே இவ்விரண்டினையும் சேர்த்து கொள்வது பற்றி இவ்வதிகாரத்தின் குறட்பாக்களில் பார்க்கிறோம். இரட்சிப்பின் வழியில் நிற்கும் சான்றோரின் பொய்யாவிளக்கு பெற்றுதரும் சிறந்த வாழ்வைக் குறித்தும் இறை அருளின் சிறப்பைக் குறித்தும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

பகுதி V

படையியல்

இப்பகுதியில் படையின் சிறப்பை குறித்தும். அதன் வீரத்துணிவைக் குறித்தும் இரு அதிகாரங்களில் (77, 78) கூறப்படுகிறது.

77. படைமாட்சி **(படையின் சிறப்பு)**

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு அந்நாட்டின் படைபலன் மிகவும் முக்கிய மானது. ஒரு நாட்டின் படை எவ்வாறு அமைந்து இருக்க வேண்டும் என்றும், எம்முறையில் செயல்பட வேண்டும் என்றும், எந்தெந்த காரியங்கள் கூடாதவை என்றும், இவ்வதிகாரம் விளக்குகிறது.

78. படைச்செருக்கு **(படையினரின் வீரத் துணிவு)**

ஒருநாட்டில் போர் செய்யும் படையினருக்கு தங்கள் வீரத்திற்கு ஏற்றதுணிவு தேவை. படையினருக்கு இருக்க வேண்டிய துணிவு இவ்வதிகாரத்தில் கூறப்படுகிறது.

பகுதி VI

நட்பியல்

79. நட்பு **(நட்பின் சிறப்பு)**

ஒருநாட்டின் சமுதாய வாழ்க்கையில் நட்பு சிறந்த பங்கினை வகிக்கிறது. மக்கள் ஒருவரோடொருவர் நட்பு கொண்டிருப்பது வாழ்க்கையின் சிறப்புக்கு ஆதாரமாய் அமையும். நட்பு எத்தன்மையானது என்றும் அது இல்லாமல் இருப்பது எத்தகைய கேடு விளைவிக்கும் என்பதும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

80. நட்பு ஆராய்தல் **(உண்மை நட்பை ஆராய்ந்து அறிதல்)**

உண்மை நட்பை ஆராய்ந்து அறியாமல் இருப்பது ஒருவர்க்கு பெரும் தீங்கை விளைவிப்பதாகும். நன்கு ஆராய்ந்து எந்த நட்பினை ஏற்றுகொள்வது எத்தகைய நட்பினை விட்டு விட வேண்டும் என்றும், சான்றோரின் ஒழுக்க முறையை (பொய்தீர் ஒழுக்கம்) அறிந்தாரை நட்பு கொள்ள வேண்டும் என்றும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

81. பழைமை (பழைய நண்பரோடு பழகும் முறை)

ஆட்சித்தலைவன் தன் பழைய நண்பரோடு நன்முறையில் பழகுதல் வேண்டும். பழைய நண்பரோடு எந்தந்த முறைகளில் பழக வேண்டும் என்பது இவ்வதிகாரம் விளக்குகிறது.

82. தீ நட்பு (தீய நட்பை ஒழிக்க)

தீய நட்புறவு கொள்வதன் மூலம் தீயவிளைவுகள் உண்டாகும். அமைதியான வாழ்கையை விரும்பும் அறவோர் நல்ல நண்பர்களை தெரிந்து கொள்வதில் கவனமாகக் இருப்பார்கள். ஒரு நாட்டிற்கு அமைதியும் சமாதனமும் வேண்டும் என்றால் மக்கள் நல்லொழுக்கம் உடையவர்களாய் இருக்க வேண்டும். நாட்டின் ஆட்சித்தலைவர்களும் ஆட்சிக்கு உட்பட்ட மக்களும் ஒழுக்கம் இல்லாத நண்பரை எந்தெந்த முறைகளில் விட்டு விட வேண்டும் என்று இவ்வதிகாரம் விளக்குகிறது.

83. கூடா நட்பு (விட்டு விட வேண்டிய நட்பு)

பழகிய நட்பை விட்டு விடுவது கூடாதகாரியம். ஆனால் நல்லொழுக்கம் இல்லாதவர்களின் நட்பு நன்மைக்கு பதில் கேடுவிளைவிக்கும் என்பதால் அத்தகைய தீய நட்பை விட்டு விட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இவ்வதிகாரத்தில் விட்டுவிட வேண்டிய நட்பினை பற்றி விளக்கப்படுகிறது.

84. பேதைமை (அறிவற்றவர் நிலை)

அறிவற்ற பேதையின் நிலை எத்தகையது என்பது பற்றி இவ்வதிகாரம் விளக்குகிறது.

85. புல்லறிவாண்மை (அறிவின்மையினால் ஆளப்படுபவர்)

அறிவின்மையால் ஆளப்பட்டு ஒழுகுபவன் பரிதபிக்கப்படதக்கவன். இந்த உலகத்தில் அப்படிப்பட்டவர்களும் உண்டு. அப்படிப்பட்டவர்களுடைய பரிதாபமான தன்மைகள் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

86. இகல் (அன்புறவை அழிக்கும் மாறுபாடு)

அன்புறவை அழித்து விடும் இகல் அல்லது மாறுபாடான தன்மை மனிதனுக்கு மிகமிக தீமை அளிப்பதாகும். சான்றோர் பண்புகளில் முக்கியமான அன்புடைமைக்கு எதிரானதே இகல் என்னும் மனப்பான்மை. அன்பு ஒருவருக்கொருவரை இணைக்கும் தன்மை உடையது. அதற்குமாறாக இகல் பிரிக்கும் தன்மை உடையது ஆகும். விரும்பத்தகாத இகல் என்னும் மனப்பான்மை ஒருவனை இறையன்புக்கு மாறாக இறைவனை தரிசிக்க முடியாமல் ஆக்கி விடுவதால் இகல் என்னும் மனப்பான்மையை அழித்து விடவேண்டும். என்பதே திருவள்ளுவரின் நோக்கம். எனவே இகல் மனப்பான்மையின் கெடுதல்களையும் அன்புறவின் சிறப்புகளையும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

87. பகைமாட்சி (பகையை வெல்பவனின் சிறப்பு)

பகையை வெல்வதே நிம்மதியான வாழ்க்கையை கொடுப்பது ஆகும். பகை எவ்விதம் ஏற்படுகிறது என்பதையும் அவ்வித பகைகளை மேற்கொள்வதின் சிறப்பை பற்றியும் இவ்வதிகாரம் எடுத்துக் கூறுகிறது.

88. பகைத்திறம் தெரிதல் (பகைவரின் திறமை அறிதல்)

பகைவரின் திறமையை குறித்து அறிந்து கொள்வது, அப்பகையை அழிப்பதற்கு ஏற்றவை ஆகும். பகைவரையும் நண்பராக்கி கொள்ளுதல், பகைமைக்கு இடம் கொடுக்காமல் இருத்தல் ஆகியவைகள் மூலம் பகைமையை வெல்ல முடியும் என்பதை இவ்வதிகாரம் கூறுகிறது.

89. உட்பகை (உடன் இருப்பவரால் உண்டாகும் பகை)

ஒருவனுடைய உள்ளத்தில் எழும் பகையும் உடன் இருப்பவராலே உண்டாகும் பகையும் விரும்பத்தக்கதல்ல. ஒருவனுடைய உள்ளத்தில் எழும் பகையினால் ஏற்படும் தீங்குகளையும் ஒருவனை சார்ந்திருக்கும் உறவினிடத்தில் ஏற்படும் பகைமையின் தீங்குகளையும் குறித்து இவ்வதிகாரத்தில் பார்க்கிறோம்.

90. பெரியாரைப் பிழையாமை (பெரியோரிடம் பிழைபட ஒழுகாமை)

பெரியவர்களிடம் பிழைபட ஒழுகாதிருத்தல் வேண்டும்

91. பெண்வழிச் சேறல் (மனைவியின் சொல் கேட்டு கடமை தவறுதல்)

வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்தில் குடும்ப தலைவிக்கு இருக்க வேண்டிய பண்புகளை குறித்தும் இல்வாள்வான் என்னும் அதிகாரத்தில் குடும்பதலைவனுக்கு இருக்க வேண்டிய பண்புகளை குறித்தும் நன்கு விளக்கப்படுகிறது. குடும்ப தலைவி தலைவனுக்கு எல்லா நிலையிலும் கீழ்படிய வேண்டும் என்பது முக்கியமான விவிலிய சத்தியமாகும். நேர்மாறாக தலைவன் தலைவிக்கு அடிமையாக நடப்பதும் அவள் சொல்லுக்கு இணங்க தன் கடமையை சரிவர நிறைவேற்றாமல் இருப்பதும் கேடானதாகும். ஆட்சி பொறுப்பில் இருப்பவர்கள் இந்த காரியத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். மனைவியின் சொல்படி நடந்து தன்கடமைகளை நிறைவேற்றாதோர் அரசியல் தலைவர்களோ நாட்டு குடிமக்களோ யாராய் இருந்தாலும் அவர்களுக்கு நேரிடக்கூடிய இழிவு நிலைகளை குறித்து இவ்வதிகாரம் விளக்குகிறது.

92. வரைவின் மகளிர் (விலை மாதர்)

ஒரு நாட்டில் பொதுவாகக் காணப்படும் பொல்லாத கவர்ச்சிகளில்

முக்கியமான ஒன்று விலை மாதர் கவர்ச்சி ஆகும். இது தீயதென்று அறிந்தும் அவரை அணுகுபவர் அனேகர் உண்டு. ஆனால் அறநெறியில் வாழ்வோர் இத்தீங்கை முற்றிலும் விட்டுவிட வேண்டியதாகும். இதை வலிவுறுத்துவதற்காகவே அற நூலாகிய திருக்குறளில் இவ்வதிகாரம் இடம் பெற்றுள்ளது. விலை மாதர்களால் ஏற்படும் தீங்குகள் இங்கு பெரும் அளவில் எடுத்துரைக்கப்படுகின்றன. விலை மாதரால் இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டுமல்ல மறுமைக்கேற்ற வாழ்க்கைக்கும் கேடு செய்வதாகும் என்பது விளக்கப்படுவதோடு சான்றோர் பண்பினை உடையோர் இதை நன்கு கவனிப்பார் என்பதும் சுட்டப்படுகின்றன.

93. கள் உண்ணாமை **(மது அருந்தாமல் இருத்தல்)**

குடி குடியை கெடுக்கும் என்பது பழமொழி, குடிப்பழக்கம் கொண்டு செல்லும் கேட்டினை குறித்து விவிலியம் பல இடங்களில் விளக்குகிறது.

இயேசு பெருமானின் சாட்சிகளாக சால்பு உடையவர்களாக விளங்கும் சான்றோர் சிறந்த வாழ்க்கை நடத்துபவர்கள் என்றும் அவர்கள் முன் கள் உண்போர் செல்ல முடியாது என்றும் சான்றோரின் நல்ல வாழ்க்கையை மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. கள் உண்பதினால் விளையும் தீங்குகள் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

94. சூது **(சூதாடுதல்)**

ஒரு வாழ்க்கையை கெடுக்கும் சக்திவாய்ந்த ஆட்டம் சூதாட்டம் என்பதில் தவறு இல்லை. ஒருவனது பொருட்களையும் அவனது முன்னோர் தொன்று தொட்டே அவனுக்காக சேர்த்து வைத்திருந்த பொருட்களையும் இழக்கச் செய்யும் திறன் சூதாட்டத்திற்கு உண்டு. இது அறச் செயலுக்கு மாறான ஓர் செயல் ஆகும். எனவே சீரான வாழ்க்கை வாழ வேண்டும் என்பவர் சூதாடிகளாக மாறக் கூடாது என்பதே வள்ளுவர் கருத்து எனவே சூதாட்டத்தால் வரும் கேடுகளைப் பற்றி இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் விளக்கிக் காட்டுகிறார்.

95. மருந்து **(மருத்துவமுறை)**

நோயற்ற வாழ்வே குறை அற்ற செல்வம் என்பது பழமொழி. ஒரு நாட்டின் மக்கள் நோயற்ற வாழ்க்கை வாழ்வதே விரும்பத்தக்கதாகும். நோயற்ற வாழ்வுக்கு மக்கள் கடைபிடிக்க வேண்டி முறைகளையும் நோய்வந்து விட்டபின் அவைகளை தீர்க்கும் முறைகளையும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

பகுதி VII

குடியியல்

இப்பகுதியில் பதிமூன்று அதிகாரங்களில் (96–108) குடியியல் குறித்து கூறப்படுகிறது.

96. குடிமை (மக்கள் பண்பு)

ஒரு நாட்டின் நிலை அந்நாட்டு மக்களை சார்ந்ததாகும். ஒரு நாட்டின் சீரும் சிறப்புமான குடிமையை பற்றி இவ்வதிகாரம் கூறுகின்றது. உலகத்தில் வாழ்ந்தாலும் விண்ணரசின் குடியுரிமையோடு வாழும் உயர்ந்த பண்பு உடைய குடிமக்களைக் கொண்ட நாடே சிறந்த நாடு. அறமாகிய பொய்தீர் ஒழுக்கநெறியில் நடப்பவர்களும், சான்றாண்மை உடையவர்களும் வாய்மை குடியில் பிறந்தவர்களும் ஆகிய சான்றோர்களின் நல்லொழுக்கம் நிறைந்த குடிமையும், அவர்களது நற்பண்புகளும் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன.

97. மானம் (மானம் காக்கும் உயர்மக்கள்)

உயர்ந்த குலத்தை சார்ந்தவர்கள் எந்நிலையிலும் தங்கள் மானத்தை காத்துக்கொள்வார்கள். சான்றாண்மைக்கு எதிரான சூழ்நிலைகள் வந்து சேரும்போது எந்நிலையிலும் மானம் கெடாமல் வாழ்தல் அவசியம். இரட்சிக்கப்பட்ட சான்றோர் அறநெறியில் வாழ்வதால் தன்மானத்தோடு வாழ்வார்கள் அவர்கள் வாயிலிருந்து பிறக்கும் வாய்மை சொற்கள் நற்செய்தியாய் இருக்கும். வாழ்கையில் எவ்வித இடர்பாடுகளும் இன்றி எந்நிலையிலும் இறைவன் காட்டும் பாதையில் எவ்வித களங்கமும் இன்றி செல்ல முயல்வார்கள் என்னும் கருத்து இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகிறது.

98. பெருமை (நற்பண்புகளால் வரும் பெருமிதம்)

விண்ணரசின் குடிமக்கள் (விண் அரசின் குடி உரிமையோடு இவ்வுலகத்தில் வாழும் சான்றோர்) நற்பண்புளால் பெருமிதம் அடைந்து வாழ்வார்கள். அப்படிப்பட்டவர்களின் பண்புகளைக் குறித்தும் அப்படிபட்ட சிறப்புகள் இல்லாதவர்களின் தன்மையை குறித்தும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

99. சான்றாண்மை (இறைவனுக்கு ஆண்மையோடு சான்று பகருதல்)

இயேசு பெருமானின் அடியர்கள் கூட்டம் சாட்சிகள் அல்லது சான்றோர் என அழைக்கப்பட்டார்கள். இயேசு பெருமான் பகைவர்கள் கையில்

அகப்பட்ட போது சீடர்கள் எல்லாரும் ஓடிவிட்டனர். பேதுரு ஒரு வேலைக்காரப் பெண்ணுக்கு முன்பாக இயேசுவை மறுதலித்தான். ஆனால் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு இயேசுவுக்கு சான்றாக மாறினான். ஆயிரக்கணக்கான மக்களுக்கு முன் பேதுரு சான்று கூறியதை அப் 2:16 ல் பார்க்கிறோம். அரசாங்கத்தினர் அவரை கொலை செய்ய மிரட்டிய போதும் அவர்களுக்கு அஞ்சாமல் ஆண்மை உடையவராய் விளங்கினார் சான்றோர் சான்றாண்மை தலைப்புகள் பார்க்க சான்று + ஆண்மை= சான்றாண்மை. சீடர்களை சால்புடையவர்களாக்கி சான்றினை ஆண்மையுடன் செல்லும் திறமை அளிப்பவரே ஆவியானவர் பரிசுத்த ஆவியை பெற்று எல்லா நற்பண்புகளாலும் நிரப்பப்படுகிறார்கள். பின்பு அவர்கள் அவ்வின்பத்தை மற்றவர்களும் அடையும் பொருட்டு எதற்கும் அஞ்சாது ஆண்மையுடன் கூறும் காரணத்தால் அவர்கள் சான்றாண்மை உடையவர்களாக திகழ்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட சான்றோர்களின் பண்புகள் குடிமக்களுக்கு மிகவும் தேவை என்பதைக் குறித்து இவ்வதிகாரம் விளக்குகின்றது.

100. பண்புடைமை **(நற்பண்புகள் உடையவராயிருத்தல்)**

ஒரு நாட்டின் குடிமக்கள் நற்பண்புடையவராயிருத்தலே விரும்பத் தக்கதாகும். நற்பண்புகளுக்கு காரணமாய் இருப்பது திருவள்ளுவர் சால்பூன்றிய தூண்கள் என்று கூறி இருக்கும் சிறந்த பண்புகள் ஆகும். அறச்செயல்களில் ஈடுபட்டிருக்கும் சான்றோர் அப்பண்புகளை உடையவர் ஆகும். உலக வாழ்க்கையில் நற்பண்புகளின் தேவையை குறித்தும் அது இல்லாததினால் ஏற்படக்கூடிய தீங்குகளை குறித்தும் இவ்வதிகாரம் விளக்குகிறது.

101. நன்றியில் செல்வம் **(ஈயா தன்மை)**

ஈகை என்பது எவரும் விரும்பத்தக்கது ஆகும். ஆனால் பெரும் செல்வத்தை ஈட்டி வைத்திருந்தும் வறியவர்க்கும் தனக்குத்தானும் செய்ய வேண்டியவற்றை செய்யாமல் காணப்படும் ஈயாதன்மை வருந்த தக்கதாகும், அறநெறிக்கு மாறாய் ஒழுகும் செல்வந்தரின் ஈயாதன்மை கண்டிக்க தக்கதாகும். இதை உணர்ந்த திருவள்ளுவர் ஈயாதன்மையை இவ்வதிகாரத்தில் விளக்கி கூறுகிறார்.

102. நாணுடைமை **(நாணம் உடையவராய் இருத்தல்)**

பெண்களின் நாணத்திற்கு வேறுபட்ட நாண் இங்கு சுட்டப்படுகிறது. செய்த தீமைக்காக வருந்தி நாணமடைதல், தான் செய்த தீமையை தீமை என்று அறிந்தபின் அதை தவறு என்று ஏற்றுக்கொண்டு, அதற்காக வருந்துதலாகிய நாணம் அடைதலே வள்ளுவர் கூறும் நாண் என்பது. அந்த அரிய செயலாகிய நாணை உடைய குணமே சால்பு. அதிலும் தன்பழிக்கு மட்டும் நாணாது பிறர் பழிக்கும் நாணுதலே நாணத்தின் உச்சநிலை. நாண் எவ்வளவு சிறந்தது என்பதைக் குறித்தும், ஒரு நாட்டின் மக்கள் சான்றோராய் திகழவேண்டும் என்பதை குறித்தும், நாண் உடமை இல்லாதோர் இழிவை குறித்தும், இவ்வதிகாரம் விளக்குகிறது.

103. குடி செயல் வகை **(வாய்மை குடியை உயர்த்தும் திறம்)**

இவ்வதிகாரத்தின் தலைப்பில் குடி என கூறப்படுவது பொது நிலையில் குடி (வீடு) எனவும், அதே நேரத்தில் வாய்மை குடி எனவும் எடுத்து கொள்ள முடியும். இவ்வதிகாரத்தில் கூறப்படும் குறள்பாக்கள் அறநெறியில் வாழ்வோர், வாய்மை குடும்பத்தை வளரச்செய்யும் முறைகளை குறித்து விளக்குகின்றன. உலகில் வாழும் மக்கள் எவ்வாறு அறநெறியில் வாழ வேண்டும் என்று முன்னால் கூறப்பட்டது. இவ்வதிகாரத்தில் வாய்மைகுடிமக்களை உயர்த்தும் முறைகள் தரப்படுகின்றன.

104. உழவு

உழவு என்பது உழவு தொழிலைக் குறிக்கிறது. அதோடு இறைபணி ஆகிய ஊழியத்தையும் காண்பிக்கிறது. உழவுத்தொழிலின் மேன்மையை குறித்தும் அதனால் வரும் நன்மைகளைக்குறித்தும் விளக்குவதாக காணப்பட்டாலும், ஊழியத்தின் மேன்மையைக் குறித்தும் இவ்வதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது.

105. நல்குரவு **(வறுமை)**

நல்குரவு என்பது வறுமை ஆகும். பொருட்பொருள் இல்லாத நிலையும் அருட்பொருள் இல்லாத நிலையும் வறிய தன்மை ஆகும். இவ்விருதன்மைகளும் இவ்வதிகாரத்தில் சுட்டப்படுகிறது. பொருள் இல்லாத வறுமையை விட, அருட்பொருள் இல்லாத நிலையே வருந்தத்தக்கது.

106. இரவு **(யாசித்தல்)**

ஒரு நாட்டில் யாசகர்கள் ஏராளமாய் காணப்படுவது உண்டு. வறியோராக வாழ்வதை எவருமே விரும்புவது இல்லை என்றாலும் ஒரு தரத்தார் வறியராகவே காணப்படுகிறார்கள். அவர்களில் ஒருசாரார் யாசிப்பதை தொழிலாக எடுத்து கொள்வதும் உண்டு. அறநெறியில் வாழும் சான்றோர் வறியவருக்கு இரங்கி உதவுவது அவர்களது கடமையாக கருதுகின்றனர். இவ்வதிகாரம் யாசிக்கும் முறைகளை குறித்தும் சான்றோர் யாசிப்பவர்களுக்கு உதவும் முறைகளைக் குறித்து விளக்குகிறது.

107. இரவு அச்சம் **(இரத்தலுக்கு அஞ்சுவது)**

இரத்தலுக்கு அஞ்சுவதே மேலானது. தங்களுக்கு இருப்பதை ஒளித்துக்கொண்டு, ஈயும் தன்மை இல்லாதவர்களிடம் யாசிப்பது தவிர்க்க வேண்டும். என்பதை குறித்து இவ்வதிகாரம் விளக்குகிறது.

108. கயமை **(பண்பற்ற தன்மை)**

கயமை என்பது விரும்பத்தகாத பண்பற்ற தன்மையாகும். சான்றோர் சால்பு உடன் கூடிய பண்பு அதாவது இரட்சிக்கப்பட்ட அனுபவத்தை உடையவர்கள். கயவர் அதற்கு நேர்மாறான பண்பற்ற நிலையில், அதாவது இரட்சிக்கப்பட்ட அனுபவம் இல்லாத நிலையில் இருப்பவர்கள். இப்படிப்பட்ட பண்பற்ற நிலை ஒரு நாட்டிற்கு ஆகாததே. என்றாலும் இத்தகைய பண்பற்றவர்கள் ஒரு நாட்டில் ஒருசாரார் இருந்தே தீருவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அதிலிருந்து ஒருமாற்றம் வருவதற்கு ஏற்ற முறையில் கயவர்களின் தனி நிறம் இவ்வதிகாரத்தில் காட்டப்படுகிறது.

3. இன்பத்துபால்

இன்பத்துப்பால் விளக்கம்

திருக்குறள் முழுவதும் ஒரே காரியத்தை மூன்று நிலைகளாக விளக்குகிறது. மனுக்குலத்தை பொய்தீர் ஒழுக்க நெறியில் (இரட்சிப்பின் பாதையில்) கொண்டு வந்து நித்தியமான பேரின்ப வீட்டில் சேர்ப்பதே திருக்குறளின் முழுமையான கருத்து

அறத்துப்பாலில்:

அறவாழி அந்தணனாகிய இறைவன் மனுக்குலத்தை இரட்சிக்க பேரின்பவீட்டின் மேன்மைகளை நீத்து (துறந்து) இம்மைக்கு வந்து, ஐந்தவித்தானாகி அதாவது தமது ஐம்புலன்களையும் பலியாக்கி, பொய்தீர் ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பை சம்பாதித்து தந்தார். இதை திருக்குறளின் முதற்பகுதியான அறத்து பாலில் பார்க்கிறோம்.

பொருட்பாலில்:

இறைவனுக்கு பொருளாக அமைந்திருப்பது மனுகுலம் ஆகும். இவ்வுலகத்திலும், மேல் உலகத்திலும் மனிதருக்கு சந்தோஷமாய் வாழ்வதற்காக பொருட் பொருளையும் அருட்பொருளையும் இறைவன் ஈந்திருக்கிறார். இம்மனுக் குலத்தில் இறைவன் இலவசமாக பெற்றுத்தந்த அருட்பொருளை பெற்று அறவழியில் (இரட்சிப்பின் பாதையில்) நடவாதவர்கள் இருளாகிய நித்திய நரகத்திற்கும்

இரட்சிப்பை (அறத்தை) பெற்றுக்கொண்டு சான்றாண்மையுடன் வாழும் சான்றோர் பேரின்ப வீட்டிற்கும் ஆயத்தப்படுகிறார்கள் என்பதை இரண்டாம் பகுதி பொருட்பால் காட்டுகிறது.

இன்பத்துப்பாலில்:

இறைவன் அளிக்கும் பொய்தீர் ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு வான் ஆகிய பரிசுத்த ஆவியின் பெலத்தோடு வாழ்வாங்கு வாழ்பவர்கள் பேரின்பவீட்டில் இறைவனோடு நித்திய இன்பத்தில் வாழ்ந்திருப்பார்கள். இவ்வாறு இறைவனோடுள்ள நித்திய கால வாழ்க்கை மனிதனின் மரணத்துக்குப்பின் நடப்பதாகும். ஆனால் இறைவனின் பேரின்பம் பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்கும் மனிதர்க்கு (சான்றோர்க்கு) இவ்வுலக வாழ்க்கையிலேயே கிடைக்க ஆரம்பித்துவிடுகிறது. எனவே தான் அப்படிப்பட்டவர்கள் இவ்வுலக இன்பங்களை அற்பமாய் எண்ணி புறக்கணித்து விடுவது. இவ்வின்பம் பூரணமாக நிறைவுபெறுவது மேல் உலகில் ஆகும். அது மரணத்துக்கு பின்பு நடப்பதாகும். அது வரையில் இரட்சிக்கப்பட்ட மனிதனின் ஆன்மா இறைவனிடமிருந்து பேரின்பத்தை அனுபவிக்கிறது. இது ஓர் மேலான அனுபவமாகும். அந்த மேலான அனுபவத்தில் செல்லாதவர்களுக்கு அதன் மேன்மைகளையும் இன்பங்களையும் அறிந்து கொள்ள முடியாது. அந்த இன்பத்தை விளக்கிக்கூறுவது கடினம். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்து பாருங்கள் (சங். 34:8) என்கிறது விவிலியம் ருசித்தால் மட்டுமே அதன் சுவையை உள்ளபடி புரிந்து கொள்ள முடியும்.

பேரின்பத்தை விளக்கும் முயற்ச்சி :

பேரின்பத்தைக் குறித்து விவிலியம் விளக்கிக் கூறுகிறது. அவ்விதம் விளக்கி கூறும் ஓர் முயற்சியை நாம் திருக்குறளின் மூன்றாம் பாகமான இன்பத்துப்பாலில் பார்க்கிறோம். பேரின்பத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் உலக இன்பங்கள் யாவும் சிற்றின்பங்களே. உலக இன்பங்களில் மிகவும் சிறந்த இன்பமாக கருதப்படுவது காதலர்களுக்கிடையே ஆன காதல் இன்பமாகும். எனவே பேரின்பத்தை விளக்க உலக இன்பங்களில் மேலான காதல் என்னும் சிற்றின்பம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இம்முறையில் இங்கு இறைவனும் ஆன்மாவும் காதலர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள்.

விவிலியத்தில் :

விவிலியத்தில் இரட்சிக்கப்பட்டோர் கூட்டமாகிய சபை மணவாட்டியாகவும்இறைவனாகிய கிறிஸ்து மணவாள னாகவும் காட்டப்படுகிறது. உன்னதப்பாட்டில் காதலனுக்கும் காதலிக்கும் இடையே ஏற்படும் காதலாக சித்திரிக்கப்படுவதை பார்க்கிறோம்.

உலகின்ப காதலும் பேரின்ப காதலும்:

உலகின்பக்காதலில் ஆண், பெண் இருவரும் காதலன் காதலியாக விளங்குகிறார்கள். இறையின்ப காதலில் இதற்கு வேற்றுமையுண்டு. கிறிஸ்தவத்தில் திருச்சபையை அதாவது இறைஅடியவர்களை மணவாட்டி அல்லது நாயகியாகவும், கிறிஸ்துவை மணவாளனாகவும் அல்லது நாயகனாகவும் விளக்கப்படுகிறது. தமிழ் பழைய மரபுப்படி இறைவனைப் பெண்ணாக உருவகிப்பதுண்டு. திருவள்ளுவர் இறைவனை ஆணாகவும் பெண்ணாகவும் உருவகித்திருக்கிறார்.

சிற்றின்பம் பேரின்பம்

இல் என்பதில் திருவள்ளுவர். சிற்றின்பம் பேரின்பம் இவை இரண்டையுமே அடக்கிக் காட்டுகிறார். இவ்வுலகில் இருப்பது சிற்றின்பம். மேல் உலகில் இருப்பது பேரின்பம். இவ்வுலக இல் வழி மேல் உலக இல்-ஐ அடைகிறோம். திருவள்ளுவர் கூறும் முறையான சிற்றின்பம் தூய்மையானது. பேரின்பத்துக்கு வழியாயிருப்பது. காமம் என்பது விழைவு, அவா, ஆசை என்பன பொருள். துறவி காமத்தை விட வேண்டும். காதலர் காமத்தை கொள்ள வேண்டும். நிறைவான இன்பம் ஏற்படுவதற்கான ஆசையாகிய விருப்பத்தை காமம் என்ற வார்த்தையால் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

காமத்துப்பாலா?

மேற்கூறிய சிறப்புகளுடைய இன்பத்துப்பாலை பிற்கால

உரை ஆசிரியர்கள் காமத்துப்பால் என்று அழைத்தார்கள். அவர்கள் காம சூத்திரத்தை பின்பற்றி திருவள்ளுவர் இன்பத்துப்பாலை எழுதினார் எனக்கூறி மக்களை காரண மில்லாமல் நம்ப வைத்தனர். இவ்வாறு இன்பத்துப் பாலை அவர்கள் காமத்துப்பால் என்று மாற்றப்பார்க்கிறார்கள். ஆனால் முந்தய ஏட்டுச்சுவடிகளிலும் இன்பத்துப்பால் என்றே காணப்படுகிறது என்பதை அறிகிறோம்.

இறைவன் பால் கிடைக்கும் பேரின்பத்தை சிற்றின்பக்காதல் முறையில் விளக்குவதே மூன்றாம் பாகமான இன்பத்துப் பால் என்பதை கண்டு கொள்ளலாம்.

"காமத்துப்பால்" முறையானதல்ல என்னும் கருத்து:

உரையாசிரியர்கள் பலர் திருக்குறளின் இன்பத்துபாலை காமத்து பால் என்றும் அழைப்பது முறை அல்ல என்றும் அது இறைவனோடு உள்ள நெருங்கிய உறவை வெளிப்படுத்துவது என்றும் எழுதியுள்ளார்கள் இக்கருத்துக்களை மேலும் அறிய விரும்புவோர் Dr. அருளப்பா எழுதிய திருக்குறள் புத்தாய்வு என்னும் நூலை பார்க்கவும்.

பகுதி I

களவியல்

களவியலில், இறைவன் ஆன்மாவை களவாக அதாவது கவர்ச்சியால் ஈர்த்துச் செல்லும் திறன் விளக்கப்படுகிறது. தம்மைதாமே பலியாக்கி பெற்றுத் தந்த இரட்சிப்பை (அறம்) மனிதன் மறுமையில் நித்திய பேரின்ப வீட்டில் சென்று இறைவனோடு மகிழ்ந்திருக்கும் படியாக இறைவன் இலவசமாக ஈந்தளித்திருப்பதே அறமாகிய இரட்சிப்பு. ஆனாலும் பெரும்பாலான மனுமக்கள் இந்த அறமாகிய இரட்சிப்பை குறித்து எவ்வவாய் விளக்கி கூறியும் ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. திரள் கூட்டத்தார் திரும்பிக்கூட பார்ப்பதில்லை. இதற்கு காரணம் சாத்தான் உலகப்பொருட்களாலும் சிற்றின்ப கவர்ச்சிகளாலும் மக்களை ஈர்த்துக் கொள்வதாகும்.

இந்த நிலையை மாற்ற மனுமக்களை இறைவன் வல்லமையோடு தன்பால் ஈர்த்துக்கொள்கிறார். இதை விவிலியத்திலும் பார்க்கிறோம்.

"பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" (யோவா 6:44) நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது,

எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் (யோ 12:32) என்று இயேசு கூறுகிறார். அவர் வருகையை குறிப்பிடும் போது திருடனைப்போல வருவாரென்றும் கூறப்படுகிறது. நான் நயம் காட்டி அவளை (ஜனத்தை) வனாந்திரத்துக்கு அழைத்துக்கொண்டு போவேன் (ஓசி 2.1114) என்று பார்க்கிறோம்.

ஒரு ஆன்மா நித்திய மரணத்துக்கு சென்றுவிடாமல், அதை தம்மோடு நித்திய இன்பத்தில் சேர்க்கிறார். அவர் நயம் காட்டி இழுத்துக்கொள்ளும் தன்மையை வள்ளுவர் களவியல் பகுதியில் விளக்குகிறார்.

இங்கு ஈர்ப்பு சக்தியை வலியுறுத்தும் வகையில் இறைவன் காதலியாகவும் ஆன்மா காதலனாகவும் காட்டப்படுகிறார்கள். சிற்றின்ப காதலில் பொதுவாக பெண்ணின் அழகு தான் பெரும் கவர்ச்சியோடு இழுக்கும் தன்மையுடையது. பேரின்ப காதலில் இறைவன் ஒரு அழகிய பெண்ணாக அதாவது பேரின்பக் காதலியாக கவர்சிகளுடன் (ஆன்மாவை) பேரின்பக் காதலனை ஈர்ப்பது தெளிவாக காட்டப்படுகிறது.

பேரின்ப காதல் நோக்கில் பாராமல் வெறும் சிற்றின்பக்காதல் நோக்கில் பார்ப்போர், சிற்றின்பக் காம வெறியாட்டை காண கூடும். அதே நேரத்தில் பேரின்பக் காதல் நோக்கில் பார்ப்பவர்கள், ஆன்மா பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி மூழ்கி இன்புற்று நித்திய பேரின்பத்துக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதை கண்டு இன்புற முடியும்.

109. தகையணங்குறுத்தல் (அழகினால் ஈர்க்கப்பட்டு கூறல்)

இவ்வதிகாரம் இருகாதலர்களின் காதல் பார்வையைக் குறித்து விளக்கும் வண்ணமாய் உள்ளது. பொதுவாக நம்மிடையில் காணப்படும் காதலர்களின் தொடக்கம் போல இங்கு காட்டப்பட்டுள்ளது. களவியல் பகுதியில் ஆரம்பிக்கும் இவ்வதிகாரம் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் ஏற்படுகின்ற பேரின்ப காதலின் ஆரம்ப நிலையை உவமை மூலம் இங்கு காட்டப்படுவதை பார்க்க முடிகிறது. இறைவன் காதலியாகவும் ஆன்மா காதலனாகவும். சித்தரிக்கப்படுகிறது. இறைவன் இருப்பது நித்திய பேரின்பத்திலும் மனிதன் இருப்பது நித்திய வாழ்வை இழந்த நிலையிலும் ஆகும். கருணை கடலாகிய இறைவனின் நோக்கம், நித்திய வாழ்வை இழந்த மனிதனை எவ்விதத்திலாகிலும் இழுத்து தம்மோடு நித்திய பேரின்பத்தில் சேர்ப்பதாகும்.

இவ்வதிகாரத்தில் இறைவன் ஒரு அழகிய பெண்மணியாக அதாவது உலகெங்கிலும் காண இயலாத ஒரு தெய்வீக பெண்மணியாகவும் ஆன்மா காதலனாகவும் சித்தரிக்கப்படுகிறது.

110. குறிப்பறிதல் (காதல் குறிப்பை உய்த்துணர்தல்)

இவ்வதிகாரத்தில் தலைமகனான ஆன்மா, தலைமகளான தெய்வீக பெண் என கூறப்பட்டுள்ள பேரின்ப காதலியின் காதற்குறிப்பை அவளுடைய பார்வையிலிருந்தும் செயல்களிலிருந்தும் அறிந்து கொள்ளுதல் விளக்கப்படுகிறது.

இவ்வதிகாரத்தின் குறட்பாக்களில் மட்டுமல்ல அனேக குறட்பாக்களில்

காமம் என்ற வார்த்தையும் பல தன்மைகளில் உபயோகிக்கப்பட்டுள்ளன. காமம் என்பதின் பொருள் விளைவு, அவா, ஆசை என்பனவாகும். இது சிற்றின்பங்களில் சிறந்த இன்பத்தை குறிப்பிடும் சொல்லேயாகும். சரியான நிலையில் ஏற்படுகின்ற சிற்றின்பங்களில் சிறந்தது, காதல் அல்லது காமம் என்ற வார்த்தைகளால் குறிக்கப்படுகின்றன. ஆனால் தகுதியற்ற செயல்கள் அருவருக்கதக்க செயல்கள் செயல் பாடுகள், பார்க்கும் பொழுது அதை வெளிப்படுத்துவதற்கு இசைவான வேறு வார்த்தைகள் இல்லாததினால் அவற்றால் அடையும் இன்பத்திற்கும் காம இன்பம் என்றே கூறப்படுவது உண்டு.

ஆனால் திருக்குறளில் காமம் என்ற சொல்லால் குறிக்கப்படுவது, அப்படிப்பட்ட முறையற்ற இன்பங்களோ, செயல்பாடுகளோ, அல்லவென்றும் முறையான சிற்றின்பகவர்ச்சியை தரும் காதல் இன்பத்தையே குறிப்பிடுகிறது என்றும் இவ்வதிகாரத்தில் கண்டுகொள்ளலாம்.

111. புணர்ச்சி மகிழ்தல் **(உள்ளம் சேர்ந்து மகிழ்தல்)**

சிற்றின்ப காதலின் கடை நிலை மணம் முடித்து அதன் பின் காதலனும் காதலியும் உடலால் புணர்தல் ஆகும். மணந்து கொள்ளும் வரையில் அவர்களுக்கு பற்பல நிலைகளில் காதல் இன்பம் நுகர்தல் ஏற்படும். அன்பின் உள்ளத்தால் காதலனும் காதலியும் ஒன்று சேர்வது மணம் முடிக்குமுன் ஏற்படும் புணர்தல் ஆகும். இறைவனாகிய தலைமகளும் ஆன்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆரம்பித்த காதல் அன்பில் உள்ளத்தால் சேர்வது பேரின்பத்தை விளைவிப்பதாகும். பேரின்ப காதலியாகிய இறைவனின் உள்ளமும் ஆன்மாவின் உள்ளமும் சேர்ந்து விளையும் இன்பம் இவ்வதிகாரத்தில் சுட்டப்படுகிறது.

112. நலம் புனைந்துரைத்தல் **(காதல் நலம் எடுத்து உரைத்தல்)**

களவியலின் முதல் அதிகாரத்தில் (அதி 109) முதல்குறட்பாவில் கூறப்படும் பெண்களில், காதலிக்க தகுதியாய் காணப்படுவது தெய்வீக பெண்மணி. தொடர்ந்து உள்ள அதிகாரங்களில் அந்த தெய்வீகபெண்மணியின் அதாவது பேரின்ப காதலியின், அழகும் அவள் கொடுக்கும் இன்பங்களின் தன்மையும் வருணிக்கப்படுகின்றன. இவ்வதிகாரத்தில் அக்காதலியின் எழில், முக அழகு, கண் அழகு, உடலின் மென்மை, சந்திரனைவிட சிறந்த முகம், இவ்வாறு காதலியின் அழகு வலியுறுத்தப்படுகிறது. இவை எல்லாம் சிற்றின்ப காதலியை மிகைபடுத்துவதாக இருந்தாலும் பேரின்ப காதலிக்கு அமைந்ததாக காணலாம். எல்லாவிதமான அழகுக்கும் மேலான இறைவனை பேரின்ப காதலியாகவும் ஆன்மாவை பேரின்ப காதாலனாகவும் சித்தரிப்பதை உணர்ந்தால் இறைவனின் பேரன்பையும் பேரழகையும் அதோடு பேரின்பத்தையும் பருகி நாம் மகிழ முடியும்.

113. காதற் சிறப்புஉரைத்தல் **(காதலின் சிறப்பு குறித்து உரைத்தல்)**

பேரின்பக் காதலில் இங்கு இறைவன் காதலியாகவும் ஆன்மா

காதலனாகவும் காட்டப்படுகிறது இறைவன் ஆன்மாவை தன் பக்கமாக இழுத்துக் கொண்டார். அது முதல் ஆன்மா இறைவனை நேசிக்க ஆரம்பித்து விடுகிறது. இவ்வாறு இறைவனோடு இன்பம் அனுபவிக்க அனுபவிக்க இறைவனோடுள்ள நெருக்கமும் அதிகரிக்கிறது. இறைவனை ருசித்தல் இறைவனை பிரியமுடியாமை இறைவனோடுள்ள உறவு போன்ற பண்புகள் இவ்வாதிகாரத்தில் விளக்கப்படுகின்றது.

114. நாணுத்துறவு உரைத்தல் **(நாணத்தையும் விட்டு உரைத்தல்)**

காதல் மிகுதியால் நாணத்தையும் விட்டு விட்டு, அடக்கி வைக்க வேண்டிய காரியங்களையும் பேசிவிடும் நிலை இவ்வதிகாரத்தில் காட்டப்படுகிறது.

115. அலர் அறிவுறுத்தல் **(காதலரின் களவொழுக்கத்தை வெளிப்படையாய் கூறுதல்)**

பேரின்ப காதல் ஓர் சிறந்த நிலை அடைவதை இவ்வதிகாரம் காட்டுகிறது. களவியலில் இதுவரை கூடிய மட்டும் எவரும் அறியாமல் பேரின்ப காதலனும் காதலியும் கூடி மகிழ்ந்து இன்பம் அநுபவித்து வந்தார்கள். ஆன்மா இறைவன் பால் இழுக்கப்பட்டு இன்பம் அடைய தொடங்கிவிட்டது. கிறிஸ்தவத்துக்கு மாறான மக்களின் மத்தியில் இவ்விதம் எழும்பும் ஆன்மாக்கள் இறைவனோடு, தான் கொண்டிருக்கும் தொடர்பை மற்றவர்கள் அறியாதபடி கவனமாயிருப்பார்கள். ஆனால் இப்போது அந்நிலை வித்தியாசமாகிவிட்டது. ஊரார் காதலைக் குறித்து அறிந்து முணுமுணுத்து. தூற்றி விட்டார்கள் இந்நிலை பேரின்பக் காதலனாகிய ஆன்மாவுக்கு ஒருவிதத்தில் மகிழ்சியைக் கொடுக்கிறது. எல்லோரும் அதாவது இக்காதலை விரும்பாத பெற்றோர் ஊரார் எல்லாரும் கூறிய பழி (அலர்) வாய்ப்பாக மாறி விடுவதாக ஆன்மா உணருகிறது. உபத்திரவங்களால் காதல் வளர்கிறது. மட்டுமல்ல ஆன்மா இறை இன்பத்தை அதிகமாய் சுவைக்கத்துடங்கி விட்டது. அலர் (பழிச்சொற்கள்) வளரும் காதலுக்கு எருபோல் உதவுகிறது. இனி ஒருவரும் ஆன்மாவை தன் காதலியாகிய இறைவனை விட்டு பிரிக்க இயலாது. அவரால் பிரிக்க நினைப்பது நெருப்பை நெய்யால் அவிக்க முயல்வது போல் ஆகிவிட்டது. எனவே இனி என்ன செய்வது? எதிர்த்து நின்றவர்கள் வழி விலகி காதலர் ஒன்று சேர்ந்து கொள்ளட்டும் என்ற நிலைக்குவர, காதலனாகிய ஆன்மா ஒரு சபையில் சேர்ந்து கொண்டு இறை இன்பம் மேலும் நுகர ஆயத்தமாகும். இவைகள் இவ்வதிகாரம் விளக்குகிறது.

பகுதி II

கற்பியல்

களவொழுக்கம் முடிந்தபின் காதலர் மணம் முடித்துக் கொண்டு கற்புடன் இல்வாழ்கை நடத்துவது கற்பியலில் கூறப்படுகிறது. களவியலில் காதலர்

ஒருவரை ஒருவர் காதலிப்பதிலும் அக்காதலை வளர்ப்பதிலும் உள்ளத்தால் சேர்ந்து மகிழ்வதிலுமே ஈடுபட்டு இருந்தனர். அந்நாட்களில் உடலால் சேர்வதானால் அது தீய ஒழுக்கம் ஆகிவிடும். எனவே உடல் புணர்ச்சி (உடலால் சேர்தல்) மணமான பின்னரே நிகழ வேண்டும். ஆனால் அதற்கு மாறாக அளவுக்கு மீறி நடப்பது முறையற்றது என்கிறது இன்பத்து பாலின் இக்கருத்து தொகுப்பு

பேரின்ப காதலை பொறுத்தமட்டில் இறைவனும் ஆன்மாவும் ஒன்றுபட அகமும் அகமும் சேர்ந்து இன்பம் அனுபவித்ததை குறித்து களவியலில் பார்த்தோம். ஆனால் அப்பேரின்பம் நித்திய கால இன்பமாய் ஆன்மா அனுபவிப்பது மறுமை வாழ்வில் ஆகும். அது மரணத்துக்கு பின்பு நடைபெறுகின்ற நிகழ்ச்சியே. காதலர்களுக்கிடையே இம்மையில் நடக்கும் விவாகம் பேரின்ப காதலராகிய இறைவனுக்கும், காதலியாகிய ஆன்மாவுக்கும் ஒப்பிடப்படுகிறது. ஆட்டுக்குட்டியானவருடைய (இயேசுவின்) கல்லியாணம் வந்தது. மணவாட்டித் தன்னை ஆயத்தப்படுத்தினாள் (சபை ஆகிய ஆன்மா) என்று விவிலியத்தில் கூறப்படுவது இதுவே ஆகும்.

கற்பியலில் இறைவன் காதலராகவும் ஆன்மா காதலியாகவும் காட்டப்படுகிறது என்று பார்த்தோம். ஆன்மாவுக்கு ஆண், பெண் வேற்றுமை இல்லை. ஒருமை பன்மை வேற்றுமையும் இல்லை. இறைவனால் ஈர்க்கப்பட்டு இறைவனின் இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு இறைவனுக்காக இவ்வுலகத்தில் வாழும் ஆன்மாக்கள் திருச்சபையாக விவிலியத்தில் கூறப்படுகிறது. இச்சபை இறைவனின் மணவாட்டி சபையே.

ஐந்தவித்தானாகிய இறைவன் ஈட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பை ஏற்றுக் கொண்ட சான்றோர் இறை அன்பைக் குறித்து மற்றவர்களுக்கு அறிவிக்கும் வாய்மையால் உலகத்தார் இறை அன்பை குறித்தும் இரட்சிப்பை குறித்தும் கேள்விப்படுகிறார்கள். ஆனால் அநேகர் அந்த இரட்சிப்பை ஏற்றுக் கொள்வதில்லை. இந்நிலையில் இறைவன் தம் ஈர்ப்பு சக்தியால் தம் பால் ஈர்த்து கொள்ளும் விதங்களை களவியல் பகுதியில் பார்த்தோம். இறைவனின் அருள் நோக்கை அடைந்து இன்புற்றவர்கள் முழுமையான இன்பம் நிரந்தரமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆவல் கொள்கிறார்கள். அவர்கள் பேரின்ப காதலராகிய இறைவனை அடைந்து விடுகிறார்கள்.

மணம் முடித்து கொண்ட காதலர் கற்புநெறியோடு இல்வாழ்கை நடத்த ஆரம்பித்து விட்டார்கள். பேரின்ப காதலனாகிய இறைவன், காதலியாகிய ஆன்மா கற்பு நெறியை காத்து கொள்ள வேண்டும் என்பதில் கரிசனை உள்ளவராக காணப்படுகிறார். இறைவனைத் தவிர வேறு எதையும் இறைவனாகக் கொள்வது அவர் சகிப்பதில்லை. இதை விவிலியத்தில் பார்க்கிறோம். தேவ ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்கள் ஜீவனுள்ள தேவனை விட்டு விட்டு மரத்தாலும் கற்களாலும் மண்ணாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களை தொழுவது வேசித்தனம் என்கிறார் இறைவன். அவளுடைய வேசிதனத்தினாலே தேசம் தீட்டுப்பட்டுப்போயிற்று. கல்லோடும் மரத்தோடும் விபச்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறாள் (எரேமி 3:9) எகிப்தின் நரகலான விக்கிரகங்களால் உங்களை தீட்டுப்படுத்தாதிருப்பீர்களாக என்றும் தீட்டுப்படுத்தினபடியால் என் கோபத்தை அவர்களிலே தீர்த்து கொள்ளும்படிக்கு உக்கிரத்தை அவர்கள் மேல் ஊற்றுவேன் என்றும் (எசே 20:7,8) சொல்லப்படுகிறது.

116. பிரிவாற்றாமை **(பிரிவை தாங்க இயலாத நிலை)**

களவியலில் காதலர்கள் பிரிந்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. திருமணத்துக்கு பின் ஒன்று கூடுதல் நிகழும். ஆனால் திருமணத்துக்குப் பின்பும் பல அலுவல்கள் நிமித்தம் கணவன் மனைவி பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த பிரிவால் ஏற்படும் துயரங்கள் இவ்வதிகாரத்தில் கூறப் படுகிறது.

பேரின்ப காதலை பொறுத்தமட்டில் பேரின்ப காதலியாகிய ஆன்மா, பேரின்ப காதலராகிய இறைவனை பிரிந்திருக்கமாட்டாமல் கலங்குகிறதை இங்கு பார்க்கமுடிகிறது.

117. படர்மெலிந்து இரங்கல் **(பிரிவு வருத்தத்தால் மெலிந்து உள்ளம் உருகுதல்)**

மணம் முடிந்த பின்பும் காதலர் காதலிக்கிடையே சிறு பிரிவுகள் பல வேளைகளில் பல காரணங்களுக்காக நடைபெறுகின்றன. இச்சிறு பிரிவு, ஊடல் என்றும் மறுபடியும் ஒன்று சேர்தல் கூடல் என்றும் கூறப்படுகிறது. பேரின்ப காதலில் பேரின்ப காதலியாகிய ஆன்மாவை பேரின்ப காதலனாகிய இறைவன் தம் திட்டத்தின்படி பேரின்பம் முழுவளர்ச்சி அடைவதற்காக அனுமதிக்கிறார். அவ்வேளைகளில் அதாவது இறைவன் ஆன்மாவை விட்டு சிறிது விலகினாற்போல் வாழ்கையில் அனுபவிக்கும் சமயங்களில் அந்த பிரிவு ஆன்மாவால் தாங்கி கொள்ள இயல்வதில்லை. இந்த அனுபவங்கள் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன.

118. கண் விதுப்பு அழிதல் **(கண் கலங்கி வருந்துதல்)**

காதல் தவிப்பு அதிகரிக்க அதிகரிக்க காதலி காதலனை நேரில் காண பேராவல் கொள்ளுகிறாள். அவ்விதமாய் ஆன்மா அகக்கண்ணால் இறைவனை காணமுயற்சித்தும் இயலாததால் வருந்துகிறாள்.

விதுப்பு = விரைவில் அழிதல் = வருந்துதல்.

சிற்றின்ப காதலுக்கு கண்களே முதல் காரணமாக காட்டப்படுகிறது. பேரின்ப காதலில் இறைவனின் ஈர்ப்பு சக்தியால் அவர் பால் இழுக்கப்படும் ஆன்மா பேரின்ப ஆசையினால் மற்றெதையும் பொருட்படுத்தாமல் இறைவனையே விரைந்து நாடுகிறது. அதன் பின்னால் ஏற்படுகின்ற பாடுகள், வருத்தங்கள் ஆகியவை இவ்வதிகாரத்தில் காட்டப்படுகின்றன. இறை வாழ்கை என்பது இவ்வுலகத்தில் பாடுகள் நிறைந்ததாகும்.

119. பசப்புறு பருவரல் **(பசலையால் தோன்றும் வருத்தம்)**

ஓர் ஆன்மா ஐந்தவித்தானாகிய இறைவனை ஏற்றுக்கொண்டு அவரோடு சேர்ந்து இரட்சிப்பின் பாதையில் நடப்பதே இவ்வுலகில் ஏற்படும் பேரின்ப காதல் வாழ்கை. இவ்வாழ்கையில் சில சமயங்களில் இறைவன் ஆன்மாவாகிய பேரின்ப காதலியை விட்டுப்பிரியும் நேரங்கள் உண்டு.

அந்நேரங்களில் ஆன்மா அடையும் வருத்தங்களும் சஞ்சலங்களும் ஆன்மாவின் சிந்தனைகளும் இவ்வதிகாரத்தில் சுட்டி காட்டப்படுகிறது. ஆன்மா விரும்பியபடி இறைவனை விரைவில் கண்டு மகிழ இயலாததால் ஏக்கம் மிகுதியாய் சோர்பு அடைந்துவிடுகிறது. சோர்பு அதிகரிக்க சுறுசுறுப்பு, மனமகிழ்ச்சி ஆகியவை குன்றிப்போய்விடுகிறது. சரீரத்திலும் செழிமை, வலிமை, அழகு, தெம்பு ஆகியவை போய்விடுகிறது. இவைகளால் பேரின்ப காதலியாகிய ஆன்மாவுக்கு ஏற்படுகின்ற மனநிலைமை (வருத்தம்) இவ்வதிகாரத்தில் விவரிக்கப்படுகிறது. பசப்பு என்பது சரீரத்தில் உண்டாகும் ஒருவித நிற வேறுபாடாகும்.

பசுமை நிறம் அல்லது பசப்புறுதல் என்றால் பசுமை நிறம் தோன்றுதல் என்றுபொருள். உள்ளத்தில் ஏற்படும் சோர்பினால் முகம் மற்றும் உறுப்புகள் வெளிருவதை பார்க்க முடியும்.

120. தனிப்படர் மிகுதி **(தனிமையின் கொடுமை)**

பேரின்ப காதலில் சில சமயங்களில் ஏற்படும் பிரிவுணர்வு பேரின்ப காதலியாகிய ஆன்மாவை வருத்துகிறது. அவ்வேளைகளில் ஆன்மா பற்பல சிந்தனைகளில் ஆழ்ந்துவிடுகிறது. தனக்கு மட்டும் (தனி படர்) இறைவன் மீது காதல் உண்டு என்றும் இறைவனுக்கு தன் மீது எக்கவலையும் இல்லை என்றும் ஆன்மா நினைத்து வருந்துகிறது. அவ்வாறு வருந்தும் பல நிலைகளை இவ்வதிகாரம் காட்டுகிறது.

121. நினைந்தவர் புலம்பல் **(காதல் இன்பத்தை நினைத்து தனிமையில் வருந்துதல்)**

ஆரம்பத்தில் பேரின்ப காதலனாகிய இறைவன் காதலியாகிய ஆன்மாவுக்கு அளித்த இன்பத்தை ஊடல் நேரங்களில் அதாவது பிரிவிலும் அடைய விரும்புகிறது. பிரிவு நேரங்களில் இறைவனோடு ஒன்றுபட்டு வாழ்ந்து முன் அனுபவித்த இன்பத்தை பெற்றுக்கொள்ள இயலாததால் அவ்வின்பங்களை குறித்து தன் தனிமையில் சிந்தித்து புலம்புகிறதை இவ்வதிகாரத்தில் பார்க்கிறோம்.

122. கனவு நிலை உரைத்தல் **(கனவு நிலையில் உரைத்தல்)**

பேரின்ப காதலின் கனவு நிலைகளும் நனவு நிலைகளும் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன. பேரின்ப காதல் இவ்வுலக வாழ்கையில் ஆரம்பமாகி மரணத்துக்குப்பின் மறுமையில் நிறைவேறுவதாகும். இவ்வுலக வாழ்கையில் நனவு நிலையில் இருப்பது பேரின்ப காதலியாகிய ஆன்மாவும், கனவு நிலையில் இருப்பது பேரின்ப காதலனாகிய இறைவனும் ஆகும். எனவே இவ்வுலக வாழ்கையில் ஆன்மா இறைவனை காண்பதும் பேரின்பம் அடைவதும் கனவு நிலை ஆகும். மறுமையில் நடைபெற இருப்பது நனவு நிலை ஆகும். இவ்வுலக வாழ்கையின் போது ஒரு ஆன்மா பேரின்ப காதலரைக் குறித்தும், பேரின்பத்தை குறித்தும் சிந்தனை செய்வதைக் குறித்து இவ்வதிகாதம் விளக்குகிறது.

123. பொழுது கண்டு இரங்கல் (இருள் நிலையைக் கண்டு வருந்துதல்)

காதலனை பிரிந்த காதலி காதலரின் பிரிவின் போது மாலைபொழுதில் மனம் வருந்துகிறாள். பேரின்ப காதலை பொறுத்தமட்டில் இறையின்ப காதலனை ஏற்றுக்கொண்டு இறையின்பம் அனுபவித்து வரும்கால் இறைவனின் சிறு பிரிவு நேரிடும் வேளைகளில் காதலியாகிய ஆன்மா சொல்லுதற்கரிய துயர் அடைகிறது. இதுவரையில் காதலரோடு மகிழ்ந்து இருந்த மாலைப் பொழுது இப்போது ஆன்மாவுக்கு எவ்வித ஆறுதலும் துணையும் இன்றி தனிமை உணர்வில் அவதிப்படுத்துவதாக காணப்படுகிறது. அவ்விதமாய் மாலைப்பொழுதில் பேரின்ப காதலிக்கு ஏற்படும் எண்ணங்கள் இவ்வதிகாரத்தில் கூறப்படுகின்றன.

124. உறுப்பு நலன் அழிதல் (உடல் உறுப்புகள் உரு அழிதல்)

காதலர் பிரிவினால் காதல் நினைவு அதிகரிக்க அதிகரிக்க காதலியின் உடல் உறுப்புகள் மெலிந்து சீர்கெடும் நிலைகள் இவ்வதிகாரத்தில் கூறப்படுகின்றன. பேரின்ப காதலில் சபை அல்லது ஆன்மா ஆகிய காதலிக்கு ஊடல் நேரங்களில் ஏற்படும் துயரங்கள் இங்கு கூறப்படுகின்றன. இறைவனோடு பேரின்பத்தில் மட்டுமல்ல தன் வாழ்வில் நேரிடக் கூடிய இடுக்கண்கள், நோய்கள், துன்பங்கள் மற்றவர்களின் பழிச்சொற்கள் ஆகியவை அனுபவிக்க நேர்ந்து விடுகிறது.

125. நெஞ்சொடு கிளத்தல் (தன் நெஞ்சோடு சொல்லிக் கொள்ளுதல்)

காதலரின் பிரிவால் தன்னை தேற்றி கொள்ள இயலாத காதலி தன்பாரங்களை தன் நெஞ்சோடு சொல்லி கொள்ளுகிறாள். பேரின்ப காதலியாகிய ஆன்மா தன் காதலராகிய இறைவனின் இன்பத்தை பெற்றுக் கொள்ளாத நேரங்களில் தனக்கு உலகில் எவ்வித ஆறுதலும் கிடைக்கவில்லையே என்று எண்ணி என்ன செய்வது என்று அறியாமல் தனக்குள்ளேயே தன் நெஞ்சோடு பேசி கொள்ளும் துயரச்செய்திகளை இவ்வதிகாரம் விளக்குகிறது. ஆன்மா தன் நெஞ்சோடு பேசிக்கொள்ளும் செய்திகளிலிருந்து பேரின்ப காதலில் ஆன்மாவுக்கு இறைவனோடுள்ள அன்பின் ஆழத்தை கண்டுகொள்ளலாம். இம்மையில் ஆன்மா அனுபவிக்கும் இத்தகைய துன்பங்கள் மறுமையின் பேரின்பத்திற்கு கொண்டுசெல்வதாய் உள்ளன.

126. நிறை அழிதல் (அடக்க இயலாமல் வாய்விடுதல்)

அடக்க முடியாத காதல் மிகுதியால் காதலி நாணத்தையும் கடந்து பேசுவதை இவ்வதிகாரத்தில் பார்க்கிறோம்.

இறைவன் மீதுள்ள வேட்கையால் பேரின்ப காதலியாகிய ஆன்மா தன் மனதில் அடக்கி வைக்க வேண்டிய செய்திகளையும் தன்னை அறியாமல்

வெளியில் எடுத்துக் கூறி விடுகிறது. இறைவனோடு தான் கொண்டிருக்கும் பேரின்ப காதலை இவ்விதம் அன்பு கொண்டுள்ள மற்றவர்களும் அன்பு கொள்ளாத பிற மதஸ்தரும் அறிந்து கொள்ளும் வகையில் தன் நிலையை வெளிப்படுத்தி காட்டுவதை இவ்வதிகாரம் விளக்குகிறது.

127. அவர் வாயின் விதும்பல் **(காதலன் பக்கம் காதலி விரைந்து செல்லுதல்)**

காதலர் வரவை காத்துக் காத்து காதலி பெரும் துயரமுறுகிறாள். துயரத்தின் மிகுதியால் ஏக்கம் கொண்ட காதலி தன் காதலர் சொல்லிச் சென்ற வார்த்தைகளை பிடித்துக்கொண்டு அவர்பக்கமாய் விரைந்து செல்வதை இவ்வதிகாரம் காண்பிக்கிறது.

பேரின்ப காதலில் காதலனாகிய இறைமகன் இயேசு காதலியாகிய ஆன்மாவை (சபையை) சேர்த்துக்கொள்ள சீக்கிரமாய் வருவேன் என்று கூறிச்சென்றதையும் அந்த வார்த்தையை நம்பிக்கையோடு பிடித்துக்கொண்டு காதலியாகிய ஆன்மா விரைந்து செல்வதையும் இவ்வதிகாரத்தில் காணமுடிகிறது.

128. குறிப்பறிவுறுத்தல் **(காதல் குறிப்பை ஒருவருக்கொருவர் அறிவித்தல்)**

வெகு தொலைவில் இருப்பதாக எண்ணப்பட்டிருந்த பேரின்ப காதலனாகிய இறைவன் ஆன்மாவுக்கு தம்மை வெளிப்படுத்தும் போது ஆன்மாவாகிய காதலி பூரிப்படைகிறாள். இந்நிலையில் ஒருவர் காதல் குறிப்பை மற்றவர் அறிந்துக் கொள்ளும் நிலை இவ்வதிகாரம் விளக்குகிறது.

129. புணர்ச்சி விதும்பல் **(புணர்ச்சிக்காக முனைதல்)**

காதல் குறிப்பை உணர்ந்து கொண்ட காதலர்கள் மேலும் ஒன்றித்து வந்து கூடல் இன்பம் பெற முனைதல் இவ்வதிகாரத்தில் கூறப்படுகிறது. ஊடல் நேரங்களில் பேரின்ப காதலியாகிய ஆன்மாவுக்கு ஏற்பட்ட துயரங்கள் எல்லாம் மறந்து இறைவனோடு சேர்ந்து இன்பம் கொள்ளுவதற்கான முறைகள் இவ்வதிகாரத்தில் கூறப்படுகின்றன.

130. நெஞ்சோடு புலத்தல் **(ஆன்மா தன் நெஞ்சோடு தானே புலம்புதல்)**

பேரின்ப காதலியாகிய ஆன்மா பேரின்ப காதலருடைய பிரிவால் ஏக்கத்தின் மிகுதியால் அவரோடு சிறிது ஊடல் செய்ய வேண்டும் என்று அதற்கு முனைகிறது. ஆனால் ஆன்மாவின் உள்ளம் (நெஞ்சம்) அதற்கு அனுமதிப்பதில்லை. இறைவனில் குறைகள் காண்பதற்கோ, இறைவனின் செயல்பாடுகளில் பழி கூறுவதற்கோ ஆன்மாவின் நெஞ்சிற்கு இயலவில்லை. எனவே செய்வது அறியாமல் கலங்கி தன் நெஞ்சோடு பிணங்குதல் அல்லது புலம்புதலை இவ்வதிகாரத்தில் பார்க்கிறோம்.

131. புலவி (காதலில் நேரிடக்கூடிய பிணக்க செய்திகள்)

காதலர் ஒருவரை ஒருவர் பிரியும் நேரத்தில் காதலி பிரிவு துன்பத்தில் ஆழ்ந்து விடுகிறாள். பேரின்ப காதலியாகிய ஆன்மா காதலனாகிய இறைவனுக்காக ஏக்கம் கொண்டு இருக்கிறாள் காதலனோடு கூடி இன்புறுவதற்கான ஏக்கம் அவளை வருத்தவே சிறு பிணக்கத்தை குறித்து செய்திகளை வெளிப்படுத்துகிறாள். ஊடல் ஆகிய சிறு பிணக்கத்தை குறித்த செய்திகள் இவ்வதிகாரத்தில் விளக்கப்படுகின்றன.

132. புலவி நுணுக்கம் (காரணமின்றி காதலரிடம் பிணங்குதல்)

காதலி காதலரிடம் சிறு பிணக்கம் கொள்வதற்கான காரணங்கள் தேடிப் பார்த்தும் யாதொன்றும் கிடைக்காததால் தும்மினால் குற்றம், தும்மல் அடக்கி கொண்டால் குற்றம், அன்போடு நோக்கினால் குற்றம், மகிழ்விக்க முயன்றால் குற்றம், நேசிக்கிறேன் என்றால் குற்றம், உன்னை நினைத்தேன் என்றால் குற்றம், உன்னை பிரியேன் என்றால் குற்றம் இவ்வாறு காரணம் இல்லாத காரணங்களுக்காக ஊடல் செய்ய முயற்சிப்பதை இவ்வதிகாரம் கூறுகிறது. இதிலிருந்து இங்கு கூறப்படும் காதலர் குற்றமற்ற பேரின்ப காதலராகிய இறைவனே என்று கண்டுகொள்ளலாம்.

133. ஊடல் உவகை (ஊடலுக்குப்பின மகிழ்ச்சி)

கடைசி அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் குறட்பாக்களிலிருந்து அவர் கூறும் காதல் சிற்றின்ப காதல் அல்ல மாறாக பேரின்ப காதலையே குறிக்கும் என்பது விளங்குகிறது. இவ்வதிகாரத்தில் காதலர்களுக்கு இடையே காணப்படும் ஊடல் அல்லது பிணங்குதல் மற்றும் கூடல் அல்லது இணைதல் ஆகியவை பேரின்பக் காதலுக்கே உகந்ததாய் புலப்படுகிறது. வள்ளுவர் கூறும் காதலர் குறை ஏதும் இல்லாதவரே என்று இவ்வதிகாரத்தின் முதல் குறட்பாவில் பார்க்கிறோம். உலகின்ப காதலில் குறை அற்ற காதலர் ஒருவருமே இருக்கமுடியாது. தெய்வீக காதலில் காதலராகிய இறைவன் குறைஅற்றவரே ஆகும்.

இவ்வதிகாரத்தின் கடைசி குறட்பாவில் காதல் இன்பத்திற்கு மேலான ஓர் இன்பம் உண்டு என்றும் (அதற்கின்பம்) அதைவிட இன்பமான பேரின்பம் கூடி முயங்க பெறின் அதாவது இறைவனோடு கூடி முயங்க பெறுவோருக்கு மட்டுமே பெற முடியும் என்றும் கூறப்படுகிறது. உலகின்ப காதல் என்றால் காதலுக்குப்பின் காதலர் எல்லோரும் கூடி முயங்க இயலும். பெறின் (கூடி முயங்க பெறுவதானால்) என்ற வார்த்தைக்கு தேவை இல்லை. இன்பத்துப்பால் சிற்றின்பகாதலை அல்ல பேரின்பக் காதலையே விளக்குகிறது என்று சில உரையாசிரியர்கள் குறிப்பிட்டிருப்பது திட்டவட்டமாய் மெய்பிக்கபடுகிறது.

திருக்குறளின் ஆதியும் அந்தமும்

படைப்புக்குக் காரணர் யார்? (குறள். 1)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

கருத்துரை

அகரம் எழுத்துக்களுக்கெல்லாம் ஆதியாக இருப்பது போல உலகின் படைப்புகளுக்கெல்லாம் ஆதி காரணராய் இருப்பவர், கடவுள், வான், நீத்தார் என்று தம்மையே பகுத்து நிற்கும் ஆதிபகவன் ஆவார்.

விளக்கவுரை

ஆதிபகவன் என்பதில் கடவுள் ஆதியிலே இருந்தவர் என்ற கருத்து காணப்படுகிறது. பகவன் என்ற வார்த்தைக்குப் பகுத்து நிற்பவர் என்று பொருள். அதாவது கடவுள் தம்மைக் கடவுள், வான், நீத்தார் என மூவொரு கடவுளாகப் பகுத்து நிற்பவர்.

விவிலியம் ஆதியிலே தேவன் என்று ஆரம்பிக்கிறது. திருக்குறள் ஆதிபகவனைக் குறிப்பிடுகிறது. அதில் கடவுள் ஆதியானவர் என்ற கருத்தும் விளக்கப்படுகிறது. திருமறையில் கடவுளைத் திருத்துவக் கடவுள் என்று பார்க்கிறோம். அதாவது பிதாவாகிய கடவுள், பரிசுத்த ஆவியராகிய கடவுள், குமாரனாகிய கடவுள் என்ற திரியேக தேவன்.

'எழுத்து' என்பது திருமறையில் கூறப்படும் 'வார்த்தை' என்பதைச் சுட்டுகிறதாக அமைந்திருக்கிறது. "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாய் இருந்தது என்றும் அந்த வார்த்தை மாம்சமானது", அதாவது கடவுள் மனிதனா னார் என்கிறது விவிலியம். அதே கருத்தில் 28 - ஆவது குறட்பாவில் திருவள்ளுவர் 'நிறைமொழி மாந்தர்' (அதாவது வார்த்தை மாம்ச மானவர்) என்று கடவுளை அழைக்கிறதைக் காண்கிறோம்.

மேலான பேரின்பத்தை பெறுவது யார்? (குறள். 1330)

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

கருத்துரை

ஊடுதல் (பிணங்குதல்) காதலுக்கு இன்பம் தருவதாகும். அதைவிட மேலான இன்பம் ஒன்றுண்டு. அது கூடிமுயங்கத்தக்க தகுதி பெற்றவர்களுக்கு மட்டும் கிடைக்கதக்கதாகும்.

விளக்கஉரை

திருக்குறள் முழுவதும் உள்ள சாராம்சத்தின் கடைத் தொகையை திருவள்ளுவர் இந்த கடைசி குறட்பாவில் கொண்டு முடிக்கிறார் எனவே அதன் விளக்கத்தை சற்று விரிவாக கவனிப்பது உசிதமாயிருக்கும்.

ஊடல் காமத்திற்கின்பம்

இங்கு காமம் என்ற சொல் ஆசை அல்லது ஆர்வம் என்ற பொருளில் கொள்ளப்படுகிறது. இன்பத்துப்பால் முழுவதிலும் வரக்கூடிய காமம் என்ற சொல் அதிர்கடந்த காம லீலைகளை குறிப்பிடுவனவல்ல என்றும், கட்டுப்பாட்டிலான காதலை மட்டுமே, குறிக்கும் என்றும் முன்னால் கூறப்பட்டது. இது பேரின்பக்காதலையே குறிப்பிடுகின்றது.

ஊடல்

இன்பத்துப்பாலில் விளக்கும் பேரின்பக்காதலில் ஊடல் பல நிலைகளில் விளக்கப்படுகிறது. பேரின்பக் காதலராகிய இறைவனின் அருள் திட்டத்தில் அமைந்துள்ள இவ்வூடல் காதலுக்கு இன்பத்தை பெருகப்பண்ணுகிறதென்பது விளக்கப்படுகிறது.

அதற்கின்பம்:

அதாவது ஊடுதலால் (பிணங்குதலால்) வளர்க்கப்பட்ட காதல் இன்பத்துக்கு மேலான ஓர் இன்பம் உண்டென இங்கு

காட்டப்படுகிறது. அதுவே பேரின்பம். இந்த பேரின்பத்தை எல்லாரும் பெற்றுக்கொள்ள முடியாது என்று இரண்டாவது வரியில் இருந்து கண்டு கொள்ளலாம். பேரின்ப காதலராகிய இறைவனோடு "கூடிமுயங்கப்பெறின்" மட்டுமே அப்பேரின்பம் பெற்றுக்கொள்ள முடியும்.

இறைவனோடு "கூடிமுயங்கப்பெறுதல்" குறித்து திருக்குறளில்

சிற்றின்பம் விரும்பாதோர்:

> சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
> மற்றின்பம் வேண்டு பவர் (கு 173)

வள்ளுவர் இக்குறட்பாவில் இருவித இன்பங்களை காட்டுகின்றார். ஒன்று சிற்றின்பம். இது இம்மையில் அழிந்து விடக்கூடியதே. நிலையானது அல்ல. மற்றொன்று பேரின்பம் அது மறுமைக்குரியது மட்டுமல்ல நிலையானது கூட. ஒன்றை வேண்டுவோருக்கு மற்றது கிடைக்காது. சிற்றின்பத்தை விரும்பி அதை இச்சிக்கிறவர்கள் அறன் அல்லாத எந்த காரியங்களையும் செய்வார்கள். ஆனால் நிலையான பேரின்பத்தை விரும்பு கிறவர்கள் அறனல்லாதவற்றை செய்யமாட்டார்கள். இப்படிப் பட்டவர்கள் அறமாகிய இரட்சிப்பை ஏற்றுக் கொண்ட வர்களே. பேரின்ப காதலனாகிய இறைவனோடு கூடிமுயங்கும் சிலாக்கியத்தை இவர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

ஒழுக்க நெறியில் நடப்போர்:

> பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்றார் நீடுவாழ் வார் (கு 6)

பொறிவாயில் தம் ஐம்புலன்களையும் பலியாக்கி, சாத்தானுடைய பொய்யால் ஏற்பட்ட தீங்கை நீக்கி இறைவன் காட்டிய ஒழுக்க நெறியாகிய இரட்சிப்பின் பாதையில் செல்வோர். (கு 6 விளக்கம் காண்க)

இரண்டாம் பிறப்பு அடைந்தோர்

ஐந்தவித்தனாகிய இறைவனை ஏற்றுக் கொண்டு இரண்டாம் பிறப்பு அடைந்தோர். (கு 69 விளக்கம் காண்க)

வானாகிய தூய ஆவியை பெற்றுக் கொண்டோர்

இறைவனோடு கூடி முயங்கப் பெறுவது எளிதான ஒன்று அல்ல. அதற்காக இறைவனின் வான் அருளாகிய தூய ஆவியை பெற்றுக்கொண்டு, அவர் காட்டிய ஒழுக்கமாகிய இரட்சிப்பை இறுதிவரை காத்துக் கொள்ள வேண்டும். (கு 20 காண்க)

வாழ்வாங்கு வாழ்பவர்கள்

ஒரு இல்வாழ்வான், அதாவது குடும்பத்தலைவன் வாழ்வாங்கு வாழ்வானாகில், அதாவது மேற்கூறிய படி வாழவேண்டிய விதமாய் வாழ்வானாகில், பரலோக தேவனோடு பேரின்ப வீட்டில் வைக்கப்படுவான். (கு 50 காண்க)

இல்லாள்

அவ்வாறே குடும்ப தலைவியானவளும் செய்ய வேண்டியவைகளை செவ்வனே செய்து உகந்த வாழ்க்கைத் துணையாயிருப்பாளானால் பேரின்ப வீட்டில் வாழும் சிறப்படைவாள் (கு 58 காண்க)

வருகையை காத்திருக்கும் பேரின்பக்காதலி

பேரின்ப காதலர் திரும்பி வருவேனென்று வாக்குறுதி கூறிப் போயிருக்கிறார். அவர் வரும் வரை ஆவலோடும் ஆயத்தத்தோடும் காத்திருக்கும் காதலியை (ஆன்மாவை) அவர் சேர்த்துக் கொள்வார். (கு 1261, 1263 காண்க)

ஒழுக்கமுடையவர்கள்

இறைவனே பெற்றுத்தந்த ஒழுக்கமென்னும் இரட்சிப்பை பெற்றுக் கொண்டவர்கள் பேரின்ப வீட்டை அடைவார்கள். (கு 137 (a) காண்க)

இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளாதவர்களைக் குறித்து:

ஒழுக்க நெறி என்னும்இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எரி நரகத்தில் தள்ளப்படுவார்கள். (கு 137(b) காண்க)

அழுக்காறு

அழுக்காறு என்னும் பாவ வழியில் செல்பவர்கள் எரிநரகத்துக்கு தள்ளப்படுவார்கள். (கு 168 காண்க)

தங்களை விற்றுப் போடுகிறவர்கள்

உலக உல்லாசங்களுக்காக தங்களை பிசாசுக்கு விற்றுப் போடுகிறவர்கள் மறுமையில் இருளாகிய நரகத்தில் சென்றடைவார்கள். (கு 1080 காண்க)

மனுமக்கள் எல்லோரும் இரட்சிப்பை பெற்றுக் கொண்டு நித்திய பேரின்ப வீட்டை சென்றடைந்து இறைவனோடு இன்புற்று இருக்க வேண்டும் என்பதே திருவள்ளுவரின் நோக்கம்.

இறைவனோடு 'கூடி முயங்கப்பெறுல்' குறித்து விவிலியத்தில்:

இறைவனோடு ஒன்றாய் மகிழ்ந்திருப்பதற்காகவே மனுக்குலம் உருவாக்கப்பட்டது. தேவன் ஆதி பெற்றோரோடு ஏதேன் தோட்டத்தில் கூடி உலாவி கொண்டிருந்தார். ஆனால் சாத்தானின் சூழ்ச்சியால் ஆதி பெற்றோர் பாவம் செய்து நித்திய ஜீவனை இழந்து நித்திய மரணத்தை தழுவிக்கொண்டார்கள். எனவே இறைவனும் மனிதரும் ஒன்றாய் கூடி முயங்கப் பெறுதல் நின்று போயிற்று.

ஆனால் பாவ சேற்றில் மூழ்கி நித்திய மரணத்துக்குள்ளான மனுமக்களை தூக்கி எடுத்து, தமக்கு உகந்தவர்களாக மாற்றி அவர்களை மறுபடியும் தமது நித்திய வீட்டில் சேர்த்து அவர்களோடு கூடி முயங்குவதற்காக தேவன் சித்தம் கொண்டார். அதற்காகவே இறைவன் ஐந்தவித்தானாக இந்த பூமிக்கு வந்து மனுமக்களின் பாவத்தை தாமே ஏற்றுக் கொண்டு மரித்து தேவ மகிமையால் உயிர்தெழுந்து, நித்திய ஜீவன் பெற்றுத்தரும் இரட்சிப்பு என்னும் ஜீவ பாதையை காட்டி பரத்துக்கு ஏறிச்சென்றார்.

அவர் காட்டிச் சென்ற பாதை அறவழி என்று திருக்குறளில் கூறப்படுகிறது. ஐந்தவித்தானாகிய இறைமகன் இயேசு நானே வழி என்று கூறிச்சென்றார். இந்த சிலுவை பாதை பிரயாணத்திற்கு கடினம். ஆனால் அவர் நமக்கு உதவி செய்ய பரிசுத்த ஆவியை தந்திருக்கிறார். இயேசுவாகிய இரட்சிப்பின் வழியில் கடைசிமட்டும் நிலைத்திருக்கிறவர்கள் இவ்வுலக வாழ்க்கைக்கு பின் நித்திய ஜீவன் பெற்று நித்திய வீட்டில் இறைவனோடு சேர்ந்து பேரின்பம் பெற்று என்றென்றுமாய் மகிழ்ந்திருப்பார்கள். இது இறைவனோடு கூடி முயங்கப்பெறுதல் என்று திருக்குறளில் பார்க்கிறோம்.

இறைவன் அருளிய இரட்சிப்பு அல்லது பொய்தீர் ஒழுக்க நெறியாகிய அறம் இவ்வளவு முக்கியமானதாய் இருக்கிற படியால் விவிலியமும் அதுபோல் திருக்குறளும் அதைக்குறித்தே விளக்கிக் கூறுகின்றன. இந்த இரட்சிப்பைக் குறித்தும் இரட்சிக்கப்பட்டவர்கள் இறைவனோடு கூடி முயங்கப் பெறுதல் குறித்தும் விவிலியம் கூறும் சில வசனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

இரட்சிப்பு குறித்து

இரட்சிப்பு கர்த்தருடையது (சங் 3:8). அது கர்த்தரால் வரும் (சங் 37:39). தேவன் தன் குமாரனால் உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார் (யோ 3 :17). பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (I தீமோத் 1:15). அவராலே அன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை .(அப் 4:12). இயேசு தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத் 1:21). இரட்சிப்பு அடைவதற்கு விசுவாசம் தேவை.

விசுவாசத்தின் தேவை குறித்து

விசுவாசிக்கிறவனுக்கு இரட்சிப்பு உண்டு (ரோம 1:16). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப் 16:31). கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள் இது— தேவனுடைய ஈவு (எபே 2:8). இந்த இரட்சிப்பு எல்லா மனிதருக்கும் தேவை.

யாவருக்கும் தேவை என்பதை குறித்து

மாமிசமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பை காண்பார்கள் (லூக் 3:5). எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறியும் அறிவை அடையவும் அவர் சித்த முடையவராய் இருக்கிறார் (1 தீமோத் 2 : 4). நீதிமான் களையல்ல பாவிகளையே மனம் திரும்புதலுக்கு (இரட்சிப்புக்கு) அழைக்க வந்தேன் (லூக் 5:32).

திருச்சபையில் சேர்ப்பது கர்த்தர்

இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார் (அப் 2:47). இவ்வளவு பெரிதான இரட்சிப்பை குறித்து நாம் கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்புவித்துக் கொள்வோம் (எபி 2 : 4). இரட்சிப்புக்கு எதிராக பிசாசானவன் கிரியை செய்து மக்களை தடை செய்கிறான்.

பிசாசானவன் தடை செய்கிறான்

தேவ வசனம் கேட்கிறவர்கள் இரட்சிக்கப்படாதபடிக்கு பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான் (லூக் 8:12) பிசாசுக்கு இடம் கொடாமல் இரட்சிப்பை பெற்றுக் கொள்கிறவர்கள் நித்திய ஜீவன் பெற்று நித்திய வீட்டில் சென்றடைவார்கள்.

நித்திய வீட்டைக் குறித்து:

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு நித்திய ஜீவனை அளிக்கிறார் (யோவா 5:11). தேவபிள்ளைகளுக்கு, தேவனால் கட்டப்பட்ட கைவேலை இல்லாத நித்திய வீடு பரலோகத்தில் உண்டு (1 கொரி 5:1). இயேசு கூறியதாவது: என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கும் இடத்திலே நீங்களும் இருக்கும் படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் (யோவா 14:2,3).

இயேசுவின் வருகையை குறித்து

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது (இரட்சிக்கப்பட்டு) கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு (இரட்சிக்கப்பட்டு) உயிரோடிருக்கிற நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்களின் மேல் அவர்களோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். (1 தெச 4 : 16,17).

கூடி முயங்குதல் (பேரின்பம்) குறித்து

ஆட்டுக்குட்டியானவருடைய கல்லியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்..... சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. (வெளி 19:7)

மனுஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையை பற்றியும் சொல்லுகிறேன். (எபே 5:31,32)

நித்திய வீட்டில் மணவாட்டி சபையின் கூட்டம்

இதோ, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளை தரித்து, தங்கள் கைகளில் குருத் தோலைகளை பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்– இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் (வெளி 7:9-14)

ஒன்றித்தல்

இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்.

அவர்களும் அவருடைய ஜனங்களாய் இருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமும் இல்லை, துக்கமும் இல்லை, அலறுதலும் இல்லை, வருத்தமும் இல்லை. முந்தினவைகள் ஒழிந்துப் போயின......... சிங்காசனத்தில் வீற்றிருந்தவர்; இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். (வெளி 21:3,4)

இவை யாவும் இரட்சிக்கப்பட்டவர்கள் அடையும் சிலாக்கியங்கள் குறித்து ஆகும்.

இரட்சிக்கபடாதவர்களை குறித்து:

பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் நித்திய அக்கினி ஆயத்தம் பண்ணப்பட்டது (மத் 25:41) ஜனங்களை மோசம் போக்கின பிசாசும் மிருகமும் (அந்திக் கிறிஸ்து) கள்ள தீர்க்கதரிசியும் அங்கே தள்ளப்பட்டார்கள் (வெளி 20:10) ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்களும் (இரட்சிக்கப்படாதவர்கள்) அங்கே தள்ளப்படுவார்கள் (வெளி 20:15), பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி 21:8)

****

நூல் முழுவதிலும் அழுத்தமாய் கூறப்படும் அறமாகிய இரட்சிப்பை பெற்றுக்கொண்டு பொருளாகிய மனுக்குலம் இம்மையில் இன்பத்தையும் மறுமையில் இறைவனோடு கூடி முயங்கப்பெறுதலாகிய நித்திய பேரின்பத்தையும் பெற்று நித்திய வீட்டில் இறைவனோடு மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம் என்று திருக்குறள் விளக்குகிறது.

வள்ளுவர் கூறும் நற்செய்தி!

ஆதி. குறள் : 1

ஆதி பகவன் - இறைவனே படைப்புக்குக் காரணர்!

கடைநிலை. குறள் 1330

தகுதி பெற்றோர் நித்திய பேரின்ப வீட்டில்,
இறைவனோடு கூடி வாழ்தல்!

பாவிக்கு எச்சரிப்பு

1. ஓ...! பாவீ..., நீ... செல்லும் வழி...! நரக அக்கினிக்கு...! (கு. 168)
2. பாவத்துக்கு நாணி, மனம் திரும்பு!! (கு. 502)
3. அறவழி செல்!, நீயும் நித்திய வீடு சேர்வாய்! (கு. 6)

Gems, Gems Complex, Kallukatty, Kuzhithurai - 629 163
Kanyakumari District. Ph : 260404